**Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 110, Anna Salai, Chennai-600 002.**

©

**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.**

வெளியீடு :*24-4-2017* Issued :*24-4-2017*

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை
# நடவடிக்கைகள் செயலக வெளியீடு

**(பதினைந்தாவது பேரவை)**

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**(Fifteenth Assembly)**

**செவ்வாய்க்கிழமை, ஜனவரி 31, 2017—தொகுதி 18—எண் 2**

**Tuesday, the 31st January 2017—Volume 18—No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009.**

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

## 31–1–2017

## உள்ளடக்கம்

பக்கங்கள்


**1. வினாக்கள்–விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் 169-212

**2. விதி 110–ன்கீழ் அறிக்கை—**

ஜல்லிக்கட்டு தடையை நீக்கக் கோரும் போராட்டத்தின்போது சேதமடைந்த நடுக்குப்பம் மீன் சந்தையைச் சீரமைத்தல், போராட்டத்திற்கு காரணமாக இருந்தவர்கள்மீது நடவடிக்கை எடுத்தல், உயர் நீதிமன்ற நீதியரசர் தலைமையில் விசாரணைக் கமிஷன் அமைத்தல்- முதலமைச்சரின் அறிக்கை 213-316

**3. தகவல் கோரல்—**

(அ) காட்பாடி தொகுதி, நெல்லிக்குப்பம் சிப்காட் தொழிற்பேட்டையில் உள்ள Gujarat Enviro Protection & Infrastructure Limited நிறுவனத்தில் ஏற்பட்ட தீ விபத்து 217-220

திரு. துரைமுருகன் 217

*மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார் 218-219

மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன் 219-220

(ஆ) திருக்கோவிலூர் தொகுதி, சின்னசெவலை, செங்கல்வராயன் சர்க்கரை ஆலை, கரும்பு அரவை தொடங்குதல், விவசாயிகளுக்கு நிலுவைத் தொகை வழங்குதல் 220-221

*முனைவர் க. பொன்முடி 220

*மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் 221

பக்கங்கள்

(இ) எண்ணூர் காமராசர் துறைமுகம், கப்பலிருந்து கசிந்த எண்ணெய் கடலில் கலந்ததால் ஏற்பட்ட பாதிப்பு — 221-228

திரு. கே.பி.பி. சாமி — 221

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் — 222-228

திரு. மு.க. ஸ்டாலின் — 223, 225-226

**4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—**

(அ) தமிழ்நாடு மருத்துவ அறிவியல் இளநிலை மற்றும் பல் மருத்துவ இளநிலை படிப்புகள் சேர்க்கைக்கான சட்டமுன்வடிவு, 2017 — 228-229

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர் — 228-229

(ஆ) தமிழ்நாடு மருத்துவம் மற்றும் பல் மருத்துவத்தில் முதுநிலைப் பட்டப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டமுன்வடிவு, 2017 — 229-230

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர் — 229-230

(இ) தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைத் (ஒழுங்குமுறைப்படுத்தும்) திருத்த சட்டமுன்வடிவு, 2017

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு — 230-231

(ஈ) தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2017

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில் — 231-232

(உ) தமிழ்நாடு பிழைப்பூதியம் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2017 — 232

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில் — 232



பக்கங்கள்

**5. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்**—தொடர்ச்சி — 233-339

*திரு. ஆர். நடராஜ் — 233-246

*திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் — 246-264

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் — 248-251, 301-303, 306, 310-311

*மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி — 252-254, 303,334

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — 256, 261-262, 264,281,287,292, 300-301, 303-307,316, 318,325-327

*மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு — 257

மாண்புமிகு திரு. துரைக்கண்ணு — 258-259,282

மாண்புமிகு திரு. பி. தங்கமணி — 260,289-290, 322-325, 329-332

*மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் — 260-261

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி — 265,293-294, 335-336

திரு. ஐ.எஸ். இன்பதுரை — 266-272

திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார் — 272-280

திரு. கரி. இராமசாமி — 280-283, 285-293

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன் — 281,337,338

| | பக்கங்கள் |
|---|---|
| *மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு | *283-285* |
| மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர் | *288-289,337* |
| திரு. மு.க. ஸ்டாலின் | *294-298, 306,314,315, 317-322,326, 328-329, 332-333* |
| *மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் | *299,336-337* |
| *மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன் | *299-300* |
| திரு. துரைமுருகன் | *305,309* |
| **6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | *339* |


*****

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## துன்முகி, தை 18, திருவள்ளுவர் ஆண்டு–2048

## 2017 ஜனவரி 31, செவ்வாய்க்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*“ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு*
*எழுமையும் ஏமாப்பு உடைத்து.”*

ஒருவர் ஒரு பிறவியில் கற்ற கல்வியால் கிடைக்கும் சிறப்புகள் அந்தப் பிறவிக்கு மட்டுமல்லாமல் எழுகின்ற பல பிறவிகளுக்கும் தொடர்ந்து வரும்.

## 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 21, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

21—

### உயரழுத்த மின்பாதை

***813—திரு. எஸ். சுதர்சனம்:**

*மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பெருநகர சென்னை மாநகராட்சி, 16-வது வட்டத்தில் வயல்வெளி வழியாகச் செல்லும் உயரழுத்த மின்பாதையை ஆண்டார்குப்பம்-விளாங்காடுபாக்கம் சாலையில் மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?*

[2017 ஜனவரி 31

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 16-வது வட்டம், ஆண்டார்குப்பத்தில் தனியாருக்குச் சொந்தமான பட்டா நிலங்களில் வயல் வழியாகச் செல்லும் உயரழுத்த மின் பாதையை மாற்றியமைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கின்றார்கள். நுகர்வோர் அதற்குண்டான தொகையைக் கட்டும்பட்சத்தில், அதை மாற்றியமைப்பதற்குண்டான நடவடிக்கை அரசால் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம் அவர்கள்.

**திரு. எஸ். சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மாதவரம் தொகுதிக்குட்பட்ட சென்னை மாநகராட்சி, 16-வது வட்டத்திலே ஆண்டார்குப்பம், கடப்பாக்கம், காமராஜபுரம், கன்னியம்மன்பேட்டை ஆகிய ஊர்களில் உயரழுத்த மின் கம்பிகள் செல்வதால் பல வருடங்களாக அந்தப் பகுதியிலே வாழும் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். பலமுறை இதற்காக மனுக்கள் கொடுத்தும் கவனிக்கப்படவில்லை. அதேபோன்று, திருவள்ளூர் மாவட்டம், வில்லிவாக்கம் ஒன்றியம், வெள்ளானூர் ஊராட்சியிலும் தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கின்ற 7 தெருக்களில் இதுபோன்ற உயரழுத்த மின் கம்பிகள் செல்வதனால் 2 பேர் இதுவரை உயிரிழந்திருக்கிறார்கள். மாவட்ட ஆட்சியரிடம் இதற்காக மனு கொடுத்தவுடன், ‘பணம் கட்ட வேண்டுமென்ற நிலை தேவையில்லை; நாங்களே அதற்காக ஏதாவது ஒரு நிதியிலிருந்து ஒதுக்கித் தருகிறோம்’ என்று வாக்குறுதி கொடுத்திருக்கின்றார்கள். ஆகவே, இந்த 2 இடங்களிலும், வயல் வெளிகளிலும், வீடுகளுக்கு மேலேயும் செல்லும் உயரழுத்த மின்கம்பிகளை நம்முடைய அமைச்சர் அவர்கள் மாற்றித் தருவார்களா என தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.



2017 ஜனவரி 31]

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முதலில் கேட்ட கேள்வி, புது மணலி, 33/11 கே.வி-யிலிருந்து 11 feeder வழியாக ஆண்டார்குப்பத்திற்கு மின்பாதை செல்கின்றது; பல ஆண்டுகாலமாக இந்தப் பிரச்சினை இருக்கின்றது; நாங்கள் மனு கொடுத்தோம் என்று சொல்லியிருக்கின்றார். அது தவறான தகவல். 2015 மார்ச் மாதத்தில்தான் அங்கே புதியதாக மின் கம்பங்கள் நடப்பட்டு, மின்பாதை அமைக்கப்பட்டது. இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் புதிதாக ஆதி திராவிடர் காலனியில் உள்ள ஒரு பகுதியிலே இதேபோன்று உயரழுத்த மின் பாதை செல்கின்றது என்று சொல்கின்றார். அதுமட்டுமல்லாமல், அதனால் 2 பேர் இறந்துவிட்டார்கள் என்றும் சொன்னார். மின் கம்பி மேலே செல்கின்றது. கீழே இருப்பவர்களுக்கு எப்படி அது நடந்திருக்கும் என்று தெரியவில்லை. ஏதாவது விபத்தினால் அது நடந்திருக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாவட்ட ஆட்சியரிடத்திலே மனு கொடுத்தபோது, மாவட்ட ஆட்சியர் அவருடைய விருப்ப நிதியிலேயிருந்து மாற்றியமைத்துத் தருவதாகச் சொல்லியிருக்கின்றார்கள் என்று சொன்னார்கள். இந்தக் கோரிக்கையெல்லாம் அரசின் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால், ஆண்டார்குப்பம் பகுதியைப் பொறுத்தவரை, 4 கிலோ மீட்டர் தூரத்திற்கு மின்பாதை சென்று கொண்டிருக்கின்றது. அதை மாற்றியமைத்து, நீங்கள் சொல்கின்ற அந்தச் சாலை வழியாகப் போடுகின்றபோது 1½ கிலோ மீட்டர் தூரம் கூடுதலாக வருகின்றது. அதற்கு கிட்டத்தட்ட 15 இலட்சம் ரூபாய் நிதி தேவைப்படுகின்றது. அந்த வயலுக்குச் சொந்தமான பட்டாதாரர் இதை ஏற்றுக்கொள்வாரானால் உடனடியாக மாற்றித் தருவதற்கு ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம் அவர்கள்.

**திரு. எஸ். சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய, தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கின்ற அந்தப் பகுதியிலே ½ ஏக்கர், 1 ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்யக்கூடியவர்கள், அந்த அளவுக்கு பெரிய தொகையைக் கட்ட

[2017 ஜனவரி 31

முடியாத நிலையிலே இருக்கின்றார்கள். ஆகவே, அரசாங்கமே அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் மாதவரம் பகுதி, விஸ்தரிக்கப்பட்ட மாநகராட்சிப் பகுதியாகும். அங்கே இன்னமும் overhead wires அதாவது தலைக்கு மேலே செல்லக்கூடிய மின் கம்பிகளெல்லாம் மாற்றப்படாமல் இருக்கின்றன. 'வர்தா' புயலினால் மின் கம்பிகள் மிகவும் பாதிக்கப்பட்டு, மின்சாரம் வருவதற்கு ஏறக்குறைய ஒரு வார காலம் ஆகிவிட்டது. ஆகவே, அவற்றையெல்லாம் underground cables—ஆக மாற்றி, சென்னை மாநகராட்சியில் மற்ற பகுதிகளிலே இருப்பது போன்று, மாதவரம் தொகுதிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் செய்து தருவாரா என தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் வாயிலாக அதைச் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். விதிமுறைகள் அவ்வாறு இல்லை. ஒரு தனியார் பட்டா நிலத்தில் மின் கம்பிகள் செல்கின்றபோது—ஏற்கெனவே அந்தப் பாதை அமைக்கப்பட்டு, ஓராண்டு காலம்கூட ஆகவில்லை—அப்பொழுதே இதுகுறித்து சொல்லியிருந்தாரென்று சொன்னால், அந்தச் சாலை வழியாக அமைத்திருப்பார்கள். இப்பொழுது பாதை போட்டதற்குப் பின்னால், அதை மாற்றியமைக்க வேண்டுமென்று சொன்னால், நுகர்வோர் அதற்குண்டான செலவை ஏற்றுக்கொண்டால் மட்டும்தான் அதைச் செய்யமுடியும் என்பது மின்சார வாரியத்தினுடைய விதிமுறையாக இருக்கிறது. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை கவனத்தில் எடுத்துக்கொள்கின்றோம். அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் underground cable-ஐப் பற்றிச் சொன்னார்கள். சென்னை மாநகராட்சி முழுவதும் underground cable போடவேண்டுமென்று சொன்னால், கிட்டத்தட்ட, ரூ.14,000 கோடி அளவிற்கு, அதாவது, ரூ.13,791 கோடி அளவிற்கு நிதி தேவையாக இருக்கின்றது. அந்தளவிற்கு நிதி இல்லை. வருகின்ற நிதியாண்டில் மின்சார



2017 ஜனவரி 31]

வாரியத்திற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்படுகின்றதோ, அதற்கேற்றாற்போல, முன்னுரிமை அடிப்படையில், எங்கெங்கு பாதிப்புகள் இருக்கின்றதோ, அங்கெல்லாம் underground cable போடப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, L.T. எனப்படுகின்ற குறைந்த மின்னழுத்தம் கொண்ட கம்பிகள் அதேபோல், H.T. என்று சொல்லப்படுகின்ற உயர் மின்னழுத்தம் கொண்ட கம்பிகளை புதைவடக் கம்பிகளாக மாற்றித் தரவேண்டுமென்பது விஸ்தரிக்கப்பட்ட தொகுதிகளில் ஆங்காங்கு கோரிக்கையாக வைக்கப்பட்டு வருகின்றது. குறிப்பாக, சென்னை மாவட்டத்தைப் பொறுத்தளவில், 155 வட்டங்களாக இருந்தது, தற்போது 200 வட்டங்களாக அதிகரிக்கப்பட்டபிறகு, புறநகர் பகுதிகள் அதிக எண்ணிக்கையில் மாநகராட்சியோடு இணைந்துள்ளன. அதனால், இதை ஒரு சிறப்புத் திட்டமாகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்டு, அனைத்து பகுதிகளுக்கும் விபத்துகள் ஏற்படாவண்ணம், சீரான, தடையில்லா மின்சாரம் வழங்குவதற்கு எல்லா H.T. மற்றும் L.T. உயரழுத்த மின் கேபிள்களையும் புதைவடக் கம்பிகளாக மாற்றித் தருவதற்கு அரசு முன்வருமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் புதைவட மின் கேபிள்களாக அமைக்க வேண்டும் என்ற அதே கோரிக்கையைத்தான் முன்வைத்தார்கள். Overhead cable அமைக்க ஆகும் செலவு ஒரு மடங்கு என்று சொன்னால், underground cable அமைக்க ஆகும் செலவு கிட்டத்தட்ட பத்து மடங்கு ஆகும். நான் ஏற்கெனவே சொன்னதுபோல, இதற்காக மட்டும் சென்னை மாநகராட்சிக்கு தேவைப்படுகின்ற நிதி ரூ.13,791 கோடி ஆகும். எல்லோருடைய கோரிக்கையும் அதுதான். அது நியாயமான கோரிக்கைதான். நாங்கள் இல்லையென்று

[2017 ஜனவரி 31

சொல்லவில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாண்புமிகு பிரதமர் அவர்களைச் சந்தித்தபோதுகூட, சென்னை மாநகரத்தில் அவ்வப்போது ஏற்படும் புயல், வெள்ளம் போன்ற நிகழ்வுகளினால், மின் விநியோகம் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டுமென்பதற்காக மத்திய அரசிடமிருந்து நிதி கேட்டிருக்கின்றார்கள். வருகின்ற நிதியாண்டில் மத்திய அரசிடமிருந்து எந்தளவிற்கு நிதி கிடைக்கின்றதோ, அதற்கேற்ப அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.

**திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல, தூத்துக்குடி மாநகராட்சியோடு புதிதாக இணைக்கப்பட்ட புறநகர் பகுதியான ராஜீவ் நகர் 9-வது தெருவில், 10 வீடுகளின் மாடியில் உயர் மின்னழுத்த ஒயர் போகின்றது. ஏற்கெனவே அந்தப் பகுதியில் மொட்டை மாடியில் இருந்தபோது இரண்டு சிறுவர்கள் இறந்துபோய்விட்டார்கள். அதை மாற்றச் சொல்லும்போது, மின் வாரியம் நான்கரை இலட்சம் ரூபாய் பணம் கட்டவேண்டுமென்று மதிப்பீடு தயாரித்துள்ளது. ஆனால், அந்தப் பகுதியிலுள்ளவர்கள் அனைவரும் நடுத்தர வகுப்பைச் சார்ந்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் குடியிருப்புக்கு வருவதற்கு முன்னரே இந்த மின் கம்பிகள் போடப்பட்டன. ஆகவே, அதை மாற்றுவதற்கு மாநகராட்சி பொது நிதியிலிருந்தாவது அந்தப் பணத்தைக் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்தால், அப்பகுதி மக்களுக்கு மிகவும் நன்மை பயக்கும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டபடி, தூத்துக்குடி மாநகராட்சி, 15-வது வார்டில் இதுபோன்றதொரு பிரச்சினை இருந்தது. பொதுமக்கள் புகார் கொடுத்தார்கள். உடனடியாக, மின் வாரியத்தினுடைய செலவிலேயே



2017 ஜனவரி 31]

மாற்றியமைக்கப்பட்டது. 'மின் கம்பிகள் தொடுகின்ற உயரத்திலே இருந்த காரணத்தினால், பாதுகாப்பில்லாமல் இருக்கின்றன. எனவே, அவற்றை உடனடியாக மாற்றித் தரவேண்டும்' என்று கேட்டார்கள். அதை மாற்றித் தந்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே அமைச்சராக இருந்தவர், அவருக்கு நன்றாகத் தெரியும். அரசினுடைய விதிமுறைக்குட்பட்டுதான் நாம் செயல்பட முடியும். வீட்டின்மேல் மின் கம்பிகள் செல்வது ஆபத்தான ஒன்றுதான். இருந்தாலும், கார்ப்பரேஷன் நிதியிலிருந்து செய்வதற்கு நான்கரை இலட்சம் ரூபாய்தான் செலவாகும் என்று சொல்லியிருக்கின்றீர்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, இதுபோன்ற பகுதிகளில் இருக்கும் மின் கம்பிகளையெல்லாம் ஆய்வு செய்து, அதுகுறித்து பரிசீலித்து, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 22, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ராஜா, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**22—**

## புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***5202—திரு. சி. ராஜா:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, சங்கரி மற்றும் எடங்கணசாலை ஆகிய பேரூராட்சிகளுக்கு புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மறைந்த பின்னர் வினாக்கள்-விடைகள் நேரத்தில் உறுப்பினர்களுக்கு விடையளிப்பதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2017 ஜனவரி 31

*முற்பகல் 10-10*

*இமயத்து உச்சமென தமிழகத்திற்கு ஏற்றம் தந்தவர், ஏழையெளியோர் வாழ்வில் எண்ணிடவே முடியாத மாற்றம் தந்தவர், தமிழினப் பகைவர்மேல் புலியென சீற்றம் கொண்டவர், மறைந்தும், மறையாமலும் நம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உறங்கும் திசையை நோக்கி எனது முதல் வணக்கத்தை காணிக்கையாக்குகிறேன். சிந்தனைக்கும், செயலுக்கும் சிறிதும் இடைவெளியின்றி, நினைத்ததை நினைத்தபடி மக்கள் நலன்களுக்கான திட்டங்களை மக்களுக்குத் தந்த மகத்தான தலைவர் மாண்புமிகு அம்மா அவர்கள். ஆயிரம் இதழ்கள் கொண்ட அழகுத் தாமரையின் இதழ்கள் விரிந்து மணப்பதுபோல், அம்மா அவர்களின் அளப்பரிய திட்டங்களால் அம்மா அவர்களுடைய புகழ் இன்றும் உலகளாவி மணந்து கொண்டிருக்கிறது. அம்மா அவர்கள் மறைந்துவிட்டார்கள், நம்மைவிட்டுப் பிரிந்துவிட்டார்கள் என்று எண்ணும்போது இதயம் கனக்கிறது; நெஞ்சம் விம்முகிறது; கண்களில் நீர் முட்டுகிறது. ஆனால், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நமக்குள்ளே தெய்வமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்; அவர்தான் நம்மை வழிநடத்துகின்றார்கள் என்று எண்ணும்போது இதயத்தில் நம்பிக்கை பிறக்கிறது. 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என தமிழகமே தன் உணர்வாய், தமிழ்நாட்டின் முன்னேற்றமே தன் இலட்சியமாய் தவ வாழ்வு வாழ்ந்து, தமிழக மக்களின் நல் வாழ்வுக்காக தன் இன்னுயிரை அர்ப்பணித்த கருணைத் தாய் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அவர்கள் காட்டிய அற வழியில் என்றென்றும் நடப்போம் என்று உறுதியிட்டுக் கூறுகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களோடு 33 ஆண்டுகளாக உடனிருந்து, தன் வாழ்க்கையையே தியாகம் செய்து, அம்மா அவர்களுக்காக வாழ்ந்த, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பேரியக்கத்தின் பொதுச் செயலாளர் சின்னம்மா அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், சங்கரி தொகுதியிலுள்ள சங்கரி மற்றும் எடங்கணசாலை பேரூராட்சிகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் நெறிமுறைகளின்படி,*



2017 ஜனவரி 31]

*நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், இப்பேரூராட்சிகளுக்கு புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் தற்போது எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ராஜா அவர்கள்.*

**திரு. சி. ராஜா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான் மக்களுக்காகவே நான்' என்று வாழ்ந்து சரித்திரம் படைத்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும், எங்களையெல்லாம் வழிநடத்திச் செல்லும் கழகத்தின் நிரந்தர பொதுச் செயலாளர், பெருமைக்குரிய சின்னம்மா அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*சங்கரி சட்டமன்றத் தொகுதியில் உள்ள சங்கரி, எடங்கணசாலை மற்றும் தாரமங்கலம் பேரூராட்சி பகுதிகள், மக்கள் குடியிருப்புகள் அதிகம் உள்ள பகுதிகளாகும். தற்போதுள்ள குடிநீர்த் திட்டம் சுமார் 13, 14 ஆண்டுகளுக்குமுன் அமைக்கப்பட்டது. அப்போது இருந்த குடியிருப்புகளைவிட தற்போது பல மடங்கு குடியிருப்புப் பகுதிகள் அதிகமாகப் பெருகியுள்ளதால், மக்களுக்கு போதுமான அளவு பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்கவில்லை. இப்பகுதிக்கு புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்த மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆவன செய்யுமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரி சட்டமன்றத் தொகுதியிலுள்ள சங்கரி பேரூராட்சி, தேவூர் பேரூராட்சி மற்றும் சங்கரி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 245 வழியோர குடியிருப்புகளுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி*

அம்மா அவர்களின் ஆட்சியில், 2002 ஆம் ஆண்டில் மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது. இத்திட்டத்தின்மூலம் சங்கரி பேரூராட்சியில் வாழும் மக்களுக்கு, நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்படுகிறது. இருப்பாளியில் ஃபுளோரைடால் பாதிக்கப்பட்ட 236 குடியிருப்புகள் மற்றும் 1,066 வழியோர குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், 2002 ஆம் ஆண்டில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது. இத்திட்டத்தின்மூலம், எடங்கணசாலை பேரூராட்சியில் வாழும் மக்களுக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 64 லிட்டர் குடிநீர் வீதமும் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின்மூலம் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 6 லிட்டர் குடிநீர் வீதமும் வழங்கப்படுகிறது. ஆக மொத்தம் 70 லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது. சங்கரி மற்றும் எடங்கணசாலை பேரூராட்சியில் வாழும் மக்களுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் விதிமுறைகளின்படி, நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், இப்பேரூராட்சியில் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் தற்போது எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, அங்கு அவசியம் இருப்பின், துறை அதிகாரிகளைக்கொண்டு ஆய்வு செய்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ராஜா அவர்கள்.

**திரு. சி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற சங்கரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் 2002 ஆம் ஆண்டும், இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டம் 2003 ஆம் ஆண்டும் செயல்பாட்டிற்கு வந்தது. இந்தத் திட்டத்தில் உள்ள பம்புசெட் மோட்டார்கள் 13, 14 ஆண்டுகளுக்குமுன் பொருத்தப்பட்டன. இந்த பம்புசெட் மோட்டார்கள் பழமையானதால் உந்தும் சக்தி குறைந்துள்ளது. எனவே, இந்தத்



திட்டத்திற்கு பராமரிப்பு நிதி ஒதுக்கி, பழைய பம்புசெட் மோட்டார்களுக்குப் பதிலாக, புதிய பம்புசெட் மோட்டார்களைப் பொருத்தினால் இத்திட்டம் சிறப்பாகச் செயல்படும். அதன்மூலம் மக்களுக்கு போதுமான, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கலாம். இதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆவன செய்யுமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன் பேசும்போதே இதுகுறித்து பதில் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையிலே கூட்டம் கூட்டப்பட்டு, தேவையான நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. தேவையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதால், மாண்புமிகு உறுப்பினருடைய மாவட்டமாக இருந்தாலும், எந்த தொகுதியாக இருந்தாலும், borewell பழுதானாலும் சரி, motor பழுதானாலும் சரி, pipe line damage ஆனாலும் சரி, கண்டிப்பாக உடனடியாக சரிசெய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் இருக்கும் மோட்டார் உடனடியாக பழுதுபார்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழ்நாட்டிலே குடிநீர்ப் பிரச்சினை கடுமையாக நிலவிவருகிறது. திண்டுக்கல் மாவட்டம் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அறிவார்கள். ஏற்கெனவே நீர் ஆதாரமாக இருக்கின்ற அத்தனை அணைகளும் வறண்டுவிட்டன. மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் நடத்திய ஆய்வுக் கூட்டத்தில்கூட, 75 சதவிகிதம் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், 100 சதவீதம் வறட்சியால்

[2017 ஜனவரி 31

திண்டுக்கல் மாவட்டம் பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே, ஏற்கெனவே நடைமுறையில் உள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டத்தையும், இப்பொழுது செயல்படுத்த இருக்கின்ற கூட்டுக் குடிநீர்த் திட்டத்தையும் விரைந்து முடிக்க சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும். மாவட்ட நிருவாகமும், குடிநீர் வடிகால் வாரியத் துறை அதிகாரிகளும் எவ்வளவு நிதி கேட்டாலும், அதற்கான நிதியை ஒதுக்கி, திண்டுக்கல் மாவட்ட மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சி கொறடா அவர்களுக்கு நன்றாகத் தெரியும், அந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய பிரச்சினையை மாண்புமிகு அம்மாவினுடைய அரசு நன்கு அறிந்திருக்கிறது. மட்டும் ஆய்வுக் கூட்டத்தில்கூட, திண்டுக்கல் மாவட்டத்தைப் பற்றி மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களும் தனியாக குறிப்பிட்டுள்ளார். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுள்ளதுபோல, திண்டுக்கல் மாவட்டத்திற்கு மட்டுமின்றி, அனைத்து மாவட்டங்களுடைய குடிநீர்ப் பிரச்சினைகளையும் தீர்க்க, போர்க்கால அடிப்படையிலே, மாண்புமிகு அம்மாவின் அரசு நடவடிக்கை எடுக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கும் தேவையான நிதி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 23, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி, மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) அதெல்லாம் பதிவாகாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லா தொகுதிகளுக்கும் பார்க்கிறேன் என்று அமைச்சர் சொல்லியிருக்கிறார். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)



2017 ஜனவரி 31]

**23—**

## நெல் கொள்முதல் நிலையக் கட்டடம்

***4838—திரு. பி.வி. பாரதி:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை நெஞ்சில் நிறுத்தி அஞ்சலி செலுத்தி (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள். மாண்புமிகு அமைச்சர் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** தியாகத் தலைவி சின்னம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியில் 2016 ஆம் ஆண்டில் செம்மங்குடி மற்றும் அரசூர் ஆகிய இடங்களில் தலா 30 இலட்சம் ரூபாய் செலவில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இது தவிர கடவாசல், திருச்சங்காட்டாங்குடி, நெம்மேலி மற்றும் கொண்டத்தூர் ஆகிய நான்கு இடங்களில் மொத்தம் 1 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் நெல் கொள்முதல் நிலையங்களுக்கு கட்டடம் கட்டும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2017 ஜனவரி 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி அவர்கள்.

**திரு. பி.வி. பாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன். எங்களை இந்த மாமன்றத்திலே பேசுவதற்கு நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்திய தலைவர், "மக்களால் நான், மக்களுக்காக நான்" என்று வாழ்ந்து மறைந்திட்ட, எங்களுடைய தலைவர், இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாபெரும் மக்கள் இயக்கமாம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றிருக்கின்ற எங்களுடைய மதிப்பிற்குரிய சின்னம்மா அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எங்களுடைய சீர்காழி தொகுதியிலே மொத்தம் 46 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில், 10 நெல் கொள்முதல் நிலையங்கள்தான் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, இரண்டு இடங்களிலே கொள்முதல் நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், என்னுடைய தொகுதி கடற்கரை சார்ந்த தொகுதியாக இருப்பதால், வடகிழக்குப் பருவமழை, அப்போது ஏற்படுகின்ற காற்று, புயல் இவற்றால் விவசாயிகள் தங்களுடைய நெல்லைக் கொண்டுவந்து பாதுகாப்பாக வைப்பதற்கு உரிய வசதி இல்லை என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். மீதமுள்ள ஏறத்தாழ 30 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கும் மிக விரைவில் நிரந்தரக் கட்டடம் கட்டிக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் ஏகபோக கொள்முதல் திட்டம்



2017 ஜனவரி 31]

(Monopoly procurement scheme), இணை கொள்முதல் திட்டம் (Parallel procurement scheme), லெவி கொள்முதல் திட்டம் (Levy procurement scheme) ஆகியவை நடைமுறையில் இருந்ததை மாற்றியவர் தமிழகத்தின் தன்னிகரில்லா முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். 2002 ஆம் ஆண்டு, இன்றைக்கு செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்திற்கு மத்திய அரசோடு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து, விவசாயிகளுடைய கவலையைத் தீர்த்து, விவசாயிகளுக்கு உரிய விலையை கிடைக்கச் செய்த தலைவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதனை இந்த நேரத்தில் இந்த அவைக்கு பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடுமட்டுமல்லாமல், நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறப்பதிலும், அவற்றுக்கு கட்டடங்கள் கட்டிக் கொடுப்பதிலும் முன்னோடியாகத் திகழ்ந்தவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தமிழ்நாடு முழுவதும் 343 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. தற்பொழுது 31 கோடியே 45 இலட்சம் ரூபாய் செலவில் 106 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

அதேபோல, நாகப்பட்டினம் மாவட்டத்தில் மட்டும் தற்பொழுது 84 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. மேலும், டெல்டா மாவட்டங்களில் 54 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கான கட்டடங்கள் 17 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு வருகின்றன என்பதனையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய சீர்காழி சட்டமன்றத் தொகுதியில் 46 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் இயங்கி வருவதாகவும், அவற்றில் 10 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு மட்டும்தான் நிரந்தரக் கட்டடங்கள் இருப்பதாகவும், மற்றவற்றுக்கு உடனடியாக நிரந்தரக் கட்டடங்கள் கட்டித் தர வேண்டுமென்றும் இங்கே கோரிக்கை வைத்தார்கள். எங்கெல்லாம் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு நிரந்தரக்

[2017 ஜனவரி 31

*கட்டடங்கள் தேவைப்படுகின்றனவோ அங்கெல்லாம் உடனடியாகக் கட்டிக் கொடுக்க வேண்டுமென உத்தரவிட்ட தலைவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில், எந்த இடத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு நிரந்தரக் கட்டடம் தேவையென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணுகிறாரோ, அந்த இடத்தில் கட்டடம் கட்ட வேண்டுமானால் 33 சென்ட் நிலம் தேவைப்படுகிறது. அதனை, விவசாயிகள் தானாக முன்வந்து கொடுக்கிறபொழுது, அங்குள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் உடனடியாகக் கட்டிக் கொடுக்கப்படும் என்பதையும், அப்படி இல்லையென்று சொன்னால், வகைப்படுத்தப்பட்ட அரசு புறம்போக்கு நிலங்களில் கட்டடம் கட்டுவதற்கு ஏற்புடைய இடத்தை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அடையாளம் காட்டினால், அந்த இடத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடத்தை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உடனடியாகக் கட்டிக் கொடுக்கும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**24—**

## மருத்துவமனை தரம் உயர்த்துதல்

*__2983—திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:__

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருச்செந்தூர் தொகுதி, திருச்செந்தூரிலுள்ள அரசு மருத்துவமனையை மாவட்டத் தலைமை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2017 ஜனவரி 31]

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருணை சுமந்த மேகத்தின் உருவாய்; கனிவினை சுமந்த தாயவள் வடிவாய்; கனவுகள் சுமந்த காலங்கள்தொட்டு நாங்கள் கண்டு வணங்கிய கண்கண்ட தெய்வம்; வாழும் ஒவ்வொரு நொடியிலும் நாங்கள் பாடிய எங்கள் பரம்பொருள்; வீடும், நாடும் விடைசொல்லும் நாள்வரை, வீடும், நாடும் விடைசொல்லும் நாள்வரை; நாளும், பொழுதும் நாட்டிற்காக உழைத்திட்ட; நாட்டு மக்களுக்காகவே உழைத்திட்ட உன்னதமே! எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு வீர வணக்கத்தை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழியில் கழகத்தைக் கட்டிக் காக்கும் கழகப் பொதுச் செயலாளர், பெருமதிப்பிற்குரிய சின்னம்மா அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் அரசு மருத்துவமனை 94 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகும். அந்த மருத்துவமனையிலே நாளொன்றுக்கு 600 வெளி நோயாளிகளும், நாளொன்றுக்கு 90 உள் நோயாளிகளும், மாதம் ஒன்றிற்கு 90 பிரசவங்களும் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசின் கொள்கைப்படி, ஒரு மாவட்டத்திற்கு ஓர் அரசு தலைமை மருத்துவமனை இருத்தல் வேண்டும். அந்த வகையிலே, தூத்துக்குடி மாவட்டத்திற்கு கோவில்பட்டியிலே அரசு தலைமை மருத்துவமனை சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. திருச்செந்தூர் தொகுதி, திருச்செந்தூரிலுள்ள அரசு மருத்துவமனைக்குத் தேவையான வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. எனவே, அந்த மருத்துவமனையை மாவட்டத் தலைமை மருத்துவமனையாகத் தரமுயர்த்தக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள்.*

[2017 ஜனவரி 31

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதியிலுள்ள திருச்செந்தூர் அரசு மருத்துவமனையில் இன்றைக்கு 94 படுக்கை வசதிகள் இருந்தாலும், அவசர சிகிச்சைப் பிரிவில் மருத்துவர்கள் இல்லாத நிலையும், முடநீக்கியல் துறையில் Ortho மருத்துவர்கள் இல்லாத நிலையும், காது-மூக்கு-தொண்டை பிரிவில் புறநோயாளிகளைப் பார்க்கின்ற அளவிற்குப் போதுமான அளவு மருத்துவர்கள் இல்லாத நிலையும், Scan பிரிவிற்கான மருத்துவர்கள் இல்லாத நிலையும், இரத்த வங்கி இல்லாத நிலையும் அம்மருத்துவமனையில் இருக்கிறது.

மேலும், E.C.G., பிரிவில் போதுமான பணியாளர்கள் இல்லை. X-Ray பிரிவில் நிரந்தரப் பணியாளர்கள் இல்லை. மாற்றுப் பணியாளர்கள்தான் இருக்கின்ற நிலை உள்ளது. மேலும், Lab Technician பணியில் 5 பேருக்குப் பதிலாக 2 பேர் மட்டுமே தற்போது உள்ளனர். ஒரே ஒரு சுகாதாரப் பணியாளர் மட்டுமே உள்ளார். துப்புரவுப் பணியாளர்கள் இரண்டு பேர் மட்டுமே உள்ளனர். இதுதான் திருச்செந்தூர் அரசு மருத்துவமனையின் இன்றைய நிலை.

இந்த நிலையில் சுகாதாரம் மற்றும் மருத்துவத்தில் பின்தங்கியுள்ள திருச்செந்தூர் தொகுதி மக்களுக்கு நல்ல மருத்துவ வசதி கிடைத்திட திருச்செந்தூர் அரசு மருத்துவமனையை அனைத்து வசதிகள் கொண்ட மாவட்டத் தலைமை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலம் வைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதியான திருச்செந்தூரில் உள்ள அரசு மருத்துவமனைக்கு ரூபாய் 1 கோடியே 44 இலட்சத்து 60 ஆயிரம் செலவில் வெளிநோயாளிகள் பிரிவையும், (மேசையைத் தட்டும் ஒலி) 24 படுக்கைகள் கொண்ட கட்டடப் பிரிவையும் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காணொலிக் காட்சிமூலம் திறந்து வைத்தார்கள். அதேபோல, 24 படுக்கைகள்



2017 ஜனவரி 31]

கொண்ட CEmONC பிரிவிற்கு மகப்பேறு கட்டடம் 80 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாகக் கட்டடப்பட்டுள்ளது.

Ortho பிரிவிற்கு மருத்துவர் தேவை குறித்து நான் மருத்துவத் துறையின் இணை இயக்குநர் அவர்களிடம் கேட்டேன். கூடுதலாக Dialysis பிரிவும் அம்மருத்துவமனைக்கு வழங்கப்பட்டுள்ளது என்ற நல்ல செய்தியை நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் ஒரு மாதத்தில் அங்கு Dialysis பிரிவு துவங்கும். Ortho பிரிவிற்கு, மருத்துவப் பணியாளர்கள் தேர்வு வாரியத்தின்மூலம் மருத்துவர்களைத் தேர்வு செய்ய இருக்கிறோம். வருகின்ற 12 ஆம் தேதி தேர்வு நடக்க இருக்கின்றது. ஏற்கெனவே நடந்த தேர்வு மூலம் 17,027 மருத்துவர்கள் மருத்துவம் சாராப் பணிகளுக்காக நியமிக்கப்பட்டுள்ளார்கள். இப்போது தேர்வு நடக்க இருக்கின்றது. அந்தத் தேர்வு முடிந்தவுடனே, தமிழகத்திலே மருத்துவர்களும், மருத்துவம் சாராப் பணியாளர்களும் உடனடியாக நியமிக்கப்படுவார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு திருச்செந்தூரின் சுற்று வட்டாரப் பகுதிகளில் ஏறக்குறைய 4 இலட்சம் மக்கள் வசித்து வருகிறார்கள். அதுமட்டுமல்லாமல், இவர்களில் பெரும்பாலானோர் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், மீனவர்கள், பனைத் தொழிலாளர்கள் மற்றும் அமைப்புசாராத் தொழிலாளர்கள்.

அதேபோல, திருச்செந்தூரில் உள்ள புகழ்பெற்ற அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் தினந்தோறும் வந்து செல்கின்றனர். இவர்களுடைய மருத்துவ தேவையையும் அரசு மருத்துவமனைதான் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது. மேலும், இம்மருத்துவமனைக்கு தினந்தோறும் 600 புறநோயாளிகள் வந்து செல்வதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் ஏறக்குறைய 1,000 பேருக்கு மேல் இம்மருத்துவமனைக்கு புறநோயாளிகளாக வருகின்றனர். உள் நோயாளிகளாக 100 பேருக்கும் மேல் சிகிச்சை

[2017 ஜனவரி 31

பெற்றுவந்தாலும், அங்கு 94 Beds மட்டுமே இருக்கின்ற காரணத்தினால், அதிக நோயாளிகள் தங்கி சிகிச்சை பெற முடியாத நிலை இருக்கின்றது. விபத்துகள் ஏற்படுகிறபோது, அவசர சிகிச்சை பெறுவதற்கு அருகிலுள்ள தூத்துக்குடி அல்லது திருநெல்வேலிக்கு செல்ல வேண்டியுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் இன்று ஆளுநர் உரைமீதான விவாதத்தில் பேச இருக்கிறீர்கள். அப்போது, இதுகுறித்து விரிவாகப் பேசலாம். தற்போது, துணைக் கேள்வி மட்டும் கேளுங்கள்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குத்தான் செல்லவேண்டும். அப்படிச் செல்கின்றபோது, ஏறக்குறைய 45 கிலோ மீட்டர், 55 கிலோ மீட்டர் தூரத்திற்கு பயணம் செய்யவேண்டிய சூழ்நிலை உள்ளது. இதனால் அவசர சிகிச்சைக்கு வழியில்லாமல் அதிகளவு உயிர் பலி ஏற்படுகிறது. ஆகவே, திருச்செந்தூர் அரசு மருத்துவமனையை மாவட்ட மருத்துவமனைக்கு இணையாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உருவாக்கித் தருவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதுபோல, திருச்செந்தூர் அரசு மருத்துவமனையை மாவட்ட மருத்துவமனைக்கு இணையான மருத்துவமனையாக உருவாக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தயாராக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, மருத்துவத் துறையில் பல்வேறு காலிப் பணியிடங்கள் இருக்கின்றன என்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தினார்கள். தயவுசெய்து அப்படிச் சொல்ல வேண்டாம். நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு திட்டவட்டமாகச் சொல்கிறேன். அங்கே உள்ள 16 மருத்துவர் பணியிடங்களில் ஒரே ஒரு மருத்துவருக்கு மட்டும்தான் உடல்நிலை சரியில்லை, 15 மருத்துவர்கள் ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களிலே சரியான அளவில் பணியாற்றுகிறார்கள். 39



2017 ஜனவரி 31]

செவிலியர் பணியிடங்களில் 37 செவிலியர்கள் பணியில் இருக்கிறார்கள். ஆகையினால், எல்லா பணியிடங்களிலும் பணியாளர்கள் சிறப்பாகப் பணி செய்து கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அம்மருத்துவமனைக்கு கூடுதல் வசதிகளைக் கேட்கிறார்கள். ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செய்து கொடுத்திருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மேலும் வசதிகளை செய்து கொடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

25—

## கொள்முதல் மையம்

***4926—திரு. என். சுரேஷ் ராஜன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மா, பலா மற்றும் வாழைப் பழங்களுக்கான கொள்முதல் மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று தவ வாழ்வு வாழ்ந்து, மக்களுக்காகவே தன்னை அர்ப்பணித்து, தன் வாழ்நாளையே மக்கள் பணிக்காக அர்ப்பணித்தவர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தமிழகம் வளர்வதற்கு, வேளாண்மை வளர்வதற்கு, இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால்,

இந்தியாவிலேயே தமிழகம் தலைநிமிர்ந்து நிற்பதற்கு தன்னிகரில்லா தலைவராகத் திகழ்ந்தவர்தான் எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திற்கு வரப்பிரசாதமாகக் கிடைத்த தங்கத் தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மலர்ப் பாதங்களை வணங்குகிறேன். அவருக்காக, அவருடைய நல்வாழ்வுக்காக மட்டுமல்லாமல், கழக வளர்ச்சிக்காகவும் தன்னையே அர்ப்பணித்துக்கொண்டு 33 ஆண்டு காலம் தியாக வாழ்வு வாழ்ந்த, மக்கள் தலைவி, கழகத்தினுடைய பொதுச் செயலாளர் சின்னம்மா அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மாம்பழம், பலாப்பழம் மற்றும் வாழைப்பழம் ஆகியவற்றிற்கான கொள்முதல், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறைமூலம் மேற்கொள்ளப்படுவதில்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன் அவர்கள்.

**திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா வகையான தோட்டப் பயிர்களும் உற்பத்தியாகின்ற ஒரே மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம். அப்படிப்பட்ட சிறப்பிற்குரிய அந்த மாவட்டத்தில், இன்றைய காலக்கட்டத்தில், விவசாயிகள் இதுவரையிலும் சந்திக்காத அளவிற்கு மிகப் பெரிய பாதிப்பு, மழை இல்லாத காரணத்தால் ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட விவசாயப் பெருமக்களுக்கு நஷ்டஈடாக அவர்களுடைய பயிர்களுக்குத் தகுந்தாற்போல், ஏக்கருக்கு ஐந்தாயிரம் ரூபாய்தான் வழங்குவதாக அரசு அறிவித்திருப்பதாக அங்கே இருக்கக்கூடிய அதிகாரிகள் மூலமாகத் தெரிய வருகிறது. எனவே, ஐந்தாயிரம் ரூபாய் என்பதை உயர்த்தி வழங்க இந்த அரசாங்கம் முன்வருமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யாரோ





அதிகாரிகள் சொன்னார்கள் என்று சொல்லியிருக்கின்றார்கள். வருவாய்த் துறை மூலமாகவும், வேளாண்மைத் துறை மூலமாகவும் ஆங்காங்கே துல்லியமாக கணக்கு எடுக்கப்பட்டு வருகிறது. அத்தனையும் மாவட்ட ஆட்சித் தலைவர்மூலம் சரி பார்க்கப்பட்டு, மேலும் 3 பேர் அந்தக் குழுவில் நியமிக்கப்பட்டு, அவர்களின் அறிக்கைகளும் தலைமைக்கு வந்துகொண்டிருக்கின்றன. அறிக்கைகள் வந்தவுடன், விவசாயிகளுக்கும், விவசாய மக்களுக்கும் என்றைக்கும் வாழ்வாதாரத்தைத் தந்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, நீங்கள் எண்ணுகின்றபடி, விவசாயப் பெருங்குடி மக்களுக்கும், குறிப்பாக, அனைத்து வேளாண் விளைபொருட்களுக்கும் தக்க நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன் அவர்கள்.

**திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அதேநேரத்தில், விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டிய மானியங்கள்கூட உடனுக்குடன் கிடைப்பதாகத் தெரியவில்லை. அதற்கு என்ன காரணம் சொல்கின்றார்கள் என்று சொன்னால், தோட்டக்கலைத் துறையில் நிறைய காலியிடங்கள் இருப்பதாகச் சொல்கின்றார்கள். போதுமான அதிகாரிகள் இல்லை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றுசொன்னால், 400 உதவி இயக்குநர் பதவிகளில் 330 பதவிகள் காலியாக இருக்கின்றன. அதேபோன்று 40 துணை இயக்குநர் பதவிகளில் 13 இடங்கள் காலியாக இருக்கின்றன. 1,200 உதவி அலுவலர் பதவிகளில் 800 பணியிடங்கள் காலியாக இருக்கின்ற காரணத்தால், அவர்களுக்கு கிடைக்க வேண்டிய பயன்கள் எல்லாம் உடனுக்குடன் கிடைக்காமல், காலதாமதமாகிக்கொண்டிருப்பதாகக் கூறுகின்றார்கள். இதனை உடனடியாக அரசாங்கம் நிவர்த்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

[2017 ஜனவரி 31

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு, அவரவர் நிலத்திற்குத் தேவையான மானியங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. ஏதாவது தவறு நடந்திருந்தால், மானியங்கள் கிடைக்கவில்லை என்று சொன்னால், எங்களுக்கோ அல்லது அங்கே இருக்கின்ற* Joint Director *அவர்களுக்கோ தகவல் தெரிவித்தால், உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். பதவி உயர்வு காரணமாக, சில பணியிடங்களில் காலி இடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவை நிரப்பப்பட்டு வருகின்றன. குறிப்பாக, உதவியாளர் பணியிடங்கள் முழுமையாக நிரப்பப்பட்டு, இன்னும் ஒன்றிரண்டு நாட்களில் பணி நியமன ஆணையை வழங்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தயாராக இருக்கின்றது என்பதைச் சொல்லி, உங்களுடைய கோரிக்கைகள் அனைத்தையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நிறைவேற்றும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 26, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பழனி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

26—

### தனி வட்டம்

*4918—**திரு. கே. பழனி:**

*மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, குன்றத்தூர், மாங்காடு, கொளப்பாக்கம் ஆகிய குறு வட்டங்களை இணைத்து குன்றத்தூரை தலைமையிடமாகக் கொண்டு தனி வட்டம் உருவாக்க அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைக் காத்து வந்த தமிழர் குல சாமி மாண்புமிகு அம்மா அவர்களுடைய அழியாப் புகழ் இவ்வையகம் உள்ளவரை நாளும் வளர்ந்து ஓங்கிட மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களுடைய (மேசையைத் தட்டும் ஒலி) வழியிலே என்றைக்கும் அயராது தொடர்ந்து பாடுபடுவோம் என உறுதியேற்று, தாய் தந்த வரமாக இன்றைக்கு நமக்கும், நம் நாட்டிற்கும் கிடைத்திருக்கின்ற அரசியல் பொக்கிஷம், நட்பின் இலக்கணம், அமைதியின் உருவம், ஆற்றலின் பிறப்பிடம், கருணையின் வடிவம், தியாகத் தாய், பெருமதிப்பிற்குரிய கழகப் பொதுச் செயலாளர் சின்னம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*



2017 ஜனவரி 31]

*அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9-6-2003-ல் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களான மக்கள் தொகை மற்றும் கிராமங்களின் எண்ணிக்கை பூர்த்தியாகாததால், குன்றத்தூரை தலைமையிடமாகக் கொண்டு தனி வட்டம் உருவாக்க வழிவகை இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பழனி அவர்கள்.*

**திரு. கே. பழனி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணை விட்டு மறைந்தாலும் தமிழ் மக்களின் நெஞ்சை விட்டு நீங்காத இடத்தைப் பிடித்த எங்கள் இதய தெய்வம் (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நாடு போற்றும் நல்லாட்சி நடத்தி வீடுதோறும் விலையில்லாப் பொருட்கள் வழங்கி, வீரமிகு தமிழர்களை விளையாட்டில் நுழைத்து, தங்கம் வெல்ல வைத்த எங்கள் தங்கத் தாரகையே, மகுடம் சூடி வந்த மாரியப்பனுக்கு இது போதாதென்று இரண்டு கோடி ரூபாயை அறிவித்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வழங்கி, ஏழரைக் கோடி தமிழ் மக்களின் இதயத்தில் நீங்கா இடம் பிடித்த எங்கள் அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசியல் வாரிசு, கழக பொதுச் செயலாளர், தியாகத் தலைவி, மாண்புமிகு சின்னம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

[2017 ஜனவரி 31

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில் மக்கள் நலத் திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்திடவுள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் சட்டமன்றத் தொகுதி, குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில், குன்றத்தூர் குறு வட்டம், மாங்காடு குறு வட்டம், கொளப்பாக்கம் குறு வட்டம் ஆகிய மூன்று குறு வட்டங்களையும் சேர்த்து, குன்றத்தூரை தலைமையிடமாகக்கொண்டு ஒரு வட்டாட்சியர் அலுவலகத்தை அமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். பல்லாவரம் செல்கின்ற பொது மக்கள் மிகவும் அவதிக்குள்ளாகிறார்கள். இதனைக் கருத்தில்கொண்டு, என் தொகுதியிலுள்ள குன்றத்தூரை தலைமையிடமாகக்கொண்டு வட்டாட்சியர் அலுவலகத்தை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையின் சேவையை மேம்படுத்தவும், மக்களுக்கு விரைவான சேவையை அளிக்கவும், வருவாய்த் துறையை மக்கள் எளிதில் அணுகவும், முன்மாதிரியான நடவடிக்கைகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது. பொது மக்கள் வருவாய்த் துறையை எளிதில் அணுகிட, மக்கள் தொகை மற்றும் நிலப் பரப்பின் அடிப்படையில் வட்டங்கள் மற்றும் வருவாய்க் கோட்டங்கள் பிரிக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வகையில் இதுவரை வருவாய்த் துறையில் வரலாறு காணாத வகையில், 70 புதிய வருவாய் வட்டங்களை உருவாக்கித் தந்த அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையான ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, குன்றத்தூர் குறு வட்டத்தில் உள்ள 18 கிராமங்களில் குன்றத்தூர் உள்ளிட்ட 9



2017 ஜனவரி 31]

கிராமங்களும், மாங்காடு குறு வட்டத்தில் உள்ள 18 கிராமங்களில் 10 கிராமங்களும், அரசாணை (நிலை) எண் 70, வருவாய்த் துறை, நாள் 10-2-2013-ன்படி புதிதாக அமைக்கப்பட்டுள்ள பல்லாவரம் வட்டத்தோடு இணைக்கப்பட்டுள்ளதால், தற்போது பல்லாவரம் வட்டத்திலுள்ள குன்றத்தூர் குறு வட்டத்தை மேலும் பிரித்து புதிய குன்றத்தூர் வட்டம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பழனி அவர்கள்.

**திரு. கே. பழனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியில் அடுத்த ஆண்டாவது முயற்சி செய்து இந்தக் கோரிக்கையை பூர்த்தி செய்து, எங்கள் தொகுதி மக்களின் குறையைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லி அமைகிறேன், நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. V. செந்தில்பாலாஜி அவர்கள்.

முற்பகல் 10-40

**திரு. V. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நடந்து முடிந்த அரவக்குறிச்சி தொகுதியில் போட்டியிடக்கூடிய வாய்ப்பை எனக்கு வழங்கி, வெற்றி பெறச் செய்து, மூன்றாவது முறையாக இந்தப் பேரவையில் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றும் வாய்ப்பை வழங்கியுள்ளார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். எங்களுக்கு வழிகாட்டி, எங்களை வழிநடத்தும் கழகத்தின் நிரந்தர பொதுச் செயலாளர், மதிப்பிற்குரிய சின்னம்மா அவர்களையும் வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) வாக்களித்து வெற்றி பெறச் செய்த அரவக்குறிச்சி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அரவக்குறிச்சி தொகுதி, அரவக்குறிச்சி வட்டம், மண்மங்கலம்

[2017 ஜனவரி 31

வட்டம் ஆகிய பகுதிகளைப் பிரித்து வேலாயுதம்பாளையத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புஞ்சை புகலூரை தனி வட்டமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா என கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9-6-2003-ல் ஆட்சி எல்லைகளைப் பிரிப்பதற்கான வரையறைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதன்படி, புதிய வட்டம் அமைக்க வேண்டுமெனில், உத்தேசமாக 250 சதுர கிலோ மீட்டரிலிருந்து 2,000 சதுர கிலோ மீட்டர் வரையும் பரப்பளவு கொண்டதாகவும், ஒரு இலட்சம் முதல் ஐந்தரை இலட்சம் வரை மக்கள் தொகை கொண்டதாகவும், குறைந்தபட்சம் 30 வருவாய்க் கிராமங்களை உள்ளடக்கியதாகவும் இருக்க வேண்டும். இந்த வரையறைகளை பூர்த்தி செய்யக்கூடிய வகையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை இருக்குமாயின், வருவாய் நிருவாக ஆணையாளர், நில நிருவாக ஆணையாளர், நில சீர்திருத்த ஆணையாளர் அளவிலான உயர்மட்டக் குழு பரிசீலனை செய்து அரசுக்கு அறிக்கையை சமர்ப்பிக்கும். அதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 27, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். முருகையா பாண்டியன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

27—

## அடிப்படை வசதிகள்

***2234—திரு. ஆர். முருகையா பாண்டியன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2017 ஜனவரி 31]

அம்பாசமுத்திரம் தொகுதி, மணிமுத்தாறு அருவிப் பகுதிக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது இதயக் கூட்டின் எல்லா அறைகளிலும் நீக்கமற நிறைந்திருக்கின்ற தெய்வத் திருமகள் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாச நினைவுகளைப் போற்றி, அம்மாவாய் எங்களை அரவணைத்துச் செல்ல, அருள்தாய் எங்களுக்கு அடையாளம் காட்டியிருக்கும் இளைய தாய், நம்பிக்கை என்ற ஒற்றைச் சொல்லின் ஒட்டுமொத்த அடையாளம் எங்களது சின்னம்மா அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) எங்களது உயிர் மூச்சாம் அம்மா அவர்களின் இடத்திலிருந்து இந்த அவையையும், அன்னை தமிழகத்தையும் அடக்கத்தின் உறைவிடமாய் வழி நடத்திக்கொண்டிருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வணங்கி, மாமன்ற உறுப்பினர் அவர்களுடைய வினாவிற்கு பதில் தர விழைகின்றேன்.

திருநெல்வேலி மாவட்டம், மணிமுத்தாறு பகுதியில் மாநில அரசு நிதி உதவித் திட்டத்தின்கீழ் ரூ.34.90 இலட்சத்திற்கு சாலை வசதிகள், குடிநீர் வசதி, சுற்றுச் சுவர், மின் வசதி மற்றும் கழிப்பிட வசதிகள் மேற்கொள்ளப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. எனினும், இனிவரும் காலங்களில் மணிமுத்தாறு பகுதிக்கு வருகை தருகின்ற சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கணக்கில் கொண்டு, தேவைப்படும் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் தொடர்பாக கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடுகள் மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையுடன் பெறப்பட்டு, நிதி நிலைக்கேற்ப, சுற்றுலாத் துறையின்மூலம் நிதி ஒதுக்கீடு செய்ய பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். முருகையா பாண்டியன் அவர்கள்.

**திரு. ஆர். முருகையா பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய இதய தெய்வம், மறைந்த முன்னாள் முதலமைச்சர் எங்களுடைய குடும்பத்தினுடைய குல விளக்கு அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே மூன்றாவது பெரிய இயக்கமாகச்

[2017 ஜனவரி 31

செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளர் சின்னம்மா அவர்களையும் வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதியிலுள்ள மணிமுத்தாறு நீர்வீழ்ச்சி குற்றாலத்திற்கு அடுத்தபடியாக சிறப்பான நீர்வீழ்ச்சியாக அமைந்துள்ளது. நெல்லை மாவட்டத்திலுள்ள ஆயிரக்கணக்கான மக்கள் அந்த அருவியைப் பயன்படுத்தி வருகிறார்கள். ஆனால், போதுமான வசதிகள் அந்தப் பகுதியில் செய்து கொடுக்கப்படவில்லை. முன்பு, அந்த அருவி பகுதியில் உள்ள பராமரிப்பு வேலைகளை எல்லாம் பேரூராட்சி செய்துகொண்டிருந்தது. ஆனால், இப்போது எந்த வேலைகளும் செய்யப்படவில்லை. அந்த அருவியில் குளிப்பதற்கு எந்த வசதியும் இல்லை. குளிப்பதற்கு பாதுகாப்பான கம்பி வளைவோ, பெண்கள் குளித்தவுடன் உடை மாற்றுவதற்கு ஓர் அறையோ, கழிப்பறையோ, இது போன்று எந்த அடிப்படை வசதிகளும்கூட அந்த நீர்வீழ்ச்சி பகுதியில் இல்லை. மேலும், இந்த அருவிக்கு மணிமுத்தாறிலிருந்து மூன்று கிலோ மீட்டர் தூரம் பயணித்து வர வேண்டும். அங்கு உள்ள சாலைகளும் மிகவும் பழுதடைந்துள்ளன. பயன்பாட்டில் இருக்கும் அந்தச் சாலைகளும் எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்டவை. அந்தச் சாலை வழியாக மாஞ்சோலை பகுதிக்கு கிட்டத்தட்ட நான்கைந்து தடவைகள் சென்று வரும் அளவிற்கு பேருந்து வசதியும் செய்யப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களால் மணிமுத்தாறு பகுதி சுற்றுலாத்தலமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், உங்களுக்கு இன்னொரு துணைக் கேள்விக்கு வாய்ப்பு இருக்கின்றது. இந்தக் கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. ஆர். முருகையா பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளதோடு எந்த வசதியும் இல்லாத சூழ்நிலை இருக்கின்றது. 34 இலட்சம் ரூபாய் நிதி கொடுக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். எந்த ஆட்சியில்



2017 ஜனவரி 31]

கொடுக்கப்பட்டது என்று தெரியவில்லை. அம்மா அவர்களுடைய ஆட்சியில் கொடுக்கப்பட்டிருக்கலாம் என்று நினைக்கிறேன். மணிமுத்தாறு அருவி பகுதிக்கு அந்த நிதி செலவு செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. வேறு ஓர் பகுதியில் இருக்கின்ற வேறு ஓர் அருவிக்கு செலவு செய்யப்பட்டிருப்பதாக அறிகிறேன். எனவே, இந்த அருவி பகுதியில் உள்ள குறைகளைக் களைந்து, வேண்டிய அடிப்படை வசதிகள் மற்றும் மக்களுக்குப் பாதுகாப்பான வசதிகளை இந்த அரசு செய்து தருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீண்டும் வலியுறுத்தியதன் பேரில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான பார்வைக்கு இதனை எடுத்துச் சென்று, எங்களுடைய துறை சார்ந்த அதிகாரிகள் நேரடியாக ஆய்வு செய்த பின், சுற்றுலாப் பயணிகளின் வருகையினைக் கணக்கில்கொண்டு, அந்த இடத்தின் முக்கியத்துவத்தையும் கருத்தில் கொண்டு, மாவட்ட ஆட்சியரின் பரிந்துரை, கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடுகள் ஆகியவை பெறப்பட்ட பின், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாசியுடன் இந்தக் கோரிக்கை குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இம்மான்றத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். முருகையா பாண்டியன் அவர்கள்.

**திரு. ஆர். முருகையா பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில் இந்த ஆண்டே அந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்து தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, இந்த ஆண்டே அதனை நிறைவேற்றித் தர ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. விருகை V.N. ரவி, மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

28—

## உள் விளையாட்டு அரங்கம்

***7393—திரு. விருகை V.N. ரவி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருகம்பாக்கம் தொகுதியில் உள் விளையாட்டு அரங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன், பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விண்ணைத் தொடுகின்ற எண்ணங்களுடனும், மண்ணைத் தொடுகின்ற வியர்வைத் துளிகளுடனும், எண்ணில் அடங்கா சாதனைகளை தமிழகம் அனைத்து துறைகளிலும் படைத்திட, அனைத்து தமிழ் மக்களின் இரத்த நாளங்களில், ஆன்மாவின் சக்தியாக, என்றும் வியாபித்திருக்கும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு முதல் வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மாவின் நிழலாய், அவர் தம் வழி நடந்து, எங்களுக்கு வழி காட்டும் பொதுச் செயலாளர் சின்னம்மா அவர்களையும், தமிழக முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

விளையாட்டு கட்டமைப்புகளைப் பொறுத்தவரைக்கும் இரண்டு வகைப்படும். Hard infrastructure and soft infrastructure ஆகும். Hard infrastructure-ஐப் பொறுத்தவரைக்கும், தமிழகத்தில் ஒன்பது





உள் விளையாட்டு அரங்கங்கள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. 18 அரங்கங்கள் கட்டப்பட்டு வருகின்றன. கோவையில் இன்னும் ஓர் அரங்கம் கட்டுவதற்காக நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு, அதுவும் இப்போது கட்டப்படும் நிலைக்கு வந்திருக்கிறது. மொத்தம் 28 உள் விளையாட்டு அரங்கங்கள் இன்னும் ஒரு மாதத்தில் இயங்கத் துவங்கும். அது போக, நீச்சல் குளங்கள் 30, Specialised Academies 13, Special Development Centres 3, Open Air Stadium 30, இவை அனைத்தும் கட்டப்பட்டு, செயல்பாட்டிற்கு வந்திருக்கின்றன. Synthetic Athletic Track 7, Synthetic Hockey Field Turf 6, அதுபோக Mini Stadium தாலுகா அளவில் 25, Synthetic Tennis Court 15 ஆகிய அனைத்தும் செயல்பாட்டிற்கு வந்திருக்கின்றன.

விருகம்பாக்கம் தொகுதியைப் பொறுத்தவரைக்கும், மாநகராட்சியின் மூலமாக நிலம் கொடுக்கப்பட்டால், கண்டிப்பாக அந்த இடத்தில் உள் விளையாட்டு அரங்கம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படும். அதனை ஆய்வு செய்வோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். விருகம்பாக்கத்தில் Soft infrastructure-ஐப் பொறுத்தவரைக்கும் CDS (Cheampion Development Scheme) திட்டத்தின்படி, 2 வருடத்திற்கு ரூ.2 இலட்சம் award-உடன் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். விருகம்பாக்கம் தொகுதியைச் சேர்ந்த ரித்திக், துப்பாக்கி சுடுதலிலும், விருகம்பாக்கம் National level Roller Skating-ல் N.L. Vagasya-ம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இன்னும் பலர் அந்த இடத்திலிருந்து வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. நன்றி, வணக்கம்.

முற்பகல் 10-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விருகை V.N. ரவி அவர்கள்.

**திரு. விருகை V.N. ரவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழ்ந்தவர் கோடி, மறைந்தவர் கோடி, என்றும் மக்களின் மனதில் நீங்காத இடம் பெற்றவர், அமைதி, வளம், வளர்ச்சி என்ற தாரக மந்திரத்திற்குச் சொந்தக்காரர் அம்மா அவர்கள். வடக்கே இருக்கின்ற இமயத்தைப் பார்த்திருக்கின்றோம்; அதற்கு நிகரான ஓர் இமயம், அதுதான் நம் அம்மா என்கின்ற இமயம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆயிரம் ஆண்டுகள் கடந்து போனாலும், அம்மா அவர்களின் பெயர் மட்டும் தமிழ்நாட்டை விட்டுப் போகாது. காரணம், எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்கள்

[2017 ஜனவரி 31

தந்த சரித்திரம்தான். (மேசையைத் தட்டும் ஒலி) நமது இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகின்றேன்.

ஒன்றரைக் கோடி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களை வழி நடத்தும் கழகப் பொதுச் செயலாளர் மதிப்புமிகு சின்னம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசின் மகத்தான திட்டங்களால் விளையாட்டுத் துறையில் இந்தியாவில் தமிழகம் முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது. அதற்கு உதாரணம், சமீபத்தில் நடந்த மாற்றுத் திறனாளிகளுக்கான பாரா ஒலிம்பிக் தடகளப் போட்டியில் தமிழகத்தைச் சேர்ந்த ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்த மாரியப்பன் தங்கப் பதக்கம் பெற்று நம் இந்தியாவிற்கும், தாய்த் தமிழகத்திற்கும் பெருமை சேர்த்தார். போட்டியில் வென்றவுடன் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உடனடியாக இரண்டு கோடி ரூபாயை வழங்கி பெருமை சேர்த்தது. (மேசையைத் தட்டும் ஒலி) குடிமக்களுக்கு வழங்கப்படும் உயரிய விருதான பத்மஸ்ரீ விருதும் வழங்கப்பட்டு, அவர் கௌரவிக்கப்பட்டார். எனது விருகம்பாக்கம் தொகுதியில் தற்போது எந்தவிதமான விளையாட்டு வசதிகளும் இல்லாத நிலை உள்ளது. ஆனால், இப்பகுதியில் ஏராளமான விளையாட்டு வீரர்கள் உள்ளனர். இருந்தபோதிலும், அவர்கள் முறையான பயிற்சி பெறாததன் காரணமாக பல்வேறு போட்டிகளில் பங்கேற்க இயலாத நிலையில் முடங்கியுள்ளனர். இத்தகைய விளையாட்டு வீரர்களுக்கு தகுந்த பயிற்சி அளித்தால் அவர்கள் மாநில, தேசிய மற்றும் சர்வதேச அளவில் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்று சிறப்பான திறமையினை நிச்சயம் வெளிப்படுத்துவார்கள். எனவே, அந்த வகையில், விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்தும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, எனது விருகம்பாக்கம் தொகுதியில் ஒரு பல்நோக்கு உள் விளையாட்டு அரங்கம் அமைத்துக் கொடுத்தால், விளையாட்டில் ஆர்வம் கொண்ட, பண வசதி இல்லாத, ஏழை எளிய, நடுத்தர குடும்பத்தைச் சார்ந்த திறமையுள்ள விளையாட்டு வீரர்கள் மிகுந்த பயனடைவார்கள்.

எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், விருகம்பாக்கம் தொகுதியில் உள்ள விளையாட்டு வீரர்கள் மற்றும் இளைஞர்கள் பயனடையும் வகையில், ஒரு பல்நோக்கு விளையாட்டு அரங்கம் அமைத்திட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு சென்று, இப்பகுதிவாழ் மக்களின் நீண்ட நாள் கோரிக்கைகளை நிறைவேற்றித் தர முன்வர வேண்டும் என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.



2017 ஜனவரி 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே சொன்னதுபோல, தமிழக அரசின் கட்டுப்பாட்டில், SDAT-ல் இயங்கக்கூடிய உள் விளையாட்டு அரங்கங்கள் சென்னையில் மட்டும் 4 இயங்குகின்றன. அதுபோக, 5 மாவட்டங்களில் மொத்தம் 5 இயங்கிக் கொண்டிருக்கின்றன. இப்போது மொத்தம் 12 கட்டுமானத்தில் இருக்கின்றன. வெகுவிரைவில் கட்டப்பட்டு, அவை மாண்புமிகு முதல்வர் அவர்களால் திறக்கப்பட இருக்கின்றன. அதுபோக, தனியார் பங்களிப்புடன் பல்கலைக்கழகங்கள் மூலமாக 10, தனியார் பங்களிப்பு 20, மொத்தம் 51 உள் விளையாட்டு அரங்கங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. நான் சொன்னது போல நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசாங்கம் Hard infrastructure-ல் மட்டுமல்லாமல், Soft infrastructure-ல், அதாவது World Beaters Talent Spotting Scheme, Champions Development Scheme, Special Scholarship for Elite Sportspersons மூலமாக 2,325 மாணவர்களை இன்றைக்கு 36 உண்டி, உறைவிட விடுதிகளில், அதாவது Sports Hostels, Sports Hostels of Excellence for Men/Women, Centre of Excellence for Sports-ல் வைத்திருக்கிறோம். இதில் விருகம்பாக்கம் தொகுதியைச் சேர்ந்தவர்களே 10 பிள்ளைகள் இருக்கிறார்கள். அந்த 2,325 பேர்களில் உங்கள் Players-ஐ அதிகமாக எடுப்பதற்கு கண்டிப்பாக ஏற்பாடு செய்வோம். அதுபோக, இப்போது High Altitude Sports Training Centre ஒன்றை ஊட்டியிலும், Integrated Sports Science Centre ஒன்றை மதுரையிலும், 22 கோடி ரூபாயில் கட்டிக் கொண்டிருக்கிறோம். இதுபோக, Khelo India-ன்கீழ் 5 திட்டங்களை இந்த முறை கொண்டு வருவதற்கு ஏற்பாடுகளைச் செய்கிறோம். விருகம்பாக்கம் தொகுதியைப் பொறுத்தவரையிலும், நீங்கள் கண்டிப்பாக இடத்தைத் தேர்வு செய்து கொடுங்கள். Khelo India திட்டத்தில் funds இருக்கிறது. கண்டிப்பாக கட்ட முடியும். உங்கள் தொகுதியில் இரண்டு infrastructures அதாவது Hard infrastructure,

[2017 ஜனவரி 31

Soft infrastructure ஆகிய இரண்டையும் பார்க்கலாம். கண்டிப்பாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசாங்கம் உங்களின் கோரிக்கையைப் பரிசீலனை செய்யும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விருகை V.N. ரவி அவர்கள்.

**திரு. விருகை V.N. ரவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு எனது விருகம்பாக்கம் தொகுதி மக்கள் சார்பாகவும், எனது சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். விருகம்பாக்கம் தொகுதியிலுள்ள கோயம்பேடு பகுதியில் ஆசியாவிலேயே பெரிய மார்க்கெட் அமைந்துள்ளது. அதன் அருகில் சென்னையிலிருந்து தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் பேருந்துகள் சென்று வரக்கூடிய அளவில் பெரிய பேருந்து நிலையம் அமைந்துள்ளது. தனியார் பேருந்து நிலையமும் அமைந்துள்ளது. அங்கு, தினமும் 1 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வந்து செல்கின்றனர். அந்தப் பகுதியில் ஒரு நீச்சல் குளம் அமைத்துத் தந்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோன்று, தமிழகத்தில் முதன்மையாக விளங்கும் 11 விளையாட்டுகளில் நீச்சலும் ஒன்று. ஏற்கெனவே, சென்னை, வேளச்சேரியில் உலகத் தரம் வாய்ந்த நீச்சல் குளம், நீர்நிலை வளாகம் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், விதி 110-ன்கீழ் அறிவித்த, நீர்நிலை அகாடமி ரூ.5 கோடி செலவில் மெரினா கடற்கரைக்கு அருகில் உருவாக்கப்பட்டு வருகிறது. காஞ்சிபுரம் மாவட்டம், மேலக்கோட்டையூர் Sports University-க்கு அருகில் ரூ.22 கோடி செலவில் Canoeing, Kayaking-



2017 ஜனவரி 31]

க்காக தீட்டப்பட்ட திட்டம், தற்போது செயல் வடிவம் பெற்று வருகிறது. தற்போது racquet games மற்றும் நீர்நிலை விளையாட்டு ஆகிய இரண்டிலும் இந்திய அளவிலே தமிழகம் முதலிடத்தில் இருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையையும் ஏற்று, இடம் இருக்கும்பட்சத்தில், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசாங்கம், நீச்சல் குளம் கட்டுவதற்கு, ஆய்வு செய்து, கண்டிப்பாக முடிவெடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரை வர்தா புயல் தாக்கிய நேரத்தில், மாநகரத்திலிருந்த ஆயிரக்கணக்கான மரங்கள் சாய்ந்து, சாலைகளில் விழுந்தன. போக்குவரத்தைச் சரி செய்ய வேண்டுமென்பதற்காக, உடனடியாக அந்த மரங்களெல்லாம் அப்புறப்படுத்தப்பட்டு, மாநகராட்சியினுடைய விளையாட்டுத் திடல்களில் கொண்டுபோய் போடப்பட்டன. ஆனால், அங்கிருந்து அம்மரங்கள் இன்னமும் அப்புறப்படுத்தப்படவில்லை. இதனால் விளையாட்டு வீரர்கள், இளைஞர்கள், மாணவர்கள் ஆகியோர் அந்த விளையாட்டுத் திடலைப் பயன்படுத்த முடியாத சூழ்நிலை தொடர்ந்து நிலவிக் கொண்டிருக்கிறது. எனவே, இந்த நிலையைப் போக்குவதற்கு அரசு என்ன முயற்சி எடுத்திருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இரண்டு அமைச்சர்களில் யார் வேண்டுமானாலும் பதில் சொல்லலாம். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளவ்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கேட்ட கேள்வி, விளையாட்டுத் துறை சம்பந்தமாக இருந்தாலும்கூட, மாநகராட்சி பற்றி கேட்டதால், நான் பதில் சொல்ல விழைகிறேன். சுமார் 110, 120 கி.மீ. வேகத்தில் வீசிய கடுமையான வர்தா புயலால் கிட்டத்தட்ட 17 ஆயிரம் மரங்கள் முழுமையாகவும், பல மரங்களின் கிளைகளும். . . (குறுக்கீடு) வர்தா புயலால். . . (குறுக்கீடுகள்)

[2017 ஜனவரி 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள், அமைதியாக இருங்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்கு அனைத்துத் தரப்பு மக்களும், பொது நல அமைப்புகளும் தங்கள் பாராட்டுகளைத் தெரிவித்துள்ளார்கள். பெருங்குடி போன்று இரண்டு இடங்களில்தான்* dumping yard *இருக்கிறது. அங்கு விழுந்த மரங்களை லாரிகளில் ஏற்றிக் கொண்டு ஒரு நாளைக்கு இரண்டு முறைதான் செல்ல முடிந்தது. எனவே, 78* dumping yard-*களைத் தேர்வு செய்தோம். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோன்று, அதில் சில விளையாட்டு அரங்கங்களும் அடங்கும். மரங்களை அகற்றுவதற்கு முழுமையாக ஒப்பந்தம் கோரப்பட்டது, யாரும் வரவில்லை. பிறகு, மண்டலவாரியாகப் பிரித்து ஒப்பந்தம் கோரப்பட்டு, மரங்கள் முழுவதும் அகற்றப்பட்டுவிட்டன. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோன்று, ஏதாவது சில இடங்களில் இருந்தாலும்கூட உடனடியாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். நேற்றையதினம்கூட, மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன் அவர்களும், "மரங்களை உடனடியாக அகற்ற வேண்டும்" என்ற இதே கோரிக்கையை வைத்தார்கள். உடனடியாக நேற்றே உரிய அதிகாரிகளை அழைத்து, உரிய நடவடிக்கை எடுக்கச் சொல்லிவிட்டோம். ஏதாவது ஒரு சில இடங்களில் மரங்கள் இருந்தாலும்கூட, அவற்றை உடனடியாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வர்தா புயல் தாக்கியதால் தமிழகத்தில் அனைத்து விளையாட்டு கட்டமைப்புகளும், குறிப்பாக நேரு ஸ்டேடியத்தில் மேலேயிருந்த கூரை பிரிந்திருந்தது. அவை எல்லாவற்றையும் சரி செய்து,* National Volleyball Championship



2017 ஜனவரி 31]

*போட்டிகள் அதே இடத்திலே, வர்தா புயலுக்குப்பின் ஐந்தாவது நாள் தமிழகத்திலே* S.D.A.T. *வளாகத்திலே நடத்தப்பட்டன என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

29—

## கயிறு தொழிற்சாலை

***5610—திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:**

*மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கடையநல்லூர் தொகுதியில் தென்னை நார் மூலமாக கயிறு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. பா. பென்ஜமின், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பிறந்தாலும்' மறைந்தாலும் பெயர் சொல்ல வேண்டும். இவர்போல யார் என்று ஊர் சொல்ல வேண்டும்' என்ற புரட்சித் தலைவருடைய பாடல் வரிகளுக்கு இலக்கணமாய் வாழ்ந்து, தன் வாழ்நாளில் இறுதி மூச்சு உள்ளவரை தனக்கென வாழாமல் நாட்டிற்காகவும், நாட்டு மக்கள் நலனுக்காகவும் தன்னையே முழுமையாக அர்ப்பணித்து, தவ வாழ்வு வாழ்ந்து சரித்திர சகாப்தமாகி மறைந்தும் மறையாமலும் எங்கள் உயிரில் உயிராய்க் கலந்து, என்றென்றும் எங்கள் இதய தெய்வமாய் வாழ்ந்துவரும், வங்கக் கடலோரம் கண்ணுறங்கும் எங்கள் பொன்மனத் தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நினைவிடத்தினை முதற்கண் வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் எங்கள் இயக்கத்தின் பொதுச் செயலாளராக தலைமையேற்று நடத்திக்கொண்டிருக்கக்கூடிய தியாகத் தலைவி மதிப்புமிகு சின்னம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

[2017 ஜனவரி 31

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் தொகுதியில் தென்னை நார் மூலமாக கயிறு தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பதற்கான செயற் குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கடையநல்லூர் தொகுதியிலே, பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட ஹெக்டேரிலே தென்னை சாகுபடி செய்யப்படுகிறது. இந்தத் தொகுதியிலே தொழிற்சாலைகளே இல்லை. ஏற்கெனவே நான் இந்தக் கோரிக்கையை வைத்திருந்தேன். அரசின் சார்பாக தொழிற்சாலைகளை ஆரம்பிக்காவிட்டாலும், தனியார்கள் முயற்சிகளைச் செய்தால் அதற்கு முழுமையாக அரசினுடைய அனைத்து உதவிகளும் தரப்படும் என்ற உத்தரவாதத்தை சென்ற முறை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்திருந்தார்கள். ஏற்கெனவே இந்தத் தொகுதியில் இருந்த ஈத்தல் தொழில் முற்றிலுமாகத் தடை செய்யப்பட்டு, மூவாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் வேலைவாய்ப்பை இழந்திருக்கின்றார்கள். தென்னை நாரினை தூளாக்கி சைனா போன்ற நாடுகளுக்கு அனுப்பினால், அங்கே இரசாயன முறையிலே பர்னிச்சர்கள் செய்யக்கூடிய முறை இருக்கிறது. சைனாவிலே இருப்பதுபோன்று எனது தொகுதியிலே பர்னிச்சர் தொழிற்சாலையை அமைக்க முடியும். இதுபோன்றதொரு முயற்சியை கேரள அரசாங்கம் செய்வதற்கு முனைப்பாக இருக்கின்றது. அதற்கு முன்பாக நாம் இங்கே அதை நடைமுறைப்படுத்தினால் நன்றாக இருக்கும். எனவே, அதை நமது அரசாங்கம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதியைச் சார்ந்த பகுதியில் சுமார் 15-க்கும் மேற்பட்ட தென்னை நார் தொழிற்சாலைகளும், சுமார் 50-க்கும் மேற்பட்ட கயிறு திரிக்கும் தொழிற்சாலைகளும் செயல்பட்டு வருகின்றன. மேலும், கடையநல்லூர் மற்றும் தென்காசி ஊர்களின் சுற்றுப்புறத்தில் கயிறு தொழிற்சாலையில் பணிபுரியும் 25 உறுப்பினர்களைக் கொண்டு 'தென்காசி பொதிகை கயிறு கூட்டமைப்பு' என்ற கயிறு குழுமம் ஒன்று 'SFURTI' திட்டத்தின்கீழ் 3,51,09,000 ரூபாயில் அமைக்க திட்டமிட்டு, அதற்கு கயிறு வாரியமானது 2,73,71,000 ரூபாய் முதற்கட்டமாக அனுமதித்துள்ளது. இக்குழுமத்தில் கட்டடம் கட்டுதல், இயந்திரங்கள் கொள்முதல் செய்வதற்கு விலைப்புள்ளிகள் முடிவுசெய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இக்குழுமத்தின் வாயிலாக நேரடியாக 500 நபர்களுக்கும், மறைமுகமாக 5,000 நபர்களுக்கும் மேல் வேலைவாய்ப்பு வழங்கப்படும் நிலையுள்ளது. மேலும், பாரதப் பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP) மற்றும் புதிய தொழில் முனைவோர்கள் உருவாக்கும் திட்டம் இவற்றின்கீழ் 'NEEDS' மூலமாக கடையநல்லூர் தாலுகாவில் தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு 26 இலட்சம் ரூபாய் மானியத்துடன் கூடிய கடன் வசதிகள் வழங்கப்பட்டு, தற்போது தொழிற்சாலைகள் செயல்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2017 ஜனவரி 31]

முற்பகல் 11-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல, அதுபோன்ற ஒரு ஃபர்னிச்சர் தயாரிக்கும் தொழிற்சாலை சம்பந்தமாக இந்திய அரசாங்கத்தினுடைய கயிறு வாரியத் தலைவராக இருக்கக்கூடிய சி.பி. ராதாகிருஷ்ணன் அவர்களை நேரடியாகச் சந்தித்து வலியுறுத்தி இருக்கின்றேன். அவரும் அதுபோன்ற ஒரு திட்டத்தை இந்தியாலேயே முதன்முறையாக தமிழ்நாட்டிற்குக் கொண்டுவரக்கூடிய முயற்சியில் இருக்கின்றார். அதற்கு சர்வதேச அளவிலான சான்றிதழும் விரைவிலே வர இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். அதுபோன்ற சூழ்நிலையிலே, கடையநல்லூர் தொகுதியிலே அந்தத் தொழிற்சாலை அமையக்கூடியபட்சத்தில், தமிழக அரசாங்கம் அனைத்துவிதமான உதவிகளையும் செய்யவேண்டும் என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

[2017 ஜனவரி 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. உமா மகேஸ்வரி, மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.*

**30—**

## தகவல் தொழில்நுட்பப் பூங்கா

***13297—திருமதி கு. உமா மகேஸ்வரி:**

*மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விளாத்திகுளம் தொகுதியில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கழகப் பொதுச் செயலாளர் மக்கள் தலைவி சின்னம்மா அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

*(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டான் பகுதியில் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மூலமாக தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலம் 500 ஏக்கர் பரப்பளவில் ரூ.13 கோடி முதலீட்டில் அமைக்கப்பட்டுள்ளது. எனவே, விளாத்திகுளம் தொகுதியில் பிறிதொரு தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கும் திட்டம் ஏதும் அரசுக்கு இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. உமா மகேஸ்வரி அவர்கள்.*

**திருமதி கு. உமா மகேஸ்வரி:** *மக்கள் நலனே தன் நலன் என்று மக்களுக்காகவே தன் வாழ்வை அர்ப்பணித்து தவ வாழ்வு வாழ்ந்த*



2017 ஜனவரி 31]

*மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) விளாத்திகுளம் தொகுதியில் சொன்ன பல திட்டங்களையும், சொல்லாத பல திட்டங்களையும் நிறைவேற்றி, மக்களின் இல்லங்களிலும், உள்ளங்களிலும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். எங்கள் கழகப் பொதுச் செயலாளர், தியாகத் தாய், மரியாதைக்குரிய சின்னம்மா அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*அறிவாற்றலின் வளர்ச்சிக்கேற்ப உழவின் உயர்விற்கேற்ப தொழில்கள் பெருகவேண்டும் என கனவு கண்ட மகாகவி பாரதியார் பிறந்த மண் எட்டயபுரம் உள்ள தொகுதி விளாத்திகுளம். படித்த இளைஞர்கள் பலர் இங்கு வேலையில்லாமல் வெளிநாடுகளுக்கும், வெளி மாநிலங்களுக்கும் செல்லும் நிலை உள்ளது. எனவே, இளைஞர்களின் மேன்மைக்கு தொழில்நுட்பப் பூங்கா அமைய வேண்டும் என்பதை புரட்சித் தலைவி அம்மாவின் வழியில் மரியாதைக்குரிய சின்னம்மாவின்கீழ் நடைபெறும் அரசு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று, தொழில்நுட்ப பூங்கா அமைப்பதற்கு ஆவன செய்யுமா என பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. புகழேந்தி உட்கார்ந்து கொண்டு பேசாதீர்கள். மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன்:** *மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[2017 ஜனவரி 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. உமா மகேஸ்வரி அவர்கள்.

**திருமதி கு. உமா மகேஸ்வரி:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. அருகிலுள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் தொழில்நுட்பப் பூங்கா உள்ளது என்று சொன்னார்கள். எனவே, எங்கள் தொகுதியில் உள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய சட்டமன்றத் தொகுதியான விளாத்திகுளத்திற்கும், திருநெல்வேலிக்கும் இடையே உள்ள தூரம் வெறும் 55 கி.மீ. தான். எனவே, திருநெல்வேலியில் அவர்கள் எல்லோரும் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கான ஏற்பாடுகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு செய்துகொண்டிருக்கிறது. அதன்படி, அந்தத் தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் Syntel International Private Limited-க்கு 100 ஏக்கரும், Sutherland Global Services Limited-க்கு 10 ஏக்கரும், A & D Cosmic Power-க்கு 25 ஏக்கரும், Deccan I Services-க்கு 2 ஏக்கரும் ஒதுக்கி, அங்கே 200 பேர் வேலைவாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். மேலும், ஆயிரம் பேர் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. எனவே, அந்த மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர்கள் வெளி மாநிலத்திற்குச் செல்லவேண்டிய சூழ்நிலை ஏற்படாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடு)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



2017 ஜனவரி 31]

## 2. விதி 110-ன்கீழ் அறிக்கை

### ஜல்லிக்கட்டு தடையை நீக்கக் கோரும் போராட்டத்தின்போது சேதமடைந்த நடுக்குப்பம் மீன் சந்தையைச் சீரமைத்தல், போராட்டத்திற்கு காரணமாக இருந்தவர்கள்மீது நடவடிக்கை எடுத்தல், உயர் நீதிமன்ற நீதியரசர் தலைமையில் விசாரணைக் கமிஷன் அமைத்தல்—முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். நான் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) ஒரு நிமிடம் உட்காருங்கள். பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்கவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-10

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்கள் மற்றும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மீனவர்களின்மீது தனி அக்கறை செலுத்தி, அவர்களின் வாழ்வாதாரம் மேம்பட பல்வேறு திட்டங்களை, தீட்டி செயல்படுத்தினார்கள். உலகின் எந்தப் பகுதியில் தமிழக மீனவர்கள் பாதிப்புக்கு உட்படுத்தப்பட்டாலும், அவர்களின் கண்ணீரைத் துடைத்திட நடவடிக்கை எடுத்து வந்தார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் இந்த அரசு, மீனவர்களின்பால் அதே அக்கறையுடன் செயல்பட்டு வருகிறது.

27-1-2017 அன்று நான் இந்த அவையில் ஜல்லிக்கட்டு தடையை நீக்கக் கோரி சென்னை மெரினா கடற்கரையில் நடத்தப்பட்ட காத்திருப்புப் போராட்டம் பற்றியும், இந்தப் போராட்டத்தில் சமூக, தேச விரோத சக்திகள் ஊடுருவியிருந்தது பற்றியும் விரிவாக எடுத்துக் கூறியுள்ளேன்.

23-1-2017 அன்று காலை பாதுகாப்புப் பணியில் இருந்த காவல் துறையினர் ஜல்லிக்கட்டுக்கான தடைகள் அனைத்தும் சட்டப்படி நீக்கப்பட்டுவிட்டன என விளக்கிக் கூறி, போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களை அமைதியாகக் கலைந்து செல்லும்படி எடுத்துக் கூறியவுடன், பெரும்பாலானோர் கலைந்து சென்று

விட்டனர். அன்று சென்னை, நடுக்குப்பத்தில் சட்ட விரோத கும்பல் ஒன்று கூடி மெரினா நோக்கிச் செல்ல முற்பட்ட போது, பாதுகாப்புப் பணியில் இருந்த காவல் துறையினர் அவர்களை கலைந்து செல்லுமாறு தெரிவித்தும், அக்கும்பல் கலைந்து செல்லாமல் காவல் துறையினர்மீது கற்கள் மற்றும் பெட்ரோல் நிரப்பிய பாட்டில்களை வீசியது. இச்சம்பவத்தில், நடுக்குப்பம் மீன் மார்க்கெட் தீயில் எரிந்து சேதமடைந்தது. காவல் துறையினர் அவர்களை கலைந்து போகச் சொல்லி எச்சரித்தும் கேட்காமல், அவர்கள் தொடர்ந்து வன்முறையில் ஈடுபட்டதால், காவல் துறையினர், தக்க எச்சரிக்கைக்குப் பின்பு, குறைந்தபட்ச பலத்தை உபயோகித்து அவர்களை கலைந்து போகச் செய்தனர் என்ற விவரத்தையும் நான் எடுத்துக் கூறியிருந்தேன்.

சமூக விரோத கும்பலின் நடவடிக்கை காரணமாக மீனவர் வாழ்வாதாரம் பாதிக்கப்படக்கூடாது என்பதில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியில் நடைபெறுகின்ற இந்த அரசு உறுதியாக உள்ளது. எனவே, எனது அறிவுரையின்படி, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார் அவர்களின் தலைமையில் அரசுச் செயலர், கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை, மீன் வளத் துறை ஆணையர், சென்னை மாநகராட்சி ஆணையர், சென்னை மாநகராட்சி துணை ஆணையர், தலைமைப் பொறியாளர், மீன்பிடித் துறைமுகக் கோட்டம், மாநகராட்சி பொறியாளர்கள் மற்றும் இதர அரசு அதிகாரிகள் ஜல்லிக்கட்டு போராட்டத்தின்போது சேதமடைந்த நடுக்குப்பம் மீன் சந்தையை 28-1-2017 அன்று நேரில் சென்று ஆய்வு செய்தார்கள். இந்த ஆய்வின்போது பாதிக்கப்பட்ட மீன் சந்தையை முழுவதும் பார்வையிட்டதுடன், பாதிக்கப்பட்ட அப்பகுதி மீனவர்களின் குறைகளையும் கேட்டறிந்தனர். அப்போது நடுக்குப்பம் மீன் விற்பனை சந்தை முழுவதுமாக சேதமடைந்ததைக் கண்டறிந்தனர். மீனவர்கள் வாழ்வாதாரம் இதனால் பாதிக்கப்பட்டுள்ளதால் இந்த மீன் விற்பனை சந்தையை உடனடியாகச் சீரமைத்துத் தருவது அவசியமாகும்.

இதனடிப்படையில், தற்காலிகமாக மீன் விற்பனை செய்ய ஏதுவாக சாலையின் தெற்குப் பகுதியில் மீன் வளத் துறைமூலம் தற்காலிக சந்தை அமைக்கப்படும். இது இன்னும் ஓரிரண்டு நாட்களில் முடிக்கப்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





மேலும், நிரந்தர மீன் விற்பனை சந்தை ஒன்று அந்தப் பகுதியில் அமைத்துத் தரப்படும். சென்னை பெருநகர மாநகராட்சிமூலம் சாலையின் வடக்குப் பகுதியில் 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு நிரந்தர, நவீன மற்றும் சுகாதாரமான மீன் சந்தை உடனடியாக அமைத்துத் தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

சமூக விரோதிகளால் நிகழ்த்தப்பட்ட வன்முறை சம்பவங்களில் நடுக்குப்பம் மட்டுமல்லாது அருகிலுள்ள மாட்டாங்குப்பம் மற்றும் அயோத்திகுப்பம் மீனவர்களின் உபகரணங்கள் மற்றும் இதர பொருட்கள் சேதமடைந்துள்ளன.

முற்பகல் 11-15

பாதிக்கப்பட்ட மீனவர்களின் சேதமடைந்த உபகரணங்கள் குறித்து, மீன் வளத் துறை அலுவலர்கள் உடனடியாக கள ஆய்வு செய்து, மதிப்பீடு செய்வார்கள். இந்த சேத மதிப்பீட்டின் அடிப்படையில் மீனவர்களுக்கு உரிய நிவாரணம் விரைவில் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

23-1-2017 அன்று நடந்த வன்முறை சம்பவங்களில் தொடர்புடையவர்கள்மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. சென்னையில் 312 பேர்களும், பிற மாவட்டங்களில் 175 பேர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். சென்னையில் கைது செய்யப்பட்டவர்களில் 21 பேரும், இதர மாவட்டங்களில் 15 பேரும் மாணவர்கள். மாணவர்களுடைய எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு, இம்மாணவர்கள் சம்பந்தப்பட்டுள்ள வழக்குகளிலிருந்து அவர்களை முழுமையாக விடுவிக்க சட்டப்பூர்வ நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

காவல் துறையைச் சேர்ந்த ஆண் மற்றும் பெண் காவலர்கள், தீ வைத்தல், வன்முறை போன்ற சட்டத்திற்குப் புறம்பான செயல்களில் ஈடுபட்டது போன்று சமூக வலைதளங்களில் பரவியுள்ள புகைப்படங்கள் மற்றும் காணொளிக் காட்சிகள் தொடர்பாக, சென்னை மாநகர கூடுதல் ஆணையரின் நேரடி மேற்பார்வையில் சென்னை மாநகர காவல் துறையின் கணினி வழி குற்றப் பிரிவினரால் தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டு

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2017 ஜனவரி 31

வருகிறது. இவை கணினி மற்றும் தடயவியல் வல்லுநர்களால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இவ்விசாரணையின் முடிவில் காவல் ஆளிநர்கள் மேற்கூறிய சம்பவங்களில் ஈடுபட்டுள்ளது உறுதிபடுத்தப்பட்டால், சம்பந்தப்பட்டவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஜல்லிக்கட்டு நடைபெற வேண்டி நடத்தப்பட்ட போராட்டங்களின் தொடர்ச்சியாக 23-1-2017 அன்று சென்னை, மதுரை, கோவை மற்றும் தமிழகத்தின் இதர பகுதிகளில் நடந்த சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகளின் உரிய காரணங்கள் மற்றும் சூழ்நிலைகளை விசாரிப்பதற்கு தனி விசாரணை ஆணையம் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் இவ்விசாரணையை மேற்கொள்வார். இந்த விசாரணை ஆணையத்திற்கு கீழ்க்கண்ட ஆய்வு வரம்புகள் நிர்ணயிக்கப்படும்:

1) 23-1-2017 அன்று நடந்த சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகளுக்கு, மூலமாக இருந்த காரணங்கள் மற்றும் சூழ்நிலைகளைக் கண்டறியவும், அதனால் பொது மற்றும் தனியாரின் சொத்துகளுக்கு ஏற்பட்ட சேதாரங்கள் குறித்தும் விசாரித்தல்;

2) சம்பந்தப்பட்ட காவல் துறையினரால் உரிய அளவில் பலப்பிரயோகம் சூழ்நிலைக்கு ஏற்றவாறு பயன்படுத்தப்பட்டனவா என்பது குறித்து விசாரித்தல்;

3) காவல் துறையினரின் செயல்பாட்டில் அத்துமீறல் இருந்ததா என்பதை விசாரிக்கவும்; அவ்வாறெனில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை குறித்து ஆலோசனை வழங்குதல்;

4) இனி வரும் காலத்தில் இப்படிப்பட்ட நிகழ்வுகளைத் தடுப்பதற்கான வழிமுறைகளைப் பரிந்துரைத்தல்;

இவ்விசாரணை ஆணையம் தனது விசாரணையை முடித்து, அரசிற்கு மூன்று மாத காலத்திற்குள் அறிக்கை சமர்ப்பிக்க அறிவுறுத்தப்படும் என தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2017 ஜனவரி 31]

## 3. தகவல் கோரல்

### (அ) காட்பாடி தொகுதி, நெல்லிக்குப்பம் சிப்காட் தொழிற்பேட்டையில் உள்ள Gujarat Enviro Protection & Infrastructure Limited நிறுவனத்தில் ஏற்பட்ட தீ விபத்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. ஜெ. அன்பழகன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் துணைத் தலைவர்தான் பேசுகிறார், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) விதி 110-ன்கீழ் அளிக்கப்பட்ட அறிக்கையில் ஏதும் raise செய்யவில்லை, zero hour-ல் அவர் raise செய்ய அனுமதி கோரியதை raise செய்கிறார். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் நீங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், பேசுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில், நெல்லிக்குப்பம் பகுதியில் SIPCOT Phase-III இருக்கிறது. அந்தப் பகுதியில் Gujarat Enviro Protection & Infrastructure Limited என்ற ஒரு பெரிய நிறுவனம் இருக்கிறது. அந்த நிறுவனத்தில் நேற்று அதிகாலை தீப்பிடித்திருக்கிறது. சுற்றுவட்டாரத்திலுள்ள காட்பாடி, வேலூர், இராணிப்பேட்டை, ஆற்காடு பகுதிகளிலிருந்து வந்த Fire Engine-கள் தீயை அணைக்க முயற்சித்தும், தீ அணையவில்லை. எங்கும் கரும்புகையாக இருக்கிறது. வந்திருக்கிற பத்திரிகைச் செய்தியைப் படித்துப் பார்த்தால் இன்னும் இரண்டு நாட்களுக்கு தீ அணையாது என்று சொல்லியிருக்கிறார்கள். மிகப் பெரிய விபத்து ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இது குறித்து அத்துறைக்கு பொறுப்பில் உள்ள அமைச்சர் அவர்களுடைய பதிலை நான் எதிர்பார்க்கிறேன்.

முற்பகல் 11-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

[2017 ஜனவரி 31

***மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், வாலாஜா வட்டம், சிப்காட் தொழிற்பேட்டை பகுதியில் அமைந்துள்ள Gujarat Enviro Protection Infrastructure Limited என்ற தனியார் தொழிற்சாலையில் நேற்று அதிகாலை 5-30 மணிக்கு தீ விபத்து ஏற்பட்டது. இந்த தீ விபத்தில் தொழிலாளர்களுக்கு உயிர்ச் சேதமோ அல்லது தீக்காயமோ எதுவும் ஏற்படவில்லை. ஆறு தீயணைப்பு வண்டிகள்மூலம் 40 தீயணைப்பு வீரர்கள் தீயணைக்கும் பணியில் முழுவதுமாக ஈடுபட்டு வருகின்றார்கள். இந்தத் தீ விபத்தினால் சுற்றுவட்டாரத்தில் எந்தவித பாதிப்புகளும் ஏற்படவில்லை. மேலும், அரக்கோணத்தில் உள்ள தேசிய பேரிடர் மீட்புக் குழுவினரும் தீயணைக்கும் பணியில் முழுமையாக ஈடுபட்டு வருகின்றார்கள்.

மேற்படி தொழிற்சாலை 2013-லிருந்து தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் அனுமதியுடன் செயல்பட்டு வருகிறது. இந்தத் தொழிற்சாலையிலிருந்து வெளியாகும் கழிவுகளில் உள்ள அபாயகரமான கழிவுகளை மாற்று எரிபொருளாகத் தயாரித்து, அதனை சிமென்ட் தொழிற்சாலைக்கு, குறிப்பாக அரியலூர் மாவட்டத்தில் உள்ள தொழிற்சாலைகளுக்கு வழங்கி வருகின்றனர். மேற்படி சம்பவம் தொடர்பாக சிப்காட் காவல் நிலையத்தினர் சம்பவ இடத்தில் விசாரணை செய்து வருகின்றனர். மேலும், தீயைக் கட்டுப்படுத்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காட்டிய அக்கறையின் அடிப்படையில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தீயைக் கட்டுப்படுத்தத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்துள்ளது. இராணிப்பேட்டை நகராட்சி மற்றும் வேலூர் மாநகராட்சிகளுக்குச் சொந்தமான தண்ணீர் லாரிகள் மூலமாக தீயை முழுமையாக அணைப்பதற்குரிய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

மேலும், சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்பட்டுள்ளதா என்பது குறித்து, மாசுக் கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் முழுமையாகக் கண்காணித்து வருகிறார்கள். மேலும், சிப்காட் பகுதியில் உள்ள தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறதா என்பதைக் கண்டறிவதற்கு மக்கள் நல்வாழ்வுத் துறையின் மூலமாக மருத்துவக் குழுவினரும் முழுமையாக அங்கே ஈடுபடுத்தப்பட்டு வருகிறார்கள். ஆகவே,



2017 ஜனவரி 31] [திரு. ஆர்.பி. உதயகுமார்]

மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் முழுவதுமாக கண்காணிக்கப்பட்டு, நிலைமை கட்டுக்குள் இருக்கிறது. எந்தத் தொழிலாளர்களுக்கும் உயிரிழப்பு ஏற்படவில்லை, சுற்றுவட்டாரப் பகுதிகளில் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் எத்தனை தலைவர்கள் இருந்தாலும், தமிழக மக்களின் நெஞ்சமெல்லாம் நீங்காமல் நிறைந்திருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 33 ஆண்டுகள் தவ வாழ்க்கை வாழ்ந்து, அம்மா அவர்களுடன் இருந்து, இன்றைக்கு கழகத்தினுடைய பொதுச் செயலாளராக வந்துள்ள சின்னம்மா அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வேலூர் மாவட்டம், வாலாஜா வட்டம், இராணிப்பேட்டை சிப்காட் Phase-III எண் 60-ல் அமைந்துள்ள நிறுவனங்களில் Gujarat Enviro Protection Infrastructure Limited நிறுவனமும் ஒன்று. இந்நிறுவனம் தொழிற்சாலையில் உருவாகும் திடக் கழிவுகளைப் பெற்று அரைத்து, உரிய விகிதத்தில் கலந்து, மாற்று திடப் பொருள் தயாரித்து, சிமென்ட் தொழிற்சாலைகளுக்கு மாற்று எரிபொருளாக அனுப்பி வருகின்றது. கடந்த 30-1-2017 அதிகாலை 5-30 மணியளவில் தொழிற்சாலை கிடங்கில் தீ விபத்து ஏற்பட்டு, மேற்படி தொழிற்சாலையில் தீப் பற்றிய விவரம் எல்லாம் 7-45 மணியளவில் தெரியப்பட்டு, அதன் பேரில், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் மற்றும் உதவி சுற்றுச்சூழல் பொறியாளர் ஆகியோர் உடனடியாக தீ விபத்து நடந்த தொழிற்சாலைக்குச் சென்று அந்தப் பகுதியில் உள்ள 8 தீயணைக்கும் வண்டிகள்மூலம். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், கரும்புகை என்று சொன்னீர்களே, அது புகையில்லை என்று சொல்ல வருகிறார், அவ்வளவுதான்; வேறொன்றும் இல்லை.

**மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்:** தீயைக் கட்டுப்படுத்தி, இந்த நிறுவனத்திற்கு அருகில் அமைந்துள்ள மற்ற தொழிற்சாலைகளுக்கு தீ பரவாதவண்ணம் பாதுகாக்கப்பட்டது. தொடர்ந்து தண்ணீரைப் பயன்படுத்தி தீயை அணைக்க முயற்சிகள்

[திரு. கே.சி. கருப்பணன்] [2017 ஜனவரி 31

மேற்கொண்டாலும், அந்தக் கிடங்கில் சேமித்து வைத்துள்ள மூலப் பொருள்களின் எரியும் தன்மையினால் தீயானது மீண்டும் பரவத் தொடங்கி, தொடர்ந்து எரிந்து வருகின்றது. தற்பொழுது லாரியின்மூலம் மணல் கொண்டு வந்து கொட்டப்பட்டு, தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தகவல் கோரினீர்கள், அதற்கு இரண்டு அமைச்சர்கள் உங்களுக்கு திருப்தியாகப் பதில் சொல்லிவிட்டார்கள், உட்காருங்கள்.

## (ஆ) திருக்கோவிலூர் தொகுதி, சின்னசேவலை, செங்கல்வராயன் சர்க்கரை ஆலை, கரும்பு அரவை தொடங்குதல், விவசாயிகளுக்கு நிலுவைத் தொகை வழங்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள்.

முற்பகல் 11-25

*__முனைவர் க. பொன்முடி:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோவிலூர் தொகுதி, சின்னசேவலையில் உள்ள செங்கல்வராயன் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் power turmoil ஏற்பட்டு, 2014 ஆம் ஆண்டிலிருந்து இயங்காமல் இருக்கிறது. மேலும், அங்கே இருக்கிற விவசாயிகளுக்கு சென்ற ஆண்டு ஜனவரி முதல் டன்னுக்கு 2,000 ரூபாயும், பிப்ரவரி முதல் டன்னுக்கு வெறும் 900 ரூபாயும் மட்டுமே கொடுக்கப்படுகிறது. அவர்களுக்கான நிலுவைத் தொகை வழங்கப்பட வேண்டும் என்று பல முறை இதே அவையில் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் கடிதம் எழுதியிருக்கிறேன், எழுதியிருக்கிறேன் என்று சொன்னாரே தவிர, இதுவரை நிலுவைத் தொகை அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அங்கே பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கும் சம்பளம் வழங்கப்படவில்லை. சின்னசேவலையில் உள்ள அந்த ஆலை மூடப்படுகின்ற நிலையில் உள்ளது. அந்த ஆலை அங்கு இயங்கவே இல்லை. ஆகவே, உடனடியாக Expert Committee-ஐ அங்கு அனுப்பி, சின்னசேவலையில் உள்ள அந்த ஆலை இயங்குவதற்கான வழிவகைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்களா என தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.



2017 ஜனவரி 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

*__மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 30-1-2017 அன்று காலை 5-00 மணிக்கு கொதிகலன் சூடேற்றப்பட்டு, இரவு 8-25 மணிக்கு மின் உற்பத்தி தொடங்கப்பட்டு, அன்று இரவு முழுவதும் செயல்பட்டு 6.05 மெகா வாட் அளவிற்குத்தான் மின் உற்பத்தி செய்யப்பட்டது. இன்றைக்கு முழு அளவில் செயல்பட்டு 10 மெகா வாட் அளவிற்கு மின் உற்பத்தி செய்யப்படும். அடுத்த மாதம் 1 மற்றும் 2 ஆகிய நாட்களில் 12 மெகா வாட் அளவிற்கு மின் உற்பத்தி செய்யப்படும். 12 மெகா வாட் அளவிற்கு மின் உற்பத்தி உயர்ந்தவுடன் உடனடியாக கரும்பு அரவை தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், கூட்டுறவுத் துறை மற்றும் பொதுத் துறை நிறுவனங்களுக்கு ஒட்டுமொத்தமாக ரூ.150.74 கோடி நிதியை வழிவகைக் கடனாகக் கேட்டுள்ளோம். அத்தொகை கிடைக்கப்பெற்றவுடன், உடனடியாக விவசாயிகளுக்கான நிலுவைத் தொகை வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வாய்ப்பு இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடு)

## (இ) எண்ணூர் காமராசர் துறைமுகம், கப்பலிலிருந்து கசிந்த எண்ணெய் கடலில் கலந்ததால் ஏற்பட்ட பாதிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சாமி, என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 28-1-2017 அன்று விடியற்காலையில் எண்ணூர் காமராசர் துறைமுகத்திலிருந்து கடலுக்குச் சென்ற கப்பல், வழியிலேயே, துறைமுக நுழைவாயிலுக்கு அருகிலேயே வேறு ஒரு கப்பலுடன் மோதியதில் இரண்டு கப்பல்களிலிருந்தும் எண்ணெய் கசிந்து வெளியாகியதால் 28 ஆம் தேதியிலிருந்து இன்றுவரை அங்குள்ள கடல் பகுதியே எண்ணெய்யாக மாறி, கடற்கரையோரங்களில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அவ்வளவுதான், உட்காருங்கள். மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) போதும், அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) என்னை அவையை நடத்த விடுங்கள். நீங்கள் நடத்தாதீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தகவல் கோரல் என்ற முறையில் விஷயத்தைச் சொல்லிவிட்டார். மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்கிறார். (குறுக்கீடுகள்) மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர், பேசுங்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இது விவாதம் அல்ல. (குறுக்கீடுகள்) இதெல்லாம் நியாயமே இல்லை. (குறுக்கீடுகள்)* Zero hour-*ல் ஒருவர், இருவரல்ல, மூன்று பேருக்கு வாய்ப்பு கொடுத்துவிட்டேன். (குறுக்கீடுகள்) மூன்று உறுப்பினர்களுக்கு நான் வாய்ப்பு கொடுத்துவிட்டேன். அவர்கள் பேசிக் கொண்டேயிருந்தால் நான் எப்படி இந்தச் சபையை நடத்துவது? (குறுக்கீடுகள்) அப்படியெல்லாம் வாய்ப்பு தர முடியாது. திரு. சக்கரபாணி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) அப்படியெல்லாம் தர முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி, நீங்கள் என்ன கேட்கப் போகிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். அதை நான் சொல்லிவிடுகிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்கிறார், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்கிறார், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர், நீங்கள் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) யாரும் எனக்கு* recommend *செய்யாதீர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் யாரும் பரிந்துரை செய்து நான் திரு. சாமியைக் கூப்பிடவில்லை. (குறுக்கீடுகள்) திரு. சாமி அவர்கள் என்ன பிரச்சினையை எழுப்பினாரோ, அந்தப் பிரச்சினை பற்றிச் சொல்ல நான் அனுமதி கொடுத்துவிட்டேன். அதற்கான பதிலை மாண்புமிகு அமைச்சர் சொல்கிறார். அதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்)*



**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மும்பையிலிருந்து ஒரு கப்பலும், ஈரானிலிருந்து ஒரு கப்பலும் வந்தன. மும்பையிலிருந்து* crude oil-*ஐ ஏற்றிக்கொண்டு வந்த கப்பலும், ஈரானிலிருந்து எல்.பி.ஜி. சிலிண்டர்களை ஏற்றிக் கொண்டு வந்த கப்பலும் இரண்டும். . .(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. சாமி, நீங்கள் ஒரு மணி நேரம் இதேபோன்று வற்புறுத்தினாலும் நான் அனுமதிக்க மாட்டேன்.* Zero hour-*ல் நீங்கள் கேட்ட கேள்விக்கு பதில் சொல்ல மாண்புமிகு அமைச்சர் அவர்களை அழைத்திருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார். உங்களுடைய கேள்விக்கு பதில் கிடைக்கும். உட்காருங்கள்.*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** *அரசு பதில் சொல்ல வேண்டும் என்று கேட்கும்பொழுது நீங்கள் அமர்ந்திருப்பதுதான் சரி. பதில் சொல்லவில்லை என்றால்கூட நீங்கள் எழுந்திருக்கலாம். ஆனால், அரசிடம் பதில் இருக்கிறது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் நேரமில்லாத நேரத்தில் 3 பேருக்கு நான் அனுமதி தந்திருக்கிறேன் என்று பெருந்தன்மையோடு இங்கு சொன்னீர்கள். நாங்களும் பெருந்தன்மையோடு அதை ஏற்றுக்கொள்கிறோம். நாளை ஒரு நாள்தான் சட்டமன்றம் நடக்கவிருக்கிறது. அந்த அடிப்படையில், நீங்களும் அதிகமான அளவிற்கு எங்களுக்கு வாய்ப்பு தந்து கொண்டிருக்கிறீர்கள். அதற்காக நன்றி. ஆனால், எங்கள் கட்சி உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி அவர்கள் இன்னமும் கேள்வியைக் கேட்டு முடிக்கவில்லை. ஒன்று, அவரைக் கேள்வி கேட்க அனுமதித்திருக்கக் கூடாது. அனுமதித்ததற்குப் பிறகு அவர் கேட்கக்கூடிய கேள்வியை முழுமையாகக் கேட்டதற்குப் பின்னர், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான பதிலைச் சொன்னால், அதுதான் சிறப்பாக இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுடைய தீர்ப்புக்கு நான் கட்டுப்படுகிறேன். எனவே, தயவுகூர்ந்து உறுப்பினர் கேட்கவிருக்கும் கேள்வியை முழுமையாகக் கேட்பதற்கு அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

[2017 ஜனவரி 31

*முற்பகல் 11-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்கட்சித் தலைவருக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். காலையிலேயே என்னுடைய அறைக்கு வந்து, உங்களுடைய கொறடாவும், அவரும் என்னிடத்திலே கேட்டார்கள். அது மத்திய அரசாங்கத்திள் purview- வில் வருகிறது. அதனால் பதில் இருக்காது. இருந்தாலும், நான் அமைச்சர் அவர்களிடத்தில் கேட்கிறேன் என்று சொல்லி, இவருக்காக கப்பல் துறையை வைத்திருக்கிற Highways Minister அவர்களிடம் கேட்டேன். அவரிடம் பதில் இல்லை. பிறகுதான், மீன் வளத் துறை அமைச்சர் அதற்கு நான் பதில் சொல்கிறேன் என்று சொன்னார். அதனால்—சொல்வதைக் கேளுங்கள், உங்களுக்கு பதில் கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் இவ்வளவு முயற்சி எடுத்திருக்கிறேன். ஆகவே அவர் கேள்வியின் விவரத்தை முழுவதுமாக அவையில் பதிவு செய்துவிட்டார். கப்பல் இடித்துவிட்டது. எண்ணெய் கொட்டிக்கிடக்கிறது. அதனால், பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. என்று முடித்து, அவர் விஷயத்தைச் சொல்லிவிட்டார். அதற்குப் பதில் சொல்ல நான் அமைச்சர் அவர்களைக் கூப்பிட்டேன். அவ்வளவுதானே தவிர, அவர் ஒரு நீண்ட விவாதம் செய்வதற்கு அனுமதி இல்லை. இப்பொழுதும் அனுமதி இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி, நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) பதில் இருந்தால், சொல்லுங்கள். இல்லை என்றால், இல்லை என்று சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** பதில் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் எடுத்த முடிவை மாற்ற தயவுசெய்து வற்புறுத்தாதீர்கள். (குறுக்கீடு) அவருக்கு வாய்ப்பு கொடுத்துவிட்டேன். (குறுக்கீடு) அவருக்குத்தான் பதில் சொல்கிறார். (குறுக்கீடு) இங்கே பாருங்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்...... (குறுக்கீடு)



2017 ஜனவரி 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கே பாருங்கள். எதிர்க்கட்சித் தலைவரே கூறிவிட்டார். (குறுக்கீடு) சொன்னதற்குப் பிறகு நான் விளக்கம் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை, என்னுடைய நிலையை. . ..(குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** நான் பதில் சொல்லி திருப்தியில்லை என்றால், பிறகு கேட்கச் சொல்லுங்கள். நான் பதில் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்வதைக் கேளுங்கள். பேரவைத் தலைவருக்கென்று சில நடைமுறைகள் இருக்கின்றன.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** நான் பதில் சொல்லவில்லை என்றால்தான் நீங்கள் எழுந்திருக்க வேண்டும். நான்தான் பதில் சொல்கிறேன் என்று சொல்கிறேனே! (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவருக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் எல்லா அமைச்சர்களிடத்திலேயும் நான் அவருக்காகக் கேட்டு, பதிலைப் பெற்றுத் தந்துக்கொண்டிருக்கிறேன். பதிலைப் பெற்றுத் தந்திருக்கிறேன். அந்தப் பதிலைச் சொல்லவிடாமல் தடுத்தால் என்ன அர்த்தம்? (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** இல்லை, நான் பதில் சொல்கிறேன். பதில் இல்லையென்றால்தான் நீங்கள் எழுந்திருக்க வேண்டும். நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் வேண்டுமென்றால் சொல்லட்டும். அவருக்கு நான் அனுமதி தருகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமியை, இந்தப் பொருள் குறித்து பேசச் சொல்லி, அவரும் பேசிவிட்டார். அதற்கு மேலும் ஏதாவது பேச வேண்டுமென்றால், நான் எதிர்க்கட்சித் தலைவரை அனுமதிக்கிறேன். அவர் வேண்டுமானால் பேசட்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமிக்கு இதற்குமேல் அனுமதி தரமுடியாது. (குறுக்கீடு)

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை அனுமதித்ததற்காக முதலில் நான் எங்களுடைய உறுப்பினர்கள் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அவர் கேட்க வந்த கேள்வி, கடல்

*நீரிலே எண்ணெய் கலந்திருக்கிற காரணத்தால், அங்கு மீன்கள் சாகக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. மேலும், மீனவத் தோழர்களும் கடலில் சென்று மீன் பிடி தொழிலில் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த நிலையைப் போக்கக்கூடிய வகையில், நம்முடைய அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது, எடுக்கப் போகிறது என்ற அந்தக் கேள்வியைத்தான் அவர் கேட்க இருந்தார். அதைத்தான் அவர் சார்பில் நான் உங்களிடத்திலே கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** *அவர் என்ன கேட்கப் போகிறார் என்று தெரியும். நான் பதில் சொல்கிறேன். (குறுக்கீடு)*

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மைதீன்கான், உட்காருங்கள். மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள், என்னைப் பார்த்து பேசுங்கள். பதிலைச் சொல்லி முடியுங்கள்; அவ்வளவுதான்.*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது முதலில்* State Subject *கிடையாது. இது* Central Subject. Central Subject *என்றாலும்கூட, நம்முடைய மீனவர் நலன் கருதி, நேற்றைக்கே நம்முடைய காமராசர் துறைமுகத்தின் தலைவரைத் தொடர்பு கொண்ட நம்முடைய அரசு, என்னென்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறீர்கள் என்று கேட்டிருக்கிறது.*

*மும்பையிலிருந்து வந்த ஒரு கப்பலும், ஈரானிலிருந்து வந்த ஒரு கப்பலும்* port-*க்குள் வந்தபின், இரண்டுமே திரும்பும்போதுதான் இந்த* accident *நடந்தது. (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள். நான் சொல்வதைக் கேளுங்கள். திரும்பும்போது* accident *ஆகிவிட்டது. நல்லவேளையாக மும்பையிலிருந்து வந்த கப்பல்* cargo-*இல் இடிபட்டிருந்தால் நிறைய* oil spillage *ஏற்பட்டிருக்கும். ஆனால், என்ன நடந்தது என்றால்,* cargo spill *ஆகவில்லை. உண்மை என்னவென்றால்,* residual fuel-*லில் இருந்து 1 டன் எண்ணெய்தான்* leak *ஆகியிருக்கிறது. இந்த 1 டன்* crude oil leak *ஆனவுடனே* sea water *உடன்* mix *ஆகி,* float *ஆகிவிட்டது. கடல்வாழ் உயிரினங்கள் சுவாசிப்பதற்கு ஆக்சிஜன் தேவை.* Oil spillage *ஆனதினால் அவற்றால் ஆக்சிஜனை எடுத்துக்கொள்ள முடியவில்லை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதைத்தான் சொல்கிறேன்.*





*முற்பகல் 11-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உங்கள் உறுப்பினர் கேட்ட கேள்விக்கு அமைச்சர் பொறுப்பெடுத்து பதில் சொல்கிறாரே! அதைக் கேட்பதற்கு பொறுமை இல்லையென்றால் என்ன செய்வது? மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** Kamarajar Port-*னுடைய* Chairman- *இடம் நேற்றே பேசி விட்டோம். இன்றைக்கு நம்முடைய மீன் வளத் துறை அதிகாரிகள் மற்றும் மாவட்ட ஆட்சியர் கலந்துகொள்ளும் ஒரு கூட்டம் நடந்துகொண்டிருக்கிறது. அந்தக் கூட்டத்தில்* Kamarajar Port-*னுடைய* Chairman- *இடமும் நம்முடைய அரசின் சார்பில் வலியுறுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது. இயல்பு நிலை திரும்புவதற்கு, மீனவர்கள் தங்கள் தொழிலுக்குத் திரும்புவதற்கு கிட்டத்தட்ட 10 நாட்கள் ஆகும். எனவே, அந்த 10 நாட்களுக்கு மீனவர்களின் தொழில், மீனவர்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டதால் அவர்களுக்கு வேண்டிய உதவிகளை எல்லாம் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். கப்பலுக்கு* insurance *இருப்பதினால் அதுகுறித்து கவலைப்படத் தேவையில்லை. கப்பலின் அதிபர்களையும் அழைத்துப் பேசுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் நிச்சயமாக எடுக்கப்படும். (குறுக்கீடுகள்) நிவாரணத்தைச் சொல்லிவிட்டேன்.* Port Chairman *இடம் இந்த எண்ணெய் படலத்தை முழுமையான அளவுக்கு எடுக்குமாறு சொன்னோம். எண்ணெய்* leak *ஆனவுடன் கப்பலைச் சுற்றி* oil ring form *ஆனதால் அந்த* ring-*ஐ கிட்டத்தட்ட முழுவதுமாக* first instance-*ல் எடுத்திருக்கிறார்கள்.* Oil *எல்லாம் எண்ணூரிலிருந்து திருவான்மியூர் வரை* spread *ஆகியிருக்கிறது. ராமகிருஷ்ணா நகரில்தான் அதிகமான அளவுக்கு குவிந்திருக்கிறது. கிட்டத்தட்ட 5,000 லிட்டர்* oil-*ஐ எடுத்து இப்போது* complete *ஆக* M.R.L-*க்கு நாங்கள் அனுப்பியிருக்கிறோம்.* Oil Dispersing Agent *என்ற ஒன்று*

[திரு. டி. ஜெயக்குமார்] [2017 ஜனவரி 31

*இருக்கிறது. அந்த* Agent-*ஐ நாங்கள்* Central Government-*இடம் கேட்டிருக்கிறோம். அந்த* Agent *வந்தவுடன் இன்னும் ஓரிரு நாட்களில் இந்தப் பிரச்சினை முழுமையாகச் சரி செய்யப்பட்டு விடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடுகள்) அதேபோன்று இன்று காலை. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர்கள், அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள், அமைதியாக இருங்கள்.*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** *இதுகுறித்து அங்கு* lower level-*ல் ஒரு கூட்டம் நடைபெற்றது. இப்போது நம்முடைய* Chief Secretary *தலைமையில் எல்லா துறை சார்ந்த அதிகாரிகளையும் வைத்து ஒரு கூட்டம் நடைபெறவுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய மீனவர்களுடைய வாழ்வாதாரம் பாதிக்காத வகையில், நிச்சயமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு மருத்துவ அறிவியல் இளநிலை மற்றும் பல் மருத்துவ இளநிலை படிப்புகள் சேர்க்கைக்கான சட்டமுன்வடிவு, 2017

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவ அறிவியல் இளநிலை மற்றும் பல் மருத்துவ இளநிலை படிப்புகள் சேர்க்கைக்கான சட்டமுன்வ டிவு. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*“2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவ அறிவியல் இளநிலை மற்றும் பல் மருத்துவ இளநிலை படிப்புகள் சேர்க்கைக்கான சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”*

*எனக் கோருகிறேன்.*



2017 ஜனவரி 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)*

*மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*(மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

### (ஆ) தமிழ்நாடு மருத்துவம் மற்றும் பல் மருத்துவத்தில் முதுநிலைப் பட்டப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டமுன்வடிவு, 2017

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவம் மற்றும் பல் மருத்துவத்தில் முதுநிலைப் பட்டப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*“2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவம் மற்றும் பல் மருத்துவத்தில் முதுநிலைப் பட்டப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*(மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (இ) தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைத் (ஒழுங்குமுறைப்படுத்தும்) திருத்த சட்டமுன்வடிவு, 2017

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைத் (ஒழுங்குமுறைப்படுத்தும்) திருத்த சட்டமுன்வடிவு. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைத் (ஒழுங்குமுறைப்படுத்தும்) திருத்த சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*



*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*(மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

*முற்பகல் 11-40*

## (ஈ) தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2017

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (உ) தமிழ்நாடு பிழைப்பூதியம் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2017

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிழைப்பூதியம் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிழைப்பூதியம் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.



## 5. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். நடராஜ் அவர்கள்.

***திரு. ஆர். நடராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொடைஅளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்
உடையான்ஆம் வேர்ந்தர்க்கு ஒளி"

என்ற வள்ளுவரின் வாக்கிற்கேற்ப, கொடுக்கும் தன்மை, இரக்க உள்ளம், நேர்மையான ஆட்சி, குடிமக்களைப் பாதுகாத்தல் ஆகியவற்றைக் குறிக்கோள்களாகக் கொண்டு, 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்ற வள்ளலாரின் கூற்றிற்கிணங்க, தமிழக மக்களின் முன்னேற்றத்திற்காக தவ வாழ்வு வாழ்ந்து, உலகத் தமிழினத்தையே மீளாத் துயரில் ஆழ்த்திவிட்டுப் பிரிந்து சென்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

கனத்த மனத்தோடு குலைந்து நிற்கிறோம், காலனின் வரவை ஏற்க மறுக்கிறோம், பனித்த கண்களோடு மலர் தூவி மலைத்து, மறைவை மறுதலிக்கிறோம். இனி ஒரு ஜீவன் மாண்பமை அம்மாபோல் வந்ததும் இல்லை, வரப்போவதும் இல்லை என்று வியந்து மலைக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அமரர் ஆனார் அம்மா, நாடு ஒப்பற்ற தலைவரை இழந்துவிட்டது. தமிழக மக்களுக்குத் தாயாக, தகைசால் தலைவராக நல்லாட்சியும், பாதுகாப்பும் அளித்த அம்மா நம்மிடம் இல்லை. இழப்பை ஏற்க இதயம் மறுக்கிறது. அவர் கட்டிக் காத்த மாபெரும் கழகம் அனாதையாக நிற்கிறது. எல்லாம் ஒரு நொடிப்பொழுதில் தோன்றி மறைந்துவிட்டன. அம்மாவின் மறைவு, தலைவர்கள், இலட்சோப இலட்சம் மக்களின் கண்ணீர் மல்கிய அஞ்சலி, கடைசி யாத்திரை, நல்லடக்கம், காட்சிகள் தோன்றி மறைந்தன. காட்சிப் பிழையாக இருக்கக் கூடாதா என்று மனம் ஏங்குகிறது. நாடே போற்றும் வகையில் தமிழகக் காவல் துறை, சென்னை மாநகரக் காவல்

மிகச் சிறப்பாகச் செயல்பட்டன. ஒரு சிறு அசம்பாவிதமும் இல்லாமல், தன்னலமின்றி கனிவோடு பணி செய்தது. இதுதான் உண்மையான போலீஸ் என்று உணர்த்தியது, அம்மா பேணிய காவல் துறையல்லவா! காவலர்கள் தமது உழைப்பால் அவர்கள் போற்றும், வணங்கும் காவல் தெய்வத்திற்கு அஞ்சலி செலுத்தினர். அதேசமயம் தமிழக மக்களைப் போற்ற வேண்டும். தமிழ் மக்கள் பொறுமைசாலிகள், எதையும் தாங்கும் இதயம் பெற்றவர்கள். அமைதியை நேசிப்பவர்கள். அவர்களது ஒத்துழைப்பால் அமைதி சாத்தியமானது. கழகத் தோழர்கள் கண்ணியத்துடனும், கட்டுப்பாட்டுடனும் நடந்து கொண்டனர். இத்தகைய கண்ணியமான உணர்வையும், நடத்தையையும்தான் விண்ணுலகம் எய்திய அம்மா அவர்கள் விரும்புவார்கள் என்று அமைதி காத்து இழப்பை ஏற்றுக்கொண்டனர். அம்மாவின் பிள்ளைகளாய் ஒழுக்கம் காத்து, அ.தி.மு.க. கட்டுப்பாடான கழகம் என்று நிரூபித்த கழகத் தோழர்களுக்கு கோடானுகோடி நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி) கழகத்தைக் கட்டிக் காத்து, வழிநடத்தும் மாண்புமிகு சின்னம்மா அவர்களுக்கு நன்றி கலந்த வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

15-வது சட்டமன்றத்தின் மாண்புமிகு ஆளுநரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேசுவதற்கு இரண்டாவது முறையாக எனக்கு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அதை பெருமையாகக் கருதுகின்றேன். வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறுகிறேன். ஆளுநர் உரையில் 42 அம்சங்கள் உள்ளன. மாண்புமிகு அம்மா அவர்கள் தொலைநோக்குப் பார்வை, 2023-ல் என்ன சொல்லியிருக்கிறார்களோ, அதை நிறைவேற்ற வேண்டிய தருணத்தில் அம்மாவின் அரசு உள்ளது. 'வளர்ந்த நாடுகளின் வெற்றிக்குக் காரணம் உழைப்புதான். உழைப்பு என்னும் மரத்தின் வேர்கள் கசப்பாக இருக்கலாம், ஆனால், அதன் கனிகள் இனிப்பானவை. உழைப்பு மட்டுமே நம்மை உயர்த்தும். உங்கள் அன்புச் சகோதரியாகிய நான், நாள் ஒன்றுக்கு 20 மணி நேரம் உழைக்கின்றேன்' என்று நமது அரசியல் வழிகாட்டி, இதய தெய்வம் அம்மா அவர்கள் கூறியதை பொன்மொழியாக நினைவுபடுத்த விரும்புகின்றேன். தமிழக மக்களுக்காக, தமிழ்நாட்டின் மேம்பாட்டிற்காக, தொலைநோக்குப் பார்வையோடும், சமூக அக்கறையோடும் ஆளுநர் உரையின் ஒவ்வோர் அம்சமும் உருவாக்கப்பட்டுள்ளது.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூக வளர்ச்சிக்கு சட்டம்-ஒழுங்கைப் பராமரிப்பது மிக அவசியம். சாதி மதவாத பிரச்சினைகள் எதுவும் தலைதூக்காவண்ணம் கண்காணிக்கப்படுகின்றன. அண்டை மாநிலங்களில் பரவியுள்ள மாவோயிஸ்ட் தீவிரவாத பிரச்சினைகளை நமது மாநிலத்தில் அண்டவிடாமல் தீவிர நடவடிக்கையை அரசு சிறப்பாக எடுப்பதால், அமைதியான மாநிலமாகத் திகழ்கிறது தமிழகம்.

முற்பகல் 11-45

மத்திய குற்ற ஆவண ஆணையத்தின் 2015 ஆம் ஆண்டிற்கான தொகுப்பில் பொது அமைதியைப் பாதிக்கும் நிகழ்வுகள் தமிழகத்தில் மிகவும் குறைவு. 3,985 மட்டுமே. ஆனால், அதுவே, கர்நாடகாவில் 7,224 வழக்குகள், கேரளாவில் 6,981 வழக்குகள், மகாராஷ்டிராவில் 10,579 வழக்குகள் உள்ளன. அதனால்தான் சட்டம்-ஒழுங்கைப் பராமரிப்பதில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது. 'சிட்டுக் குருவிக்கென்ன கட்டுப்பாடு' என்று இளம் காளைகளாக இளைஞர்கள் 'ஜல்லிக்கட்டுக்கு மல்லுக்கட்டுவோம்' என்று மெரினாவில் கூடினர். சென்னையில் எங்கு கூட்டம் கூடினாலும், ஒலிபெருக்கி வைத்தாலும் அனுமதி பெற வேண்டும். அதில்லாமலேயே கூடினர். ஆயினும், காவல் துறை அவர்களது நோக்கம் பெரிது என்று, அவர்களது போராட்டத்திற்கு ஒத்துழைப்பு நல்கினர். வரலாறு காணாத வகையில் அரசு துரித நடவடிக்கை எடுத்து, அவசரச் சட்டம் பிறப்பித்ததோடு, உரிய சட்டத்தையும் சட்டசபையில் நிறைவேற்றியது. அதன்பிறகு போராட்டம் முடிவுக்கு வந்திருக்க வேண்டும். தமிழக இளைஞர்கள் தங்கமானவர்கள். போராட்டம் என்றால் சிங்கமாக வளைய வருவார்கள். ஆனால், வந்தவர்களிடையே கலகக்காரர்களின் ஊடுருவலால் வன்முறை வெடித்தது. தமிழகக் காவலனும் தங்கம். முரட்டுத்தனமான முட்டாள்தனமா, முரட்டுத்தனமான புத்திசாலித்தனமா என்றால், குருட்டுத்தனமாக வன்முறையில் ஈடுபடும் முரடர்களை முரட்டுத்தனமில்லா புத்திசாலித்தனத்துடன் சரிக்கட்டி, அமைதி காத்து, சமுதாயத்தைத் தாங்கும் சிங்கம் தமிழகக் காவலன். ஆனால், சட்டத்தை மீறுபவர்களுக்கு சிம்ம சொப்பனம். சட்டம்-ஒழுங்கை நிலைநாட்டுவதில் தமிழகக் காவல் துறைக்கு நிகர் வேறு எந்த மாநிலக் காவலும் ஈடாகாது. (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒருபோதும் அமைதிக்கு குந்தகம்

[திரு. ஆர். நடராஜ்] [2017 ஜனவரி 31

விளைவித்தால் பொறுக்க மாட்டார்கள். உடனடி இயல்பு நிலை திரும்ப வேண்டும். கலகக்காரர்களைக் கைது செய்து, சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதில் கண்டிப்பாக இருப்பார்கள். அதில் பயிற்சிபெற்ற தமிழகக் காவல் துறைக்கு, வன்முறையை அடக்க நடவடிக்கை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. எப்போது, எந்தத் தருணத்தில் பலப்பிரயோகம் செய்வது என்பது எப்படி முடிவெடுத்தாலும் பிரச்சினைக்குரியது.

மும்பையில் 2012 ஆம் ஆண்டு, எம்.என்.எஸ். கட்சியின் தடை மீறிய பேரணியில், உகந்த நேரத்தில் பலம் உபயோகிக்காததால் வன்முறை வெடித்தது. 2008 மற்றும் 2015 ஆம் வருடங்களில் இராஜஸ்தானில் குஜ்ஜர் பேரணி,, 2016-ல் ஹரியானா மாநிலத்தில் ஜாட் பிரிவினரின் இட ஒதுக்கீடு போராட்டம் மற்றும் 2012-ல் பீஹாரில் ரண்வீர் சேனா கட்டவிழ்த்த வன்முறை. இவை எல்லாவற்றிலும் காவல் துறை தாமதமாகச் செயல்பட்டதால், வன்முறையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. பீஹாரில் வன்முறையின்போது காவல் துறை நடவடிக்கை எடுக்கவில்லை. வீடியோ படம் எடுத்து, சேதாரமான பிறகு வழக்குப் பதிவு செய்வது என்ற அணுகுமுறை மிகப் பெரிய சர்ச்சையைக் கிளப்பியது. ஆனால், நமது காவல் துறை இம்மாதிரி தயங்காமல், துவளாமல், துணிச்சலான நடவடிக்கை எடுத்ததால் சில மணி நேரங்களுக்குள் நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) இயல்பு வாழ்க்கை மறு நாளே திரும்பியது. இதனை உறுதிசெய்த காவல் துறையின் நடவடிக்கை மெச்சத்தக்கது, பாராட்டத்தக்கது.

‘முட்டை உடைந்தால் ஜனனமா, மரணமா, பிறப்பா, இறப்பா’ என்ற கேள்விக்கு ‘உள்ளிருந்து உடைந்தால் பிறப்பு, வெளியிலிருந்து உடைத்தால் மரணம்.’ சட்டம்-ஒழுங்குப் பிரச்சினையைக் கையாள்வதில் சமூக விரோதிகளைக் களைந்து, உள்ளிருந்து அமைதி என்ற ஜீவனை எப்போதும் பாதுகாக்கும் தமிழகக் காவல் துறை, போற்றுதலுக்குரியது. (மேசையைத் தட்டும் ஒலி) அமைதிப் போராட்டம் நடத்தி, ஜல்லிக்கட்டு காளைகளை வளையவர வழிசெய்த மாணவச் செல்வங்களுக்கு வாழ்த்துகள். உலகிற்கே முன்னோடியாகத் திகழ்ந்து, “நான் வீழ்வேன் என்று நினைத்தாயோ” என்ற பாரதியாரின் கூற்றை நினைவாக்கிக் காட்டினர் நமது இளைஞர்கள். மீண்டும், அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2017 ஜனவரி 31] [திரு. ஆர். நடராஜ்]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

Great minds discuss ideas
Average minds discuss events
Small minds discuss people

என்றார் மனித உரிமைகளை வடிவமைத்த ‘எலினா ரூஸ்வெல்ட்’ அவர்கள். பெருந்தன்மையான மனம் கொண்ட புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கு நிருவாகக் கொள்கைகளாக நீராதார மேலாண்மை, ஏழைகளுக்கு வீட்டு வசதி, வறுமை ஒழிப்பு, திறன் மேம்பாடு மற்றும் பொதுச் சுகாதாரம் என்ற State missions, ஐந்து இயக்கங்களையும், பதினொன்று சிறப்பு நோக்குத் திட்டங்களையும் வடிவமைத்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்தின் நிலைத்த, நீடித்த மேம்பாட்டிற்காக, தொலைநோக்குப் பார்வையோடு சிந்தித்துக் கொண்டுவந்த திட்டமே Vision-2023 ஆகும்.

தமிழ்நாட்டை இந்தியாவிலேயே வளமைமிக்க, முன்னேற்றம் நிறைந்த, வறுமை இல்லாத மாநிலமாகவும்; நவீன சமுதாயத்தின் அனைத்து அடிப்படை வசதிகளையும் மக்கள் அனுபவித்து வருகின்ற மாநிலமாகவும்; சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத சூழ்நிலையில் மக்கள் வாழ்கின்ற மாநிலமாகவும் உருவாக்குவதே அதன் நோக்கமாகும். மாநிலத்தில் 15 இலட்சம் கோடி ரூபாய் முதலீட்டில் மாநிலத்தின் முக்கிய கட்டமைப்புகளை மேம்படுத்தும்விதமாக துறை வாரியான அணுகுமுறைகளையும், 6 முக்கிய துறைகளில் மேற்கொள்ளப்படவுள்ள 217 உட்கட்டமைப்புத் திட்டங்களைப் பற்றிய விவரங்களையும் இந்த ஆவணம் தெளிவுபடுத்துகிறது. இதில் 88 திட்டங்கள் ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளன. மேலும், 24 திட்டங்களுக்கு விரிவான திட்ட அறிக்கைகள், விரிவான சாத்தியக்கூறு ஆய்வறிக்கைகள் தயார் செய்யப்பட்டு, துவங்கும் நிலையில் உள்ளன. தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தையும், தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி மேலாண்மை கழகத்தையும் உருவாக்கி செயல்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. இம்முறை இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டிலே உருவாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் Vision 2023-ன்படி இந்த ஆண்டுக்குள் அனைவருக்கும் பயனளிக்கும் விதத்தில் தரமான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த அம்மாவின் அரசு முனைப்போடு செயல்பட்டுவருவது பாராட்டுக்குரியது.

[திரு. ஆர். நடராஜ்] [2017 ஜனவரி 31

முற்பகல் 11-50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகள்தான் நவீன கோயில்கள். பொதுச் சேவைகளின் தரம், சிறப்பான சட்டம்-ஒழுங்கு பராமரிப்பு, நன்கு படித்த ஆரோக்கியமுள்ள தொழிலாளர்கள், தரமான சாலைகள், மின்வசதி மற்றும் இதர சேவைகள் திறம்பட இயங்குவதன் அடிப்படையில் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் ரூபாய் 2,42,160 கோடி முதலீட்டு ஒப்பந்தங்களைத் தொடர்ந்து, 62 திட்டங்கள் செயலாக்கத்தில் உள்ளன. 9,775 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய 3,636 கோடி ரூபாய் மதிப்புள்ள ஏழு திட்டங்கள் துவக்கப்பட்டுவிட்டன என்பது சாதனை. சுலபமாகத் தொழில் செய்ய வழிவகை, ease of doing business என்ற குறியீட்டில் தமிழகம் முன்னேறி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வளர்ச்சிப் பணிகளுக்கும், நலத் திட்டங்களுக்கும் நிதி ஆதாரம் தேவை. இந்நிலையில், 14-வது நிதிக் குழு, தமிழ்நாட்டிற்கு முன்பிருந்த நிதிப்பகிர்வைவிட 19.04 சதவீதம் அளவிற்கு குறைத்துள்ளது. இதனால் தமிழக அரசின் நிதிநிலைமை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. மத்திய வரிப் பகிர்வில் 2,000 கோடி ரூபாய் நிதியுதவியை இந்த நிதிக் குழு காலத்தில் ஆண்டுதோறும் வழங்கவேண்டும் என்ற கோரிக்கை demonetisation தாக்கத்தால் வரி வருவாய் வளர்ச்சி குறைந்ததற்கு ஈடாக மத்திய அரசின் உதவிபெறும் திட்டங்களுக்கான மத்திய அரசின் பங்கினை 60 சதவிகிதத்திலிருந்து 90 சதவிகிதமாக உயர்த்த கோரிக்கை, சரக்கு மற்றும் சேவை வரி செயலாக்கத்திற்கு வரும்போது மாநிலங்களுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு தொடர் நடவடிக்கை எடுத்தல், வர்தா புயல் பாதிப்பு மறுசீரமைப்பிற்கு 1,972.89 கோடி ரூபாய் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்கவும், நிரந்தர கட்டுமானப் பணிகளுக்கு 20,600.37 கோடி ரூபாய் வழங்கவும் கோரிக்கை, 140 ஆண்டுகளில் இல்லாத மோசமான வறட்சிக்கு நிவாரணமாக 39,565 கோடி ரூபாய் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்க கோரிக்கைகள் இவை அனைத்தையும் நிச்சயமாக புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு போராடிப் பெற்று பெருமை சேர்க்கும் என்பது ஆளுநர் உரையிலிருந்து தெளிவாகிறது.



2017 ஜனவரி 31] [திரு. ஆர். நடராஜ்]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இ-சேவை மையங்களை ஏற்படுத்தியிருப்பது இந்த அரசின் மாபெரும் முன்னோடித் திட்டமாகும். தமிழக மக்கள் V.A.O. Office, R.I. Office, Taluk Office என அரசு அலுவலகங்களின் படியை ஏறாமல், அரசின் 126 சேவைகளை, தமிழகமெங்கும் உள்ள 10,026 இ-சேவை மையங்கள் மூலமாகவே பெற்றுக்கொள்ளலாம். இம்மையங்கள்மூலம் இதுவரை சுமார் 84,51,000 நபர்கள் பயன்பெற்றுள்ளனர். இந்த உன்னதமான திட்டத்தைச் செயல்படுத்த நாட்டிலேயே மிக அதிகமான சேவை மையங்களை உருவாக்கியது தமிழகம் மட்டுமே. (மேசையைத் தட்டும் ஒலி) இம்மகத்தான சாதனையைப் பாராட்டி 2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் மிகச் சிறந்த மின்னணு முயற்சிகளுக்கான “Digital India” விருதினை மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு வழங்கியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசால் கொண்டுவரப்பட்டுள்ள சரக்கு மற்றும் சேவை வரி செயல்திட்டத்தில் தமிழகத்திற்கு ஒரு வருடத்திற்கு இழப்பீடு மட்டும் ரூ.9,200 கோடி என்ற புள்ளிவிவரத்தைக் கூறி, நமது அரசு பிரதமரிடம் போராடி வந்தது. அதன் விளைவாக மத்திய அரசின் பிரதிநிதிகள், சரக்கு மற்றும் சேவை வரி மன்ற உறுப்பினர்களாகிய பிற மாநிலங்களும் நமது கருத்துகளை வரவேற்று, இவ்வரி விதிப்புச் சட்டத்தில் சில மாற்றங்களைக் கொண்டுவந்து, சரிசெய்தது மகிழ்ச்சியளிக்கிறது. சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பினால் தமிழகத்திற்கு ஏற்படும் இழப்பினை 5 ஆண்டுகளுக்கு முழுமையாக ஈடுசெய்ய மத்திய அரசு உறுதியளித்துள்ளது. 2015-2016 ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு, ஆண்டுக்கு 14 சதவிகித வளர்ச்சியைக் கணக்கிட்டு, அதன் அடிப்படையில் இழப்பீடு வழங்குவது, சரக்கு மற்றும் சேவை வரிச் சட்டங்களை மத்திய-மாநில அரசுகள் சம அதிகாரத்துடன் நிருவகிப்பது என நமது அரசு உரிமையை நிலைநாட்டி சாதித்துக் காட்டியுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் இந்தியாவிலேயே முதன்முறையாக விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டத்தை அறிமுகம் செய்து, செயல்படுத்தினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தின்மூலம் கிராமப்புற ஏழை, எளிய மக்கள், குறிப்பாக, பெண்கள், பொருளாதார அதிகாரம் படைத்தவர்களாக மாற்றம் அடைந்து வருகின்றனர். கடந்த 5

[திரு. ஆர். நடராஜ்] [2017 ஜனவரி 31

ஆண்டுகளில் 211.02 கோடி ரூபாய் செலவினத்தில் 60,000 பெண்களுக்கு 60,000 கறவைப் பசுக்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் உருவான 75,796 கன்றுகளின் மதிப்பு சுமார் ரூபாய் 37.89 கோடியாகும். இதன்மூலம் தினமும் 2.66 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகிறது. 1,190 புதிய பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் மாண்புமிகு அம்மா அவர்கள் இரண்டாம் வெண்மைப் புரட்சிக்கு வித்திட்டுள்ளார்கள்.

முற்பகல் 11-55

மேலும், கடந்த 5 ஆண்டுகளில் 905.82 கோடி ரூபாய் செலவினத்தில் விலையில்லா வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தை அறிவித்து, 7 இலட்சம் பயனாளிகளுக்கு 28 இலட்சம் வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன. காங்கேயம், உம்பளாச்சேரி, பிலக்குளம், பர்கூர், ஆலம்பாடி மற்றும் தோடா ஆகிய நாட்டின மாடுகளின் பாதுகாப்பினை அரசு தொடர்ந்து சிறப்பாக மேற்கொண்டு வருகிறது. இப்பொன்னான திட்டத்தின்மூலம் கிராமப்புற ஏழையெளிய மக்கள் பொருளாதார ஏற்றம் பெற்று வாழ்கின்றனர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள ஏழையெளிய மக்களுக்கு அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலமாக நவீன மருத்துவ வசதிகள் வழங்கப்பட வேண்டும் என்பதற்காகவும், அனைவருக்கும் மருத்துவ வசதி கிடைக்க வேண்டும் என்பதற்காகவும் மாண்புமிகு அம்மா அவர்களால் தொடங்கப்பட்ட முக்கியமான திட்டங்களில் மருத்துவக் காப்பீட்டுத் திட்டமும் ஒன்றாகும். இத்திட்டத்தில் 1,016 வகையான சிகிச்சை முறைகள், 23 முக்கிய பரிசோதனைகள் மற்றும் 113 தொடர் சிகிச்சை முறைகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இதுவரை 1.58 கோடி காப்பீட்டு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்மூலம் 15.71 இலட்சம் பயனாளிகள் ரூ.3,251.12 கோடி செலவில் இன்றுவரை பயனடைந்துள்ளார்கள். காப்பீட்டு அட்டை இல்லாத நபர்களுக்கு சட்டமன்ற உறுப்பினர் தரும் பரிந்துரைக் கடிதங்களையே ஆவணமாக வைத்து, சென்னையிலுள்ள Multi Speciality Hospital சிகிச்சை அளித்து வருகிறது. அவர்களுக்கு என்னுடைய இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2017 ஜனவரி 31] [திரு. ஆர். நடராஜ்]

மேலும், உடலுறுப்பு தானம் செய்யும் திட்டத்தில் தமிழகம் முதலிடம் பெற்று, மத்திய அரசின் விருதினை இரண்டாவது முறையாகப் பெற்றுள்ளது. இறந்தவரின் உடல் உறுப்புகளை மாற்று சிகிச்சைக்கு உடனடியாக மருத்துவமனைக்கு எடுத்துச் செல்வதற்கு காவல் துறை சிறப்பாக உதவி செய்வது பெருமை அளிக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1-6-2011 முதல் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களால் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லா அரிசி வழங்கப்பட்டு வருகிறது. தேசிய உணவுப் பாதுகாப்பு சட்டத்தோடு, அனைத்து அரிசி அட்டைதாரர்களுக்கும் வேறுபாடின்றி அனைவருக்குமான பொது விநியோகம் செயல்படுத்தப்படும் என்பது பாராட்டுக்குரியது. தமிழகத்தில் 2 கோடியே 3 இலட்சத்து 64 ஆயிரம் குடும்ப அட்டைகள் நடைமுறையில் உள்ளன. கடந்த 5 ஆண்டுகளில் 16,20,128 புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு கணினிமயமாக்கல் மற்றும் மின்னணு குடும்ப அட்டை (smart card) வழங்குதல் 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் ஒன்றாம் தேதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் என்ற அறிவிப்பு போற்றுதலுக்குரியது. இத்திட்டம் கணினிமயமாக்கப்பட்டுள்ளதால், குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகிக்கப்படும் பொருட்களின் விவரம் மற்றும் தொகையை தங்கள் வீடுகளிலிருந்தே அவர்கள் அறிந்துகொள்ள முடிகிறது. மேலும், நியாய விலைக் கடை பணியாளரின் பணி நேரம், கடைகளில் இருப்பிலுள்ள பொருட்களின் விவரம் போன்றவற்றையும் online மூலம் அறிந்துகொள்ள முடிகிறது. இதன்மூலம் வெளிப்படைத்தன்மை உறுதி செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாட்டின் பொருளாதார வளர்ச்சியை குறிக்கோளாகக் கொண்ட நாம் மின் துறையை விட்டுவிட்டு குறிக்கோளை அடைய முடியாது. பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் அத்தியாவசியமான ஒன்றாக எரிசக்தி உள்ளது. மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் கொண்டு வந்துள்ள தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம், 2023 ஆவணத்தில், மாநிலத்தின் எரிசக்தித் துறைக்கு பெரும் முதலீடு ஒதுக்கப்பட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டில் சராசரியாக ஒரு நாளைய மின்சார பயனீடு 200 மில்லியன் யூனிட் அளவாக இருந்தது. 2016

[திரு. ஆர். நடராஜ்] [2017 ஜனவரி 31

ஆம் ஆண்டில் அது 300 மில்லியன் யூனிட் அளவாக உயர்ந்துள்ளது. அதே ஆண்டில் தமிழ்நாடு உச்சகட்ட மின் தேவையான 15,343 மெகா வாட் அளவையும் மற்றும் உச்ச மின் பயனீட்டளவான 345.617 மில்லியன் யூனிட் அளவையும் பூர்த்தி செய்து சாதனை படைத்துள்ளது. மத்திய மின்சார ஆணையம் வெளியிட்டுள்ள மின் தேவை, மின் உற்பத்தி சமன்பாட்டு அறிக்கையில், 2016-2017 ஆம் ஆண்டில், 11,649 மில்லியன் யூனிட் அளவிற்கு கூடுதலாக மின் உற்பத்தி செய்து மின்மிகை மாநிலமாக தமிழகம் திகழும் என்று திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், அம்மா அவர்களின் ஆணையின்படி, அனைத்து வீட்டு மின் நுகர்வோர்களுக்கும் தற்போதைய கணக்கீட்டு முறையில் 100 யூனிட் மின்சாரம் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி, 190.90 இலட்சம் வீட்டு மின் நுகர்வோர்கள் பயனடைந்து வருகின்றனர்.

மேலும், கைத்தறி நெசவாளர்களுக்கு கட்டணமில்லா 200 யூனிட் மின்சாரமும், விசைத்தறி நெசவாளர்களுக்கு கட்டணமில்லா 750 யூனிட் மின்சாரமும் வழங்கப்பட்டு வருகின்றது. இதன்மூலம் 78,378 கைத்தறி நெசவாளர்களும் 98,712 விசைத்தறி நெசவாளர்களும் பயனடைந்து வருகின்றனர்.

மேலும், அடுத்த 5 ஆண்டுகளில் புனல் மின் திட்டத்தின்மூலம் 2,500 மெகா வாட் மின்சாரமும், அனல் மின் திட்டத்தின்மூலம் 13,000 மெகா வாட் மின்சாரமும் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. "எங்கும் மின் விளையும், என் வீடும் மின் நிலையம்" "எங்கும் மின் விளையும், என் வீடும் மின் நிலையம்" என்று எல்லா இடங்களிலும் சூரிய சக்திமூலம் மின்சார உற்பத்தியில் உன்னத நிலையை அடைவோம்.

நண்பகல் 12-00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செப்டம்பர் 21 ஆம் தேதி, கடைசி நிகழ்ச்சியாக, சின்னமலை முதல் விமான நிலையம் வரையிலும், ஆலந்தூர் முதல் பரங்கிமலை வரையிலும், உயர்த்தப்பட்ட வழித்தடத்தில் மெட்ரோ இரயில் சேவையை மக்கள் பயனுக்கு



2017 ஜனவரி 31] [திரு. ஆர். நடராஜ்]

அர்ப்பணித்தார்கள். MRTS (Mass Rapid Transit System) Project-ஐயும், Metro Project-ஐயும் இணைக்கும்பொழுது, இந்த ஆண்டின் இறுதிக்குள் ஒரு நீண்ட தூர மெட்ரோ இரயில் சேவை கிடைக்கும். மேலும், மாண்புமிகு அம்மா அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்ட வண்ணாரப்பேட்டைக்கும், திருவொற்றியூர் விம்கோ நகருக்கும் இடையேயான பணிகள் நிறைவடைந்து சேவை தொடங்கினால், இந்தியாவிலேயே மிகச் சிறந்த மெட்ரோ இரயில் சேவையில் தமிழகம் முன்னோடியாகத் திகழும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களை குலுக்கிப் போட்ட 'வர்தா' புயலால் சாலையில் விழுந்த மரங்கள், மின் கம்பங்கள் போர்க்கால அடிப்படையில் அகற்றப்பட்டன. போக்குவரத்திற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் சீர்படுத்த சீரிய நடவடிக்கைகளை அம்மா அவர்களின் அரசு மேற்கொண்டது பாராட்டுக்குரியது.

மேலும், புயலால் மயிலை தொகுதி பெரும் பாதிப்பிற்குள்ளானது. கடலோரப் பகுதி மீனவர் குடியிருப்புகளுக்கு உடனடி நிவாரணமும், சேதமடைந்த மீன் பிடி வலை, படகுகள், கட்டுமரம் இவற்றிற்கு மூன்று மாவட்ட கடலோரப் பகுதி மீனவர்களுக்கு இழப்பீடாக 19 கோடி ரூபாயும் போர்க்கால அடிப்படையில் ஆய்வு செய்து அளித்தமைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மரங்களுக்கு ஏற்பட்ட பாதிப்பினைச் சீர் செய்ய மரக்கன்றுகள் நடுவது மற்றும் பசுமைப் பரப்பை அதிகரிப்பது போன்றவை அவசியமாகிறது. இப்பணியினை மாண்புமிகு அம்மா அவர்களின் 69-வது பிறந்த நாளான வரும் 24-2-2017 அன்று துவங்குவதாக அரசு அறிவித்துள்ளது மிகவும் வரவேற்கத்தக்கது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் வளர்ச்சிக்காக பல புதிய திட்டங்கள் வகுக்கப்பட்டது பெருமையளிக்கிறது. சீனம், அரபு மொழிகளில் திருக்குறள், பாரதியார், பாரதிதாசன் பாடல்களை மொழிபெயர்க்க நிதியொதுக்கீடு; பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு கவிதை, கட்டுரை, பேச்சுப்போட்டி நடத்தி பரிசுகள் வழங்குதல்; (மணியடிக்கப்பெற்றது) ஐந்து நிமிடங்களில் என்னுடைய உரையை

[திரு. ஆர். நடராஜ்] [2017 ஜனவரி 31

முடித்துவிடுகிறேன். சித்திரை திங்களில் தமிழ் அமைப்புகளை, சங்கங்களை ஊக்கப்படுத்தி ரூபாய் 5 இலட்சம் பரிசுத் தொகையுடன் தமிழ்த்தாய் விருது; ஆண்டுதோறும் 32 பேருக்கு தமிழ்ச் செம்மல் விருது; சிறந்த மகளிர் இலக்கியம் படைக்கும் மகளிருக்கு ஆண்டுதோறும் ‘அம்மா இலக்கிய விருது’; தமிழறிஞர்களுக்குப் புதிதாக கபிலர், கம்பர், உ.வே.சா., ஜி.யு. போப், உமறுப் புலவர், இளங்கோவடிகள், சொல்லின் செல்வர் ஆகியோர் பெயர்களில் விருதுகள், முதலமைச்சர் கணினித் தமிழ் விருதுடன் தங்கப் பதக்கம் மற்றும் ரூபாய் ஒரு இலட்சம் வழங்கப்படுகிறது.

மேலும், தமிழுக்கு மகுடம் சூட்டுவதுபோல், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில், கடந்த 1-8-2016 அன்று, மக்களவையில் மத்திய அரசால் கொண்டு வரப்பட்ட சட்டமுன்வடிவில் உரிய திருத்தங்களைக் கொண்டுவந்து சென்னை உயர் நீதிமன்றத்தை ‘தமிழ்நாடு உயர் நீதிமன்றம்’ என்று பெயர் மாற்றம் செய்ய தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், மத்திய அரசின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக தமிழ் மொழியை அறிவிக்கவும், சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்காடு மொழியாகத் தமிழ் மொழியைப் பயன்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அம்மா அவர்களின் அரசு மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நியுயார்க் டைம்ஸ் பத்திரிகை ஆய்வில், சுற்றுலாத் தலங்களில் முக்கியமான 52 நகரங்களில் சென்னை ஒன்றுதான் இந்தியாவிலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளது. தமிழகத்திற்கு இது மிகப் பெரிய பெருமை. பொருளாதாரம், போக்குவரத்து, பொதுச் சேவை, மருத்துவ வசதி, பாதுகாப்பு ஆகியவற்றின் அடிப்படையில் இந்த ஆய்வு நடத்தப்பட்டது. சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம், தஞ்சாவூர் மற்றும் வேலூர் ஆகிய நகரங்களில் திறன்மிகு நகரங்கள் திட்டத்தில் உயரிய கட்டமைப்புகள், நவீன வசதிகள் நிறுவப்படும். சென்னைக்கு தியாகராயநகர் மையமாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது. சுற்றுலாத் தலமான மயிலாப்பூர் முதல்கட்ட திட்டத்தில் இணைக்கப்பட வேண்டும். திட்ட ஆய்வுக் குழுவில் சட்டமன்ற உறுப்பினருக்கும் பொறுப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



2017 ஜனவரி 31] [திரு. ஆர். நடராஜ்]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ‘ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்’ என்ற இலட்சியத்துடன், மாண்புமிகு அம்மா அவர்களின் கனவை நிறைவேற்ற, குடிசைகளற்ற கிராமங்கள், குடிசைப் பகுதிகளற்ற நகரங்கள் ஆகியவற்றை உருவாக்க அம்மாவின் அரசு தீவிர முனைப்போடு செயல்பட்டு வருகிறது. தமிழகத்தின் நகரப் பகுதிகளில் 14.63 இலட்சம் குடும்பங்கள் வசித்து வருவதாக 2011 ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பு அறிக்கை கூறுகிறது. விரைவாக அதிகரித்துவரும் குடிசைப் பகுதியில் வாழும் மக்களுக்கு உயர்தர உட்கட்டமைப்புடன்கூடிய குடியிருப்புகளைக் கட்டிக்கொடுக்க தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்று வாரியம் மற்றும் பிற அரசு அமைப்புகள் சீரிய முறையில் செயல்பட்டு வருகின்றன.

கிராமப்புறங்களில் 1,97,619 வீடுகள், நகர்ப்புறங்களில் 1,35,343 வீடுகள் 2016-2017 ஆம் ஆண்டில் கட்டுவதற்கான திட்டம் ஆளுநர் உரையில் உள்ளது வரவேற்கத்தக்கது. 42 குடிசைப் பகுதிகளைக் கொண்ட மயிலாப்பூர் குடிசைவாழ் மக்களுக்கு இது மகிழ்ச்சியூட்டும் செய்தி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசின் திட்டங்களைச் செயலாக்குவதன்மூலம் அவற்றின் பயன் மக்களுக்குச் சென்றடைவதில் பெரும் பங்கு வகிக்கும் அரசு அதிகாரிகளுக்கும், களப் பணியாளர்களுக்கும், அமைச்சுப் பணியாளர்களுக்கும் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-05

மேலும், எனது மயிலாப்பூர் தொகுதியில் நிறைவேற்றப்பட வேண்டிய கோரிக்கைகளை ஒரு சில மணித் துளிகளில் பேசி, நான் என்னுடைய உரையை முடித்துவிடுகின்றேன். மயிலாப்பூர் பகுதியில் லஸ் சர்ச் சாலை, இராமகிருஷ்ணா மடம் சாலை, கச்சேரி சாலை மற்றும் இராயப்பேட்டை நெடுஞ்சாலை ஆகிய சாலைகள் இணையும் இடத்தில் மிகப் பெரிய அளவில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. பொது மக்கள் நலன் கருதி, மேம்பாலம் அமைத்துக் கொடுக்க வேண்டுகின்றேன். மயிலாப்பூர் தொகுதியில் ரோட்டரி நகர் முதல் அடையாறு ஆறு வரை உள்ள பக்கிங்காம் கால்வாய் கழிவுகளை தூர்வாரி சுத்தம் செய்து, இரு பக்கங்களிலும் தடுப்புச் சுவர் கட்டி, மழைக் காலங்களில் ஏற்படும்

வெள்ளப் பெருக்கால் பொது மக்களுக்கு ஏற்படும் அபாயங்களைத் தவிர்க்க வழிவகை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். மயிலாப்பூர் தொகுதியை தூய்மை மயிலை ஆக மாற்ற குப்பை மற்றும் கழிவுப் பொருட்களிலிருந்து உரம் தயாரிக்கும் உரக் கூடங்கள் அமைத்துக் கொடுக்க வேண்டுகின்றேன். மயிலாப்பூர் தொகுதியில் தெருக்கள் மற்றும் சாலைகளில் வாகன நிறுத்தங்களால் ஏற்படும் நெரிசலைத் தவிர்க்க பல அடுக்கு வாகன நிறுத்த நிலையம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மயிலாப்பூர் தொகுதி முழுவதும் உள்ள மழைநீர் குழாய்களில் அடைப்புகள் உள்ளன. மழைக்காலங்களில் தண்ணீர் வடிவதில் சிக்கல் ஏற்படுகிறது. ஆகையால் அடைப்புகளை முழுமையாக அகற்றிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். மயிலாப்பூர் தொகுதியில் 42 குடிசைப் பகுதி குடியிருப்புகள் உள்ளன. இதில் பழுதடைந்த நிலையில் உள்ள கட்டடங்களை முழுமையாக இடித்துவிட்டு, புதிய குடியிருப்புகளை கட்டிக் கொடுக்கவும், பழுதடைந்த நிலையில் உள்ள குடியிருப்புகளுக்கு மராமத்துப் பணி செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன். மயிலாப்பூர் தொகுதி திருக்கோயில்களும், வழிபாட்டுத் தலங்களும் நிறைந்ததாகும். எனவே, மயிலாப்பூரை சுற்றுலாத் தலமாக அறிவித்து மேம்பாட்டுப் பணிகளை நிறைவேற்றித் தர வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது)

எனக்கு இந்த அரிய வாய்ப்பினை நல்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய சின்னம்மா அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்து விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள்.

***திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னை இந்த அவைக்கு வருவதற்கும், ஆளுநர் உரையின்மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்கும் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, எங்களுடைய வழிகாட்டி, மரியாதைக்குரிய பாசமிகு தளபதியார் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) என் வெற்றிக்காக உழைத்த கழகத் தோழர்களுக்கும், கூட்டணிக் கட்சி நண்பர்களுக்கும், எனக்கு வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கும், என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.



(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜல்லிக்கட்டு விவகாரம் கொழுந்துவிட்டு எரிந்த நேரத்தில், பிரதமரை முதல்வர் அவர்கள் உடனடியாக சந்திக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தவரும், பிரதமரைச் சந்திக்கச் சென்றபோது, முதல்வருக்கு வாழ்த்து தெரிவித்து அனுப்பியவரும், இந்த மாமன்றத்தில் ஜல்லிக்கட்டிற்காக அவசரச் சட்டம் நிறைவேற்றியபோது, உறுதியாக நின்று அதை ஆதரித்துப் பேசியவரும் எங்களுடைய செயல் தலைவர் தளபதி அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, அதே ஜல்லிக்கட்டு விவகாரத்தில் 23 ஆம் தேதி **கண்டனத்தைத் தெரிவித்தவரும் எங்கள் தலைவர் தளபதி அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) நல்லவை நடக்கின்றபோது அதைத் தட்டிக்கொடுப்பதும், மக்களுக்கு அல்லலைத் தருகின்றபோது அதைத் தட்டிக் கேட்கின்ற உறுதிமிக்க குணம் கொண்ட. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், ** என்று சொன்ன வார்த்தை, நான் சொன்னது உட்பட அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** உறுதிமிக்க குணம்கொண்ட எங்கள் தலைவர் தளபதி அவர்களுடைய தலைமையிலே இந்த மாமன்றத்தில் பணியாற்றுவதில் பெருமைகொள்கின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் ஆட்சி பொறுப்பேற்றதும், அந்த ஆட்சியால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற ஆளுநர் உரையில், அந்த ஆட்சி தொடர இருக்கின்ற 5 ஆண்டுகளில் மேற்கொள்ள வேண்டிய தொடர் நடவடிக்கைகளும், வளர்ச்சித் திட்டங்களும் இடம் பெற்றிருக்க வேண்டும். ஆனால், இந்த உரையைப் பொறுத்தவரையில், 54 பக்கங்களில் அழகான வெள்ளைத் தாளில் அடித்துத் தந்திருக்கின்றீர்களே தவிர, இந்த 5 ஆண்டுகளுக்குண்டான தொடர் நடவடிக்கைகளுக்கு எந்தவிதமான

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

குறிப்புகளும் இல்லை. ஆளுநரின் உரையைப் பொறுத்தவரையில், ஒரு சம்பிரதாயமான உரையைப் போலவே அனைவருடைய பார்வையிலும் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை, பக்கம் 12 மற்றும் 23-ல் மீனவர்களுடைய மேம்பாட்டிற்கான பல்வேறு பணிகளை இந்த அரசு எடுத்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளீர்கள். ஆனால், உண்மை நிலை என்னவென்று சொன்னால், இன்றைக்கு மீன்பிடி காலங்களில் மீன் பிடிக்க குழுவாக மீனவர்கள் செல்கின்றபோது, சில நாட்களில் 5 ஆயிரம் ரூபாய், சில நாட்களில் 50 ஆயிரம் ரூபாய், சில நாட்களில் 5 இலட்சம் ரூபாய் என்ற அளவிற்கு மீனை அவர்கள் பிடித்து வருவார்கள். ஆனால், ரூபாய் நோட்டு செல்லாது என்ற பிரச்சினையால், வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்கின்ற மீன்களையும், உள்நாட்டிலே அதிகப்படியாக விற்பனை செய்கின்ற மீன்களையும் ரொக்கப் பணம் கொடுத்து வாங்கி வியாபாரம் செய்ய முடியாத நிலையில் உள்ளதால், பிடித்துவரும் மீன்களை விற்க முடியாத நிலையிலும், மீண்டும் அவர்கள் தொழில் செய்ய முடியாத நிலையிலும் இருப்பதை இந்த அரசு அறியுமா என்பதை கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

பிற்பகல் 12-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Demonetisation வந்த பிறகு, என் அறையில் இதற்கென ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. வங்கிகளைச் சேர்ந்த அதிகாரிகளெல்லாம் அழைக்கப்பட்டார்கள். அவர்களிடம் தெளிவாகக் கூறப்பட்டது, மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதுபோல், மீனவர்களின் வாழ்வாதாரத்திற்கு, தினமும் அவர்கள் பிடிக்கின்ற மீன்களை விற்றால்தான் அவர்களுக்கு பணம் கிடைக்கும். அதுவும் டீசல் வாங்குவதற்கும், இதர செலவினங்களுக்கும் அவர்களுக்கு பணம் அவசரமாகத் தேவைப்படுமென்ற காரணத்தால், அதன் அடிப்படையில் அனைத்து lead banks அதாவது முன்னணி வங்கிகளுக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டன. அதன் அடிப்படையில் பல இடங்களில் ATM மையங்கள் திறக்கப்பட்டன. எனவே, அப்போது இருந்த அந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டுவிட்டது. இப்போது





அந்தப் பிரச்சினை இல்லையென்றுதான் கருதுகின்றேன். பிரச்சினை எந்த இடத்தில் இருக்கிறதென்று குறிப்பிட்டுச் சொல்வாரேயானால், அது குறித்து தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். அந்த இடத்திற்கு ATM Machine மற்றும் swiping machine போன்ற அனைத்தையும் அளிப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது என்றும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மீனவர் நாளொன்றுக்கு 5.00 இலட்சம் ரூபாய் மதிப்பிற்கு மீன் பிடித்து வருகிறாரென்றால், அந்த 5.00 இலட்சம் ரூபாயினை அவர் திரும்பப் பெற்றால்தான் மீன் பிடிக்கும் மீனவர்களுக்கான சம்பளங்களைக் கொடுப்பது, அவர்களுடைய படகுகளுக்கு diesel போடுவது, படகுத் தொழில் செய்வது போன்ற செலவுகளைச் செய்ய இயலுமே தவிர, 24,000 ரூபாய் எடுத்தோம், 20,000 ரூபாய் எடுத்தோம். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். வங்கியிலிருந்து எவ்வளவு பணம் எடுக்க வேண்டும் என்பது குறித்து மாநில அரசு நிர்ணயம் செய்யவில்லை. அதை மத்திய அரசுதான் நிர்ணயம் செய்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) அதிலும்கூட இப்போது சில விதிகளை தளர்த்தியிருக்கிறார்கள். Current Account-லிருந்து எடுத்துக்கொள்ளலாம், Savings Account-லிருந்து ரூபாய் 24,000 தான் வாரத்திற்கு பணம் எடுக்க வேண்டும் என்று நிர்ணயித்திருக்கிறது. அது மத்திய அரசு எடுக்க வேண்டிய முடிவு என்பது ஒன்று. (குறுக்கீடு) எனவே, அது குறித்து இங்கே கேள்வி எழுப்புவது எந்த அளவிற்கு சாத்தியம் என்று தெரியவில்லை. தேவையானால் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள் ஊருக்கு Mobile ATM எங்கெங்கு தேவைப்படுகின்றது என்று சொன்னால், அங்கு அனுப்பி வைப்பதற்கு மாநில அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள்.*

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலை ஏற்படுகின்றபோது, பல்வேறு மாநிலங்களும் தங்கள் கருத்தை வலியுறுத்தி மத்திய அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்தன. எங்கள் மாநிலத்திற்கு அதிகமாக நிதிகளை* Reserve Bank of India *மூலம் ஒதுக்கிக் கொடுக்க வேண்டும் என்ற அழுத்தத்தைக் கொடுத்தன. நம்முடைய மாநிலமாக இருக்கின்ற தமிழ்நாடு மட்டும் ஒரு கருத்து கூட சொல்லாதது ஏனென்று (மேசையைத் தட்டும் ஒலி) கேட்பதற்காகத்தான் இதை நான் கேட்கிறேன். இன்னும் இருண்ட நிலையில் இருக்கின்ற மீனவர்களைப் பாதுகாப்பதற்காக, அந்த மீனவர் பகுதியில். . . (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மறுபடியும் சொன்னதையே திரும்ப சொல்லக் கூடாது. எவ்வளவு பணம் மாநில அரசு கொடுத்தாலும்கூட,* savings account *வைத்திருக்கும் ஒருவர், ஒரு வாரத்திற்கு இவ்வளவு பணம்தான் எடுக்க முடியும்,* current account *லிருந்து இவ்வளவு பணம்தான் எடுக்க முடியும். (குறுக்கீடுகள்) இது போன்ற உச்சவரம்பை நீக்க வேண்டியது மத்திய அரசின் பொறுப்பாகத்தான் இருக்கிறது. அவற்றில் மாநில அரசு. . . (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின், திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். நீங்கள் தனியாகப் பேசினால் எப்படி? மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*





**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாராளுமன்றத்தில்கூட நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் முழுமையான அளவிற்கு இதற்கு அழுத்தம் கொடுத்திருக்கிறார்கள். பாராளுமன்றத்திற்கு வெளியேகூட அனைவரும் சேர்ந்து இதற்காக குரல் கொடுத்தது பற்றி நீங்கள் அனைவரும் பத்திரிகையில் படித்திருப்பீர்கள், உணர்ந்திருப்பீர்கள். எனவே, உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள் சொல்வதுபோல், மத்திய அரசாங்கம் இந்த விதியைத் தளர்த்தினால்தான் முழுமையான அளவிற்கு இந்தப் பிரச்சினை தீரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது தவிர, ஏற்கெனவே இந்தப் பிரச்சினை வந்தவுடன் டீசல் அளிப்பதற்குகூட, தேவையான அளவிற்குக் கடன் எடுத்துக்கொள்ளலாம்; யார் யார் அதிக அளவில் மீன்களை* procurement *செய்கிறார்களோ-*procurement of fishes, *அந்த வியாபாரிகளுக்கும்கூட மீனவர் நலன் கருதி, முன்பணம்-*Advance *கொடுக்கலாம் என்பதற்காக அனைத்து விதமான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. மீனவர்களைப் பொறுத்தவரையில், அந்தப் பிரச்சினை தற்போது இல்லையென்றுதான் கருதுகின்றேன். அவ்வாறு பிரச்சினை இருந்தால் சொல்லுங்கள், அது குறித்து நடவடிக்கை எடுக்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள்.*

*பிற்பகல் 12-15*

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டிருக்கின்ற மீனவர்களைக் காப்பதற்கு, எப்படி கூட்டுறவு வங்கிகள் இருக்கின்றனவோ அதைப்போல, மீனவர் பகுதியிலுள்ள மீனவர்கள் அனைவருக்கும் தனி வங்கி அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை (மேசையைத் தட்டும் ஒலி) எங்களது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இந்த அவையிலே வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

*அதுமட்டுமல்லாமல், அவர்களுக்கு அந்தத் தொழில்களைச் செய்வதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதைப்போல, கடன் வழங்கவும், கடனை சரியாக திருப்பிச் செலுத்தினால் வட்டியில்லாக் கடனாக வழங்கும் வகையிலும்*

[திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்] [2017 ஜனவரி 31

வங்கிகள் அமைக்கப்பட வேண்டுமென்ற கருத்தை இந்த அவையிலே நான் பதிவு செய்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வீரபாண்டியபட்டணம், கல்லாமொழி ஆகிய பகுதிகளில் 3 வருடங்களுக்கு முன்னர் தூண்டில் வளைவு அமைப்பதற்காக Tender விடப்பட்டு, ஒப்பந்ததாரரால் அங்கே பூஜை போடப்பட்டது. நாங்கள் உடனடியாக அந்தப் பகுதியில் தூண்டில் வளைவு அமைக்கப்படும் என்று நினைத்தோம். ஆனால், Tender விடப்பட்டு, 3 வருடங்களாகியும், பூஜை போடப்பட்டும் இதுவரையில் அந்தப் பகுதியில் தூண்டில் வளைவு அமைக்கப்படாத நிலை இருக்கின்ற காரணத்தால், மீனவர்கள் தவிக்கின்றார்கள். உடனடியாக தூண்டில் வளைவு அமைப்பதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் இந்த அவையில் பதிய வைக்க கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

*__மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கல்லாமொழி பகுதியிலே தூண்டில் வளைவு அமைக்கப்பட வேண்டுமென்று இங்கே குறிப்பிட்டிருக்கின்றார்கள். அதற்கு 7.70 கோடி ரூபாய் அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கிறது. இதற்கு ஆரம்ப கட்டப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கடற்கரை ஒழுங்குமுறை ஆணையத்தினுடைய முன்னனுமதி பெறுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மத்திய அரசாங்கம் அனுமதி கொடுக்க வேண்டும். மாநில அரசாங்கத்தால் அனுமதி கொடுக்கப்படுவதில்லை. C.R.A. அனுமதி கொடுக்க வேண்டியிருக்கிறது. அதற்குண்டான நடவடிக்கையை அரசு எடுத்து வருகிறது. ஆகவே, அந்த அனுமதியைப் பெற்றவுடன் இந்தப் பணி துவங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள்.



2017 ஜனவரி 31]

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 25-7-2014 அன்று தொழில் வளர்ச்சி, வேளாண்மை வளர்ச்சி, குறித்த நேரத்தில் விரைவான பயணம், எரிபொருள் சிக்கனம், பாதுகாப்பான பயணம் ஆகியவற்றை உறுதி செய்யும்வண்ணம் ரூபாய் 2,325 கோடி அளவிற்கு 15 அறிவிப்புகள் இந்தச் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டன. அதில், அறிவிப்பு எண் 5-ல் மதுரையில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் 200 கோடி ரூபாய் செலவில் மீனாட்சி மிஷன் மருத்துவமனை முதல் கப்பலூர் வரை 27 கிலோ மீட்டர் நீளத்தில் மதுரை வட்டச் சாலையை நான்கு வழிச் சாலையாக அகலப்படுத்தும் பணி அறிவிக்கப்பட்டது. இன்றைக்கு கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம், தூத்துக்குடி மாவட்டம், விருதுநகர் மாவட்டம் ஆகிய மாவட்டங்களிலிருந்து திருச்சிக்கோ, சென்னைக்கோ வர வேண்டுமென்று சொன்னால், இந்த 27 கிலோ மீட்டர் சாலையை இணைத்துத்தான் செல்ல வேண்டும். ஆனால், அந்த 27 கிலோ மீட்டர் சாலை இரண்டு வழிச் சாலையாகவும், அதுவும் பள்ளமும், மேடுமாக அமைந்திருப்பதால் போக்குவரத்து இடைஞ்சல்கள் ஏற்பட்டு, விபத்துகள் அதிகமாக நடைபெறும் நிலையைத்தான் அந்தச் சாலை பெற்றிருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற 27 கிலோ மீட்டர் புறவழிச் சாலைக்கு 216 கோடி ரூபாய்க்கு tender விடப்பட்டு, அது தொடர்பான பணிகள் பல்வேறு நிலைகளிலே இருந்து கொண்டிருக்கின்றன. Tender process நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆகவே, Tender பணி முடிந்தவுடன் புறவழிச் சாலை அமைக்கும் பணி தொடரும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள்.

[2017 ஜனவரி 31

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வட்டச் சாலைப் பணி அறிவிப்பானது 25-7-2014 அன்று பேரவை விதி 110-ன்கீழ் முன்னாள் முதலமைச்சர் அவர்களால் இந்த மாமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. ஆகவே, அவர் காட்டிய வழியிலே அரசை செலுத்துகின்றோம் என்று சொல்கின்ற இந்த அரசு, உடனடியாக அந்த ring road-ஐ அமைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து, அந்தப் பகுதிகளில் ஏற்படும் விபத்துகளைத் தடுக்கின்ற வழிகளைச் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை இந்த சட்டமன்றத்திலே. . . (குறுக்கீடு)

பிற்பகல் 12-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ராதாகிருஷ்ணன், சீக்கிரம் உங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இன்னும் மூன்று உறுப்பினர்கள் பேச வேண்டியுள்ளது. (குறுக்கீடு) மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெண்டர் விடப்பட்டு விட்டது. அதில் சில விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதிமுறைகளைப் பின்பற்றிதான் அரசு ஒப்புதல் அளிக்க முடியும். முதலிலே டெண்டர் விடப்பட்டு விட்டது. டெண்டர் விடப்பட்டு, அந்தப் பணிகள் எல்லாம் துவங்கி, அரசினுடைய பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கின்றன. சில விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதிமுறைகளை எல்லாம் பின்பற்றி, ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்பந்தப் பணி வழங்கப்படும். விரைவாக அந்தப் பணி துவங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள மாநில நெடுஞ்சாலைகளான திருச்செந்தூர்-மெஞ்ஞானபுரம் சாலை, முருகன்குறிச்சி-பிச்சுவிளை-சீர்காழி-



2017 ஜனவரி 31] [திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்]

உடன்குடி சாலை, உடன்குடி-பரமன்குறிச்சி சாலை, பரமன்குறிச்சி-காயாமொழி சாலை, நாசேத், மூக்குபிரி-குரும்பூர் சாலைகள் அத்தனையும், ஏறக்குறைய இரண்டு வருடங்களாக கடுமையாகப் பாதிக்கப்பட்டு, மோசமாக இருக்கின்றன. இந்தச் சாலைகளை செப்பனிட வழிவகைகள் காண வேண்டும் என்று அதிகாரிகளை நாடிச் சென்றாலும், அந்தச் சாலைகள் எல்லாம் சரி செய்யப்படாத காரணத்தினால், அந்தப் பகுதியினுடைய போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அங்குள்ள சாலைகளை உடனடியாக சரி செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை இந்தச் சட்டமன்றத்தின் வாயிலாக வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் விவசாயம் மற்றும் குடிநீருக்கு நீராதாரமாக விளங்குவது தாமிரபரணி ஆறு தான். பருவ மழை பொய்த்ததன் காரணமாக, நீராதாரம் வற்றி விட்டது. இந்நிலையில் விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியில் இரண்டு போகம் விளைச்சல் நடக்கும். மூன்று போக விளைச்சல்கூட நடந்திருக்கின்றது. ஆனால், 100 வருடங்களுக்குப் பின்பு, ஒரு போகம்கூட விளையாத நிலையில் இன்றைக்கு விவசாயிகள் தவிக்கின்றார்கள். அந்த விவசாயிகளைக் காக்கின்ற வகையில், அந்த விவசாயக் கூலிகளைக் காக்கின்ற வகையில், நீங்கள் சரியான நிவாரணப் பணிகளை அவர்களுக்குச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை வைக்கின்றேன். "யானைப் பசிக்கு சோளப் பொரி" கொடுப்பதைப்போல் இன்றைக்கு அரசு அறிவித்திருக்கின்ற நிவாரணம் இருக்கின்றது. ஆகவே, விவசாயிகள் விரும்புகின்ற நிவாரணத்தை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை வைக்க நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்ல, தாமிரபரணி ஆற்றில் ஏறக்குறைய 47 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் அமைந்திருக்கின்றன. 47 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களும் இன்றைக்கு முடங்கக்கூடிய சூழ்நிலையில் இருக்கின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், தூத்துக்குடி மாநகராட்சி, கோவில்பட்டி நகராட்சி, அதுபோன்று எங்களுடைய உடன்குடி பகுதிகளில் உள்ள அத்தனை குடிநீர்த் திட்டங்களும் தாமிரபரணி ஆற்றில் அமைந்திருக்கின்றன. குடிநீர்ப் பிரச்சினை ஏற்படுவதற்கான முழு சூழ்நிலை உருவாகியிருக்கின்றது. அதனை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அந்த நிலைகளை மாற்றுகின்ற வகையில் இந்த அரசு செயல்பட

[திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்] [2017 ஜனவரி 31

*வேண்டும் என்ற கோரிக்கையை வைக்க நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாநிலத்தில் வரலாறு காணாத வறட்சியின் காரணமாக பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் வர்தா புயலால் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இவ்வளவு நிலைகள் இருந்தும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டம், காவல் துறையினர் கூட்டம், வருடந்தோறும் நடத்துவது வாடிக்கையாக இருந்தது. ஆனால், மூன்று வருட காலமாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டமும் நடைபெறவில்லை. அதுபோல் எஸ்.பி.-க்கள் கூட்டமும் நடைபெறவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இதன் காரணமாக மாவட்டத்தில் நடைபெறுகின்ற பல்வேறு நிகழ்வுகள் பற்றித் தெரியவில்லை. ஆகவே, உடனடியாக அந்தக் கூட்டத்தை நடத்துவதற்கு இந்த அரசு முயற்சிக்க வேண்டும் என்று இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின்...*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர்கள் கூட்டம் நடைபெறாத காரணத்தினால் எந்தப் பணிகளும் நடக்கவில்லை என்ற கருத்தினை மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ராதாகிருஷ்ணன் அவர்கள் இங்கு பதிய வைத்து கொண்டிருக்கிறார்கள். ஆண்டுத் திட்டங்களின் மூலமாக அந்தந்த மாவட்டங்களில் நடைபெறுகின்ற அனைத்து அடிப்படை பணிகளும், திட்டப் பணிகளும், திட்டம் சாராத பணிகளும் விரைவாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ராதாகிருஷ்ணனுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 12-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.*



2017 ஜனவரி 31]

***மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. அனிதா ராதாகிருஷ்ணன் அவர்கள் பேசுகின்றபோது, தூத்துக்குடி மாநகராட்சி மற்றும் கோவில்பட்டி நகராட்சியில் கடும் குடிநீர் தட்டுப்பாடு இருப்பதாகச் சொன்னார்கள். தமிழகத்தின் பொற்கால முதல்வராக இருந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011-ல் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், தூத்துக்குடியிலே ரூபாய் 282 கோடி அளவிலே நான்காவது பைப் லைன் திட்டம் அமைக்கப்படும் என்ற உறுதியைத் தந்தார்கள். அதேபோல, கோவில்பட்டி நகராட்சிக்கு இரண்டாவது பைப் லைன் திட்டமாக 81.82 கோடி ரூபாய் திட்டத்தை அறிவித்தார்கள். அந்தத் திட்டப் பணிகள் இப்போது முழுவீச்சிலே வேகமாக நடைபெற்று, தூத்துக்குடி மாநகராட்சியின் குடிநீர்த் தேவையைத் தீர்க்கும்விதமாக நான்காவது பைப் லைன் திட்டம் மார்ச் மாதத்திலே முடிவுறும் தருவாயிலே இருக்கின்றது. அதேபோல, கோவில்பட்டி நகராட்சிக்கு குடிநீர் வழங்கும் இரண்டாவது பைப் லைன் திட்டத்தையும் வருகின்ற ஏப்ரல் மாதத்திலே நிறைவேற்றி, குடிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரமாகத் தீர்வு கண்ட பொற்கால முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு இந்த நல்ல நேரத்திலே நான் நன்றிகலந்த வணக்கத்தை உரித்தாக்கி, இந்த இரண்டு திட்டங்களும் விரைவிலே நிறைவேற்றப்பட இருக்கின்றன என்ற தகவலையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், உரையை முடியுங்கள்.*

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் பணமதிப்பு நீக்க நடவடிக்கையால் விவசாயம், சிறு வர்த்தகம் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக ஆளுநர் உரையில் சொல்லியிருக்கிறீர்கள். அந்த பாதிப்பு வருகின்றபோது அரசின் வரி வருவாயும் குறைந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறீர்கள். வரி வருவாய் குறைந்ததனால் மத்திய அரசின் திட்டங்களுக்கு 60 சதவிகிதத்திலிருந்து 90 சதவிகிதம் நிதியை உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறீர்கள். நியாயமான கேள்விதான். ஆனால், இங்கு பாதிப்புக்குள்ளான சிறு வர்த்தகர்கள், விவசாயிகள்,*

[திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்] [2017 ஜனவரி 31

*அமைப்புசாரா தொழிலாளர்கள் எல்லோரும் வேலையிழந்து தவிக்கிறார்களே, அவர்களைக் காப்பாற்றுவதற்கு இந்த அரசாங்கம் ஏதாவது சிந்தித்திருக்கிறதா என்பதைச் சொல்ல வேண்டாமா? எங்களுடைய திட்டங்களை நிறைவேற்றுவதற்கு 60 சதவிகிதத்திலிருந்து 90 சதவிகிதம் வரை நிதி வேண்டுமென்று நீங்கள் சொல்லலாம், ஆனால், பாதிக்கப்படுகின்ற சிறு வியாபாரிகள், விவசாயிகள் . . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேண்டுமென்றே திட்டமிட்டு விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். (குறுக்கீடுகள்) அவர் ஏற்கெனவே அமைச்சராக இருந்தவர். அவர் என்னென்ன செய்தார் என்று எங்களுக்குத் தெரியும். அவர் என்னென்ன செய்தார் என்று எங்களுக்குத் தெரியும். நீங்கள் அவரைப்பற்றி சொல்கிறீர்கள். துணைத் தலைவரே, அவர் என்னென்ன செய்தார் என்று எங்களுக்குத் தெரியும். அவரைப் பற்றி சொல்லாதீர்கள். எல்லோருக்கும் தெரியும். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அனைவரும் உட்காருங்கள். உட்காருங்கள். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** *நாங்கள் கணக்கெடுத்துக் கொண்டிருக்கிறோம். அதற்குள், மாண்புமிகு முதல்வர் அவர்கள், கழகத்தின் பொதுச் செயலாளர் அவர்களின் உத்தரவின் பேரில், மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் கூட்டத்தைக் கூட்டி, வறட்சி நிவாரணத்தைப் பெறுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கச் சொல்லியுள்ளார்கள். எல்லா மாவட்டங்களிலிருந்தும் கணக்கெடுத்து அறிக்கை அனுப்பச் சொல்லி, அதுவும் வந்து கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையில் வறட்சி நிவாரணம் அளிக்க தயாராக இருக்கிறோம். கணக்கு வந்தால்தானே கொடுக்க முடியும். கணக்கு வந்துகொண்டிருக்கிறது. 100 நாட்கள் வேலைவாய்ப்பை 150 நாட்கள் வேலைவாய்ப்பாக எங்களுடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, அறிவித்துவிட்டார். 100 நாட்கள்*



2017 ஜனவரி 31] [திரு. இரா. துரைக்கண்ணு]

*வேலைவாய்ப்பு என்பதை 150 நாட்களாக அறிவித்திருக்கிறார்கள். இந்தியாவிலேயே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசைப்போல, விவசாயிகளைப் பாதுகாக்கிற அரசு (மேசையைத் தட்டும் ஒலி) வேறு எந்த அரசும் இல்லை என்பதை நான் திட்டவட்டமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், உரையை முடியுங்கள்.*

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கருத்தை நான் சொல்லவில்லை, ஆளுநர் உரையில் ஆளுநர் கூறியிருக்கிறார். அதைத்தான் நான் சொல்கிறேன். ஆளுநர் உரை புத்தகத்தில் இந்தக் கருத்தை நீங்கள் வெளியிட்டிருக்கிறீர்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சிக்காக இந்தியாவிலேயே முதன்முதலாக 2012-2013-ல் வாரி வழங்கியவர் தாயுள்ளம் கொண்ட விவசாயிகளுடைய காவல் தெய்வமாக விளங்குகின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் இந்தப் பேரவையிலே பெருமிதத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், சீக்கிரம் உரையை முடியுங்கள்.*

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு மின் திட்டங்களை நாங்கள் கொண்டு வரப் போகிறோம், 13,000 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப் போகிறோம் என்று சொல்கிறீர்கள். ஆனால், 2009-ல் எங்கள் தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சியிலே அடிக்கல் நாட்டப்பட்டு, பணிகள் நடந்த என்னுடைய தொகுதியில் இருக்கும் உடன்குடி அனல் மின் நிலையம் குறித்து நாங்கள் கேட்கும்போதெல்லாம் ஒரு காரணத்தைத்தான் சொல்கிறீர்கள். 2005-ல் செயல்வடிவிற்கு வரும் என்று சட்டமன்றத்தில் அறிவித்தீர்கள். ஆனால், கேட்கும்போதெல்லாம் என்ன*

[திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்] [2017 ஜனவரி 31

*சொல்கிறீர்கள் தெரியுமா? அதுகுறித்து கேட்கும்போதெல்லாம் ஒரு கருத்தைத்தான் சொல்கிறீர்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூங்குகிறவர்களை வேண்டுமானாலும் எழுப்பலாம், தூங்குவதைப்போல நடிப்பவர்களை எழுப்ப முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று சொன்னால், உயர் நீதிமன்றத்திலே வழக்கு இருக்கின்றது. வழக்கு இருக்கின்றபோது எப்படி அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முடியும்? மாண்புமிகு உறுப்பினர் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர். அந்த வழக்கை யார் போட்டார்கள் என்பது முதற்கொண்டு உங்களுக்கு நன்றாகத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) அதனுடைய பின்னணி யார் என்பதும் உங்களுக்கு நன்றாகத் தெரியும். அது தெரிந்ததற்குப் பின்னால் நீங்களே பேசி, நீங்களே மாட்டிக்கொள்கிறீர்கள். அதுதான் நிலைமை. (மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 12-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், உரையை கொஞ்சம் சீக்கிரம் முடியுங்கள்.*

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வர்தா புயல் வந்தபோது. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், வணிகர்கள், சிறு வணிகர்கள் பாதிப்பு பற்றி மிகவும் அக்கறையாகப் பேசிக்கொண்டிருக்கிறார், வரவேற்கத்தக்கது. ஆனால், அவர்கள் தமிழகத்தில் ஆட்சியிலிருந்தபோது, மத்திய அரசின் கூட்டணியில் அங்கம் வகித்தபோது, அன்றைக்கு திரு. மன்மோகன் சிங் அவர்கள் பிரதமராக இருந்தபோது, "சிறு வணிகத்தில் அந்நிய முதலீட்டை நாங்கள் அனுமதிக்கப் போகின்றோம்" என்ற சட்டத்தைக் கொண்டு வந்தபோது, (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே அன்றைக்கு முதலமைச்சராக*



2017 ஜனவரி 31] [திரு. சி.வி. சண்முகம்]

*இருந்தவர், "அதை நாங்கள் எதிர்க்கின்றோம்" என்று தெரிவித்துவிட்டு, அங்கே பாராளுமன்றத்தில் சட்டம் கொண்டு வந்தபோது, அவர்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தச் சட்டத்திற்கு ஆதரவளித்து ஓட்டளித்தார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், உரையை கொஞ்சம் சீக்கிரம் முடியுங்கள்.*

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு வணிகர்களைக் காப்பதில் எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்களும், எங்கள் தளபதி அவர்களும் எல்லாவிதத்திலும் உறுதியாக இருப்பார்கள்; அதில் எந்தவித மாற்றமும் இல்லை.*

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள், "நான் இருக்கிற வரை அந்தச் சட்டத்தை தமிழகத்தில் அனுமதிக்க மாட்டேன்" என்று கூறினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் சட்டத்தை இன்று வரை தமிழகத்தில் அனுமதிக்காத தலைவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மாதம் சென்னை மாநகரை வர்தா புயல் தாக்கியது. வர்தா புயல் தாக்கியபோது, இலட்சக்கணக்கான மரங்கள் விழுந்தன. இன்றைக்கு மரம் நடுவது முக்கியமான வேலைதான். அதற்கு ஒரு நாள் குறித்திருக்கிறீர்களே! இரண்டரை மாதம் கழித்து மரங்களை நடப்போகிறோம் என்று நாள் குறித்திருக்கிறீர்களே! மரம் நடுவது முக்கியமான வேலை. (குறுக்கீடு) அந்த வேலைக்கு நாள் குறித்து அறிவிப்பு வெளியிட்டிருக்கிறீர்களே! (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருக்கவும். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள் கேள்விக்குமேல் கேள்விகள்*

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2017 ஜனவரி 31

கேட்டுக்கொண்டிருக்கிறார். அதற்கு உரிய பதில் நாளை உறுதியாகத் தரப்படும். நாளை அவர் அவசியமாக அவைக்கு வர வேண்டும். அதையெல்லாம் மீறி, தற்போது அவர், "மரம் நடுவதற்கு நாள் குறிப்பிடப்பட்டிருக்கிறது" என்று ஒரு வரி சொல்லியிருக்கிறார். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த நாட்டிற்கு செய்த சேவைகளை உலகறியும்; அவரது பிறந்த நாளன்று மரம் நடும் பெருந்திட்டம் ஆரம்பிக்கப்படும் என்று நாங்கள் அறிவித்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள், தற்போது சேர்ந்திருக்கின்ற இடத்திற்கு விசுவாசமாக இருக்க வேண்டும் என்பதற்காக சில வார்த்தைகளை இங்கே கொட்டிக்கொண்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் தயவுகூர்ந்து நிதானமாகப் பேச வேண்டும். (குறுக்கீடு) அவர் எங்களிடையே இருந்தபோது, எம்மாதிரியாகப் பேசினார் என்பது அவர்களுக்கும் தெரியும், அவர்களும் அதைக் கேட்டு அனுபவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் பேசாமல் 'சிவனே' என்றுதான் உட்கார்ந்திருந்தார். மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர் பாபு அவர்கள் பேப்பருக்குமேல் பேப்பராகக் கொண்டு வந்து கொடுத்துக் கொண்டிருந்தார். அப்போதே நான், சரி, இவர் எடக்குமடக்காக ஏதோ பேசப் போகிறார் என்பதைப் புரிந்துகொண்டுவிட்டேன். ஆகவே, திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள், கையிலே வைத்துள்ள பேப்பர்களையெல்லாம் கீழே போட்டுவிட்டு, ஆளுநர் உரையை கையிலே வைத்துக்கொண்டு, நல்ல பல கருத்துகளை பதிய வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், உரையை கொஞ்சம் சீக்கிரம் முடியுங்கள். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவர் பேசவிருக்கிறார், உரையை கொஞ்சம் சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பில், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின எஸ்.சி./எஸ்.டி. கல்லூரி மாணவர்களுக்கு 2015-2016 ஆம் கல்வியாண்டில் வழங்கப்பட வேண்டிய 10 சதவிகித உதவித் தொகையும், 2016-2017 ஆம் கல்வியாண்டில் வழங்கப்பட வேண்டிய 100 சதவிகித உதவித் தொகையும் நிலுவையில் உள்ளன. 2015-2016 ஆம் கல்வியாண்டில், கல்லூரிப் படிப்பை முடித்தும் 10 சதவிகித



2017 ஜனவரி 31] [திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்]

உதவித் தொகை இன்னமும் வழங்கப்படவில்லை. 2016-2017 ஆம் கல்வியாண்டு முடிவடைய இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில், படிப்புச் செலவும், உதவித் தொகையும் வழங்கப்படாததால், கல்லூரி மாணவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள், கல்லூரி நிருவாகமும் சிரமப்படுகிறது. ஆகவே, உதவித் தொகையை உடனடியாக வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை வாசித்தார்கள். கடந்த 23-1-2017 அன்று நடைபெற்ற ஜல்லிக்கட்டு விவகாரத்தில் காவல் துறையினர்மீதான புகார்களை கூடுதல் காவல் துறை ஆணையர் விசாரிப்பார் என்றும், ஓய்வு பெற்ற நீதிபதி இவ்விசாரணையை மேற்கொள்வார் என்றும் கூறினார்கள். காவல் துறையினர்மீதான புகார்களை காவல் துறையினரே விசாரித்தால், நீதி கிடைக்காது. காவல் துறையினர் மீது கூறப்பட்ட புகார்களை அத் துறையைச் சார்ந்தவர்களே விசாரிக்கக் கூடாது. தவறு செய்தவர்களே தீர்ப்பினைச் சொல்லும் நிலையில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், கொஞ்சம் ஒத்துழைப்புத் தாருங்கள். உரையை கொஞ்சம் சீக்கிரம் முடியுங்கள். (குறுக்கீடு)

பிற்பகல் 12-35

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** எங்கள் தளபதி அவர்கள் கோரியபடி பணியில் இருக்கின்ற உயர் நீதிமன்ற நீதிபதியைக் கொண்டு விசாரணை கமிட்டி அமைக்க வேண்டுமென்பதை நாங்கள் வலியுறுத்துகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும். அதோடு உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. இன்பதுரை. (குறுக்கீடுகள்) உரையை முடியுங்கள். நீங்களே எங்களுக்கு நேரத்தை கொஞ்சம் சீக்கிரம் கொடுங்கள் என்று கேட்கிறீர்கள். பிறகு ஒத்துழைக்க மாட்டேன் என்கிறீர்களே? (குறுக்கீடுகள்) அவர் பேசுவார். திரு. சக்கரபாணி, விடுங்கள். அவர் உட்காருவதற்கு தயாராக இருக்கிறார். நீங்கள் தயாராக இல்லையே. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். போதும், நன்றாகப் பேசி கடைசியாக

*முடித்துவிட்டீர்களே. (குறுக்கீடுகள்) உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்) அதெல்லாம் பேச முடியாது. நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் உரை சம்பிரதாய உரை போல் உள்ளது என்று எனது உரையின் துவக்கத்திலேயே குறிப்பிட்டேன். சென்ற ஆண்டு 38 பக்கங்களிலே உரை இருந்தது. இந்த ஆண்டு 54 பக்கங்களிலே உரை உள்ளது. பக்கங்கள்தான் கூடியிருக்கின்றதே தவிர, திட்டங்கள் ஏதும் இல்லை. அடுத்த 4 ஆண்டுகளுக்கு புதிய வழி முறைகள் இல்லாத நிலை இருக்கிறது. ஒரு பயணி தன்னுடைய பயணத்திற்கு இலக்கை நோக்கி பயணம் செய்வான். ஆனால், அந்த இலக்கை நோக்கிய பயணம் செய்யாத ஓர் உரையாக இந்த உரை அமைந்திருக்கிறது என்பதை குறிப்பிடுகிறேன். எங்களுடைய சபாநாயகர். . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய ரிசர்வ் வங்கியினுடைய பண மதிப்பிழப்பு, பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ராதாகிருஷ்ணன் அவர்கள் இங்கே சில கருத்துகளை பதியவைத்திருக்கிறார்கள். மத்திய அரசினுடைய பண மதிப்பிழப்பு திட்டத்தில் குறுகிய காலத்தில் விவசாயிகள், சிறு வணிகர்களுக்கு பாதிப்பு இருக்கும் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் பாதிப்பு மேலும் இருக்கும் என நாங்கள் குறிப்பிட்டுள்ளோம். இந்த பாதிப்பிற்கு மத்திய அரசுதான் நிவாரணம் வழங்கவேண்டும். அவர்களும் சில திட்டங்களை இந்த பட்ஜெட்டில் கொண்டுவருவதாகக் கூறியுள்ளனர். மத்திய பட்ஜெட் நாளை வர உள்ளது. என்ன திட்டம் அதில் உள்ளது என்பதை நாம் ஆராய்ந்து பார்க்கலாம். இதுகுறித்து மாநில அரசும் பரிசீலித்து உரிய நடவடிக்கையை தேவைக்கேற்ப எடுக்கும் என்பதையும், சிறு வணிகர்களுக்கு வெள்ளத்தினால் பாதிப்பு ஏற்பட்டபொழுது, வட்டியில்லா கடன் வழங்கியது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குடிநீர் பிரச்சினையைப் பற்றி பேசினார்கள். அந்த மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் அதற்கு விளக்கம் சொன்னார்கள். கூடுதலாக ஒரு விளக்கம் தருகிறேன். தூத்துக்குடி மாநகராட்சியிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலே நடந்த கூட்டத்திலே அறிவுறுத்தியதன் வாயிலாக குடிநீர்ப் பற்றாக்குறையினை ஈடுசெய்யும் பொருட்டு 4.09 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 55 புதிய ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்தல், ஆழ்துளைக் கிணறுகளைப் புனரமைத்தல், தனியார் கிணறுகளிலிருந்து லாரிகள்மூலம் குடிநீர் வழங்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*

*அதேபோல, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 22-10-2013 இல் அறிவிக்கப்பட்ட 252.44 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான குடிநீர்த் திட்டப் பணிகள் 89 சதவீதம் முடிவடைந்து, மீதப் பணிகள் பிப்ரவரி மாத இறுதிக்குள் முடிவடைந்து மக்கள் பயன்பாட்டிற்கு வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*அதேபோல, அவரது தொகுதிக்குட்பட்ட காயல்பட்டிணம் நகராட்சியில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் எடுத்த தொடர்ச்சியான சீரிய நடவடிக்கையின் காரணமாக 36 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள பொன்னன்குறிச்சி என்ற இடத்திலிருந்து தாமிரபரணி ஆற்று குடிநீர்த் திட்டம் சிறிய மற்றும் நடுத்தர நகர்களுக்கான உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டு, விரிவான மதிப்பீடான 29.67 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, இறுதி செய்யப்பட்டு, பணி ஆணை வழங்கப்பட்டு, பணிகள் 88 சதவீதம் முடிவடைந்துள்ளன. அதுவும் 31-3-2017-க்குள் முடிவடைந்துவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பணிகள் முடிவடைந்த பின்னர், நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 90 லிட்டர் குடிநீர் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[2017 ஜனவரி 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை, நேரத்தின் அருமை கருதி 10 நிமிடங்களில் உரையை முடியுங்கள்.*

**திரு. ஐ.எஸ். இன்பதுரை:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாகமாக இருக்கின்ற பூமிக்கு வேகமாக வந்திறங்குகின்ற மேகமாக இருக்கிறது மாண்புமிகு ஆளுநர் அவர்கள் இந்த அவைக்கு அருளியிருக்கின்ற உரை. இந்த ஆளுநர் உரையினுடைய முதல் பக்கத்திலேயிருந்தே மறைந்த முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களைப் பற்றி விரிவாக எடுத்துரைத்திருக்கிறீர்கள். அதைப் படிக்க படிக்க என்னுடைய இரண்டு கண்களிலிருந்து உப்பு நதிகள் ஊர்வலமாகப் போவதை என்னால் தடுக்க இயலவில்லை. (குறுக்கீடுகள்) நான் இந்த சட்டமன்றத்திற்கு வாகனத்திலே வந்துகொண்டிருந்தேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர்கள் கொஞ்சம் அமைதியாக இருங்கள்.*

*பிற்பகல் 12-40*

**திரு. ஐ.எஸ். இன்பதுரை**: *தார்ச்சாலையிலே என்னுடைய வாகனம் வந்தபோது இந்த சட்டமன்றத்தினுடைய மாண்பை பறைசாற்றுகின்ற வகையிலே அங்கே அந்த வளைவு இருந்தது. அங்கிருந்து பார்க்கிறபோது கம்பீரமிக்க இந்த செயின்ட் ஜார்ஜ் கோட்டை தெரிந்தது. அதிலே மூவர்ணக் கொடி என்னை தலையசைத்து வரவேற்றது. இந்த மக்களாட்சி மண்டபத்தினுடைய மாணிக்க மாளிகைக்குள் நான் மௌனமாய் நுழைந்தேன். இங்கே இருக்கிற சாண்டிலியர் விளக்குகள் ஒளிவெள்ளத்தை மெல்ல கசிய விட்டுக்கொண்டிருந்தன. இதோ, இங்கே இந்தப் புகைப்படத்திலே இருக்கிறாரே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய உறைந்த புன்னகை என்னை மௌனமாக வரவேற்றது. இந்த மாணிக்க மண்டபத்தினுடைய அவைத் தலைவராக, ஆணிவேராக நீங்கள் அங்கே அமர்ந்திருக்கிறீர்கள், அமைச்சர் பெருமக்கள் எல்லாம் அமர்ந்திருக்கிறீர்கள். எதிர்க்கட்சி வரிசையிலே மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவரும், உறுப்பினர்கள் அமர்ந்திருக்கிறீர்கள். நான் அந்தப் பகுதியைப் பார்க்கிறேன். தமிழகத்தைக் காத்து வந்த எங்கள் தானைத் தலைவி, தமிழர்களைக் காப்பதற்காகவே வாழ்ந்த எங்கள் தானைத் தலைவி அங்கு கொலு வீற்றிருந்த தலைவியை (மேசையைத் தட்டும் ஒலி)*



2017 ஜனவரி 31] [திரு. ஐ.எஸ். இன்பதுரை]

*இன்று காணவில்லை. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இங்கே இந்த அவையிலே இல்லை. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வாழ்நாள் எல்லாம் தமிழர்களுக்காக வாழ்ந்தவர்; தன் மூச்சுக் காற்றைக்கூட தமிழர்களுக்காகத் தந்தவர். கடைசி வரை உழைத்தவர். அவர் இந்தக் கொலுமண்டபத்திலே இல்லை என்கிறபோது இந்த மண்டபம் எனக்கு வெறுமையாகத் தெரிகிறது. நான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவன் என்பதற்காக அம்மா அந்தாதி பாடவில்லை. மாண்புமிகு அம்மா அவர்களைப்பற்றி இன்றைக்கு உலகமே போற்றிப் புகழ்ந்துகொண்டிருக்கிறது. அதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. தன்னை பகைக்கிறவர்களையும் நேசியுங்கள். அதாவது, தன்னை நேசிக்கிறவர்களை பகைப்பது மிருக சாதி. தன்னை நேசிக்கிறவர்களை மட்டுமே நேசிக்கிறவர்கள் மனித சாதி. தன்னை பகைக்கிறவர்களையும் நேசிக்கிறவர்கள்தான் தெய்வ சாதி. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையிலே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தன்னை பகைத்தவர்களையும் நேசித்தார். அவருடைய அழகு ததும்பும் அருள் முகத்திலே ஆசிட் வீசவேண்டுமென்றெல்லாம் பேசினார்கள். அவர்களுக்கெல்லாம் பதவி கொடுத்து அழகு பார்த்தவர். அவரை பொய் வழக்குப்போட்டு காலாகிரகத்திலே காலமெல்லாம் அடைத்திட வேண்டுமென்று துடித்தார்கள். அவர்கள் வீட்டுப் பிள்ளைகளுக்குக் கூட பதவிகளைக் கொடுத்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உலகத்திலே பிரிந்த எந்த சித்தாந்தமும் இணைந்ததாக வரலாறு கிடையாது.* Mensheviks, Bolsheviks *என்று கம்யூனிஸ்ட்கள் பிரிந்து கிடக்கின்றார்கள். உலகத்தின் ஆதி சித்தாந்தமான இந்து மார்க்கத்திலேகூட சைவம், வைணவம் என்று இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. ஒன்றாக இருந்த கிறிஸ்துவ மதத்திலே* Protestants *என்றும்,* Catholics *என்றும் இருக்கிறார்கள். இஸ்லாமிய சமூகத்திலே சன்னி முஸ்லிம் என்றும், ஷியா முஸ்லிம் என்றும் இருக்கிறார்கள். பிரிந்த எந்த சித்தாந்தமும் இணைந்தது கிடையாது. இந்தியாவிலே இருக்கிற இயக்கங்கள்கூட, அரசியல் இயக்கங்கள்கூட பிரிந்தால் இணைந்த வரலாறு கிடையாது. ஆனால், உலகத்திலே ஒரே இயக்கம் அதை ஒன்றாக்கி, இழந்த சின்னத்தை மீட்டு இந்த அரியணையிலே கொலுவைக்க வைத்த ஒரே தலைவி என்பதனால் (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களை உலகம் வாழ்த்துகிறது. மன்னன் சாலமன் அவர்களைத்தான் இன்றைக்கும் வரலாறு கொண்டாடிக்கொண்டிருக்கிறது. அறிவாற்றலில் உயர்ந்தவர் சாலமன் ஞானி. (குறுக்கீடுகள்)*

[2017 ஜனவரி 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் உட்கார்ந்துகொண்டு பேசாதீர்கள். (குறுக்கீடு) வேண்டாம் பேசாதீர்கள். பேசாமல் இருங்கள் என்று சொல்கிறேன் இல்லையா? (குறுக்கீடுகள்) இல்லை, மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள்.

**திரு. ஐ.எஸ். இன்பதுரை:** மன்னன் சாலமனுக்கு இல்லாத மிகப் பெரிய ஞானம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இருந்தது. எப்படியென்றால், தொட்டில் குழந்தைத் திட்டம் என்று ஒரு திட்டம். அந்தத் திட்டத்தைப் பற்றி கேள்விப்பட்டதும் அன்னை தெரசா அம்மையார் அவர்கள் ஓடோடி வந்து தனது பிச்சிப் பூ வார்த்தைகளால் மெச்சிப் புகழ்ந்து, உச்சி முகர்ந்து வாழ்த்தியதை நான் பார்த்தேன். உலகத்திலே மிக அதிகமான நாடுகளால் பின்பற்றப்படுகிறது கிறிஸ்துவ மதம். அந்த கிறிஸ்துவ மதத்தைப் பின்பற்றுகிற கிறிஸ்துவர்களால் புனிதராக திருநிலைப்படுத்தப்பட்டிருக்கிறவர் அன்னை தெரசா அவர்கள். உலகத்தில் ஜனநாயகம் என்பது பெரும்பான்மை. பெரும்பான்மைதான் தலைமை தாங்கும். ஆக, பெரும்பான்மையினரால் வணங்கப்படுகிற அன்னை தெரசா அம்மையார் புரட்சித் தலைவி அம்மா அவர்களை நேரில் சந்தித்து, தன் கையை எடுத்து வணங்குகிற காட்சியை என் கண்ணால் கண்டவன் நான். (மேசையைத் தட்டும் ஒலி) இதைவிட வேறு என்ன பெருமை வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வர்தா புயலால் இழந்த மரங்களை மீண்டும் நட்டு, இந்த மண்ணிலே பதியம்போட்டு, பசுமைப் புரட்சியை உருவாக்கவேண்டுமென்ற திட்டத்தை பக்கம் 11-லே ஆளுநர் உரையிலே பார்த்தேன். தனக்கான நிழலை தான் சுமந்து, நமக்கான நிழலை தான் சுமந்து, தன்னுடைய பலனை உலகத்திற்குத் தரும் மரங்கள். மரங்கள் இயற்கையின் கொடைகள். அந்த மரங்கள் எப்படி தனக்காக வாழாமல் நிற்கின்றனவோ, அதைப்போல தமிழர்களின் துயரங்களையெல்லாம் தானே தாங்கி, தமிழர்களுக்காக வாழ்ந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பெயரிலே இந்தத் திட்டத்தை நீங்கள் கொண்டுவர வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று கேட்டுக்கொண்டு, வம்ச விருட்சமாக இருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்கிற ஆலமரத்தினுடைய ஒரு விழுது என்ற வகையிலே இதை நான் வரவேற்கிறேன்.



2017 ஜனவரி 31] [திரு. ஐ.எஸ். இன்பதுரை]

*பிற்பகல் 12-45*

'டிஜிட்டல் இந்தியா' விருதினை மின்னணு முயற்சிகளுக்காக தமிழக அரசு பெற்றுள்ளது என்று ஆளுநர் உரையிலே பக்கம் 24-லே குறிப்பிடப்பட்டுள்ளது. அதுபோல, உயர் கல்வியிலே மாணவர் சேர்க்கையில் தமிழகம் முன்னேற்றப் பாதையில் செல்கிறது; முதல் இடத்தைப் பெற்றிருக்கிறது என்று ஆளுநர் உரையிலே படிக்கும்போது, எல்லா தமிழர்களுடைய மனங்களிலும் நிச்சயமாக ஆனந்தம் அலையடிக்கும் என்பதிலே எனக்கு எந்தவித ஐயமுமில்லை.

நான் ராதாபுரம் தொகுதியைச் சேர்ந்தவன். என்னுடைய தொகுதியிலிருந்து மீன்பிடி தொழில் செய்ய பக்ரைன் நாட்டிற்குச் சென்ற 15 மீனவர்கள், உக்ரைன், ஈரான் நாட்டு கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்டிருக்கின்றனர். அவர்களை மீட்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் வழக்கறிஞராகப் பணியாற்றி வருகிறேன். என்னுடைய ராதாபுரம் தொகுதிக்குட்பட்ட வள்ளியூரில் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் ஒன்று அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் அமைந்துள்ள ஆவரைக்குளம், லெப்பைக்குடியிருப்புப் பகுதிகளுக்கு புதிய குடிநீர்த் திட்டம் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆக, எனது தொகுதியில் நிறைவேற்றப்பட்ட அனைத்துத் திட்டங்களும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கொண்டு வந்த தொலைநோக்குத் திட்டங்கள் என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இன்பதுரை, இன்னொரு சமயத்தில் பேசலாம். சீக்கிரம் உரையை முடியுங்கள். (குறுக்கீடு)

**திரு. ஐ.எஸ். இன்பதுரை:** இப்போதுதான் பேச ஆரம்பித்திருக்கிறேன். ஐந்து நிமிடங்கள்தான் ஆகியுள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னொரு சந்தர்ப்பத்தில் பேசலாம், நீங்கள் சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. ஐ.எஸ். இன்பதுரை:** சரி, விரைவில் உரையை முடித்துவிடுகிறேன்.

[2017 ஜனவரி 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இன்பதுரை, நீங்கள் ஒத்துழைப்புக் கொடுங்கள்.

**திரு. ஐ.எஸ். இன்பதுரை:** இரண்டே நிமிடங்களில் உரையை முடித்துவிடுகிறேன். தொலைநோக்குத் திட்டத்தின்கீழ், ஆடு, மாடுகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியபோது, ஏதோ இந்த நாட்டு மக்களை மாடு மேய்க்க அனுப்புகிறீர்களா என்று பேசியவர்களெல்லாம் உண்டு. அதனுடைய நோக்கம் என்னவென்று தெரியுமா? நாட்டு மாடு இனங்கள் அழிந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆடு, மாடுகளைத் தந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே ஜல்லிக்கட்டுக்காக நடைபெற்ற பெரிய போராட்டம் எந்த கோஷத்தை அடிப்படையாகக் கொண்டு நடைபெற்றது என்றால், நாட்டு மாடு இனங்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகத்தான். மாணவர்கள் என்பவர்கள் மின்னலை விழுங்கி, மின்சாரத்தைக் கொப்பளிக்கிற ஆற்றலைப் பெற்றவர்கள். 1965 ஆம் ஆண்டுக்குப் பின்பு, 52 ஆண்டுகளுக்குப் பின்பு, மெரினா கடற்கரையிலே மாணவர்கள் கடல்போல் திரண்டபோது அந்தப் போராட்டம் வெற்றி பெறும் என்று நான் நம்பினேன். எதற்காக நம்பினேன் என்றால், 'கொம்புக்கிட்ட வச்சுக்காதே வம்பு' என்ற ஒரு slogan-னோடு, அவர்கள் வைத்த கொம்பைப் பார்த்தேன். இரட்டை விரல் காட்டுகிறதுபோல அந்தக் கொம்பு இருந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) வின்சென்ட் சர்ச்சில் அவர்கள் victory என்பதை இவ்வாறு இரண்டு விரலை விரித்துக் காட்டி வென்றார்கள். அதுபோலத்தான், புரட்சித் தலைவி அம்மா அவர்களும், புரட்சித் தலைவர் அவர்களும் இரட்டை விரலைக் காட்டி வெற்றிகளைக் குவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இந்தப் போராட்டம் வெற்றிபெறும் என்று நினைத்தேன். மாணவர்களின் வெற்றியை நான் வணங்குகிறேன். அதற்கும் மேலாக, இந்தப் போராட்டத்தை வெற்றிபெறச் செய்தது தமிழக அரசு கொண்டு வந்த சட்டம். அந்தச் சட்டத்தைக் கொண்டுவந்த தமிழக அரசை நான் மனதார வணங்குகிறேன். இங்கே இருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள். எங்களுடைய ஆட்சியில், நாங்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இன்பதுரை, உரையை முடியுங்கள். (குறுக்கீடு) போதும், உரையை முடியுங்கள்.



2017 ஜனவரி 31]

**திரு. ஐ.எஸ். இன்பதுரை:** இந்தச் சட்டம் Concurrent list-ல் இருக்கிறது. ஜனாதிபதியிடம் நாங்கள் ஒப்புதல் பெறவில்லை. அதை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம் என்று சொன்னார். நான் மாணவர்களுடைய பாஷையிலே சொல்கிறேன். உங்கள் நேர்மை எங்களுக்குப் பிடித்திருக்கிறது. நாங்கள் பாராட்டுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், உங்களுடைய வாதம் தவறானது. நீங்கள் சொன்னீர்கள், எங்களுடைய ஆட்சியிலே நாங்கள் நடத்தினோம் என்று. பெண் என்றால் பிள்ளையைப் பெற்றுத்தான் ஆக வேண்டும். ஆனால், பிள்ளையைப் பெறுகின்ற பெண் திருமணம் ஆனவளாக இருக்க வேண்டும். அதுதான் பெண்ணுக்கு அழகு. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பிள்ளைக்கும் பாதுகாப்பு. அதாவது, நீங்கள் நிகழ்ச்சிகளை நடத்தியிருக்கலாம். (குறுக்கீடுகள்) ஆனால், அந்த நிகழ்ச்சிக்கு சட்டப்பூர்வமான பாதுகாப்பைப் பெற்றுத் தந்தது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு என்பதை இந்த அவையில் நான் தெரிவிக்க விரும்புகிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்கரபாணி, நான் நிற்கிறேன், நீங்கள் அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் நிற்கின்றேன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவையை நடத்துவதற்கு ஒத்துழைப்புக் கொடுங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. இன்பதுரை, இன்னொரு சந்தர்ப்பத்தில் பேசலாம். நன்றி சொல்லி, உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்) நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

**திரு. ஐ.எஸ். இன்பதுரை:** இரண்டே நிமிடங்களில் உரையை முடித்துவிடுகிறேன். நான் சட்டத்திற்கு சாட்சி சொல்ல விரும்புகிறேன். இந்த அவையினுடைய மாண்பு என்பது மிகப் பெரியது. இந்தச் சபையில் பேச வேண்டுமென்பது என்னுடைய வாழ்க்கையின் இலட்சியங்களில் ஒன்றாக இருந்தது. (குறுக்கீடுகள்) இப்படி கூச்சல் போடுகிறவர்களின் மத்தியிலே பேசுவது என்பது நடக்காத விஷயம் என்பதனால். . .

[2017 ஜனவரி 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இன்பதுரை, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார், 10 நிமிடங்களில் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) திரு. இன்பதுரை, உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, பேசி உரையை முடியுங்கள்.

**திரு. ஐ.எஸ். இன்பதுரை:** இந்த நல்ல வாய்ப்பை, சத்தியத்திற்கு சாட்சி சொல்கிற இந்த நல்ல வாய்ப்பை எனக்கு வழங்கியதற்காக புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது, நீங்கள் ஏன் பேசுகிறீர்கள்? (குறுக்கீடு) அவர், நன்றி சொல்லி உரையை முடிக்கவிருக்கின்றார், இப்போது நீங்கள் ஏன் பேசுகிறீர்கள்?

**திரு. ஐ.எஸ். இன்பதுரை:** புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பட்டாள படை வரிசையை வழிநடத்துகிற Field Marshal, தமிழகத்தினுடைய புதிய புரட்சித் தலைவி, (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சி பூங்குயில், இளைய இதயங்களிலெல்லாம் வாழ்கிற இளைய தலைவி, தமிழகமே வணங்குகிற தானைத் தலைவி, எங்கள் இயக்கத்தினுடைய பொதுச் செயலாளர் 'சின்ன அம்மா' அவர்களின் பாதங்களிலே என்னுடைய தலையைச் சாய்த்து அமைகிறேன், வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார் அவர்கள். (குறுக்கீடுகள்) இதெல்லாம் நன்றாக இல்லை.

**திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடியாட்சி முடிவுற்று, குடியாட்சி நடைபெற்று வந்தாலும், அதிலும் வாரிசுகள் மற்றும் அரசியல் பின்புலம் உள்ளவர்கள் மட்டுமே பதவிக்கு வர முடியும் என்பதனை மாற்றியமைத்த இயக்கம், மாபெரும் தலைவர் மனிதப் புனிதர் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களால் தொடங்கப்பட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் மறைவிற்குப் பின்னர் ஆணாதிக்க அரசியலில் தனியொரு பெண்ணாக நின்று எதிரிகளை களமாடியதோடல்லாமல், கழகத்தில் கலகம் செய்தவர்களையும்



2017 ஜனவரி 31] [திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார்]

முறியடித்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒன்றிணைத்து, பல வெற்றிகளைக் குவித்து, இந்தியத் திருநாட்டில் மூன்றாவது பெரிய கட்சி என்னும் மகத்தான சாதனையைப் படைத்திட்ட வல்லமைமிக்க, ஈடு இணையற்ற, ஒப்பாரும் மிக்காரும் இல்லாத, இந்த நூற்றாண்டில் மட்டுமல்ல, மனித குலத்தில் இதுவரையில்லாத, இனிமேலும் யாரும் படைக்க முடியாத எண்ணில்லா சாதனைகளைப் படைத்தவர், மாண்புமிகு முன்னாள் முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மட்டுமே. (மேசையைத் தட்டும் ஒலி) இன்று அவர் இப்புவி உலகைவிட்டு மறைந்தாலும், அன்பு, அறிவு, கனிவு, துணிவு போன்ற வார்த்தைகளுக்கு இலக்கணமாக வாழ்ந்தவர். தனக்கென வாழாமல், 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று தவவாழ்வு வாழ்ந்தவர், தமிழரின் உரிமைகளை மீட்டெடுத்தவர், "உச்சிமீது வான் இடிந்து வீழுகின்றபோதிலும் அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பதில்லையே" எனும் மகாகவியின் வரிகளுக்கேற்ப, எடுத்த காரியங்கள் அனைத்திலும் வீரத்துடனும், விவேகத்துடனும் போரிட்டு, பல வெற்றிகளைக் குவித்தவர்.

கட்சியிலும், ஆட்சியிலும் ஜனநாயகத்தை நிலைநிறுத்தியவர் நம் அம்மா அவர்கள் மட்டுமே. உதாரணமாக, எந்தவொரு அரசியல் பின்புலமும் இல்லாத சாதாரண விவசாயக் குடும்பத்திலே பிறந்து, பள்ளிப் பருவத்திலேயே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எனும் மாபெரும் வரலாற்று இயக்கத்தில் இணைந்த எனக்கு, கழகத்தில் பேரூராட்சி கழகச் செயலாளர், ஒன்றியக் கழக செயலாளர், மாவட்ட அம்மா பேரவைச் செயலாளர் போன்ற பதவிகளை வழங்கி, 2016 ஆம் ஆண்டு முதல் கோவை மாநகர் மாவட்ட கழகச் செயலாளர் எனும் மாபெரும் பொறுப்பினையும் எளிய தொண்டனாம் எனக்கு வழங்கி, இவற்றிற்கெல்லாம் மேலாக புரட்சித் தலைவரின் வெற்றிச் சின்னமாம் இரட்டை இலை சின்னத்தில் போட்டியிட 5 முறை எனக்கு வாய்ப்பு வழங்கி, 1996 ஆம் ஆண்டு முதல் 4 முறை பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி மன்றத் தலைவராகவும், கடந்த சட்டமன்றத் தேர்தலில் கோவை வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும் வெற்றிபெறச் செய்திட்ட, என் சிந்தையில் என்றென்றும் வாழ்ந்துவரும், மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை அனுதினமும்

[திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார்] [2017 ஜனவரி 31

தொழுது வணங்குகிறேன். அவர் காட்டிய வழியில் வழிநடந்திட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளராக எங்களை வழிநடத்தும் மரியாதைக்குரிய சின்னம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கோவை வடக்கு சட்டமன்றத் தொகுதியில் வெற்றிபெற அயராது உழைத்திட்ட கழக நிருவாகிகள், செயல் வீரர்கள், வீராங்கனைகள், நண்பர்கள் மற்றும் வாக்களித்து வெற்றிபெறச் செய்த வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் இந்த அவையிலே என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த அவையில் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் பங்குபெற்றுப் பேச வாய்ப்பினை வழங்கிய தங்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்து, என் உரையினைத் துவங்குகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அருண்குமார், உரையைத் துவக்கி, கொஞ்சம் சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று முழுவதும் வரலாறு சொல்வதற்கெல்லாம் அவர்களுக்கு வாய்ப்புக் கொடுத்தீர்கள். நமக்கு மட்டும் இப்படி வாய்ப்பைக் குறைத்தால் எப்படி?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லையில்லை. இன்னொருமுறை வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) நீங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) இன்றைக்கு ஒத்துழைப்புக் கொடுங்கள். உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் அத்தியாவசியமானது, அங்கு நிலவும் அமைதியான சூழ்நிலையே ஆகும். அந்த அமைதியான சூழ்நிலை நிலவ, தீவிரவாத, சாதி, மதவாத மோதல்கள் ஏதும் நிகழாதவண்ணம், சட்டம்-ஒழுங்கை சிறப்பாகப் பேணிக்காத்திட வேண்டும். சட்டம்-ஒழுங்கை சிறப்பாகப் பேணிக்காத்திடும் வகையில், தீவிரவாத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்திட, குற்றங்கள் நிகழாதவண்ணம் தடுத்திட, தேவையான நடவடிக்கைகள் மற்றும் தேவையான



2017 ஜனவரி 31] [திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார்]

உபகரணங்களை காவல் துறைக்கு வழங்கியதோடு, காவல் துறையை கண்ணியத்தோடும், முழு சுதந்திரத்தோடும் செயல்பட அனுமதி வழங்கி, தமிழகத்தை அமைதிப் பூங்காவாக மாற்றிய பெருமை நம் அம்மா அவர்களை மட்டுமே சாரும் என்பது உலகறிந்த உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி)

அவ்வாறு ஒவ்வொரு நொடியும் மாநிலத்தில் வாழும் மக்கள் நலனே குறிக்கோள் என்று வாழ்ந்த வரலாற்று நாயகி எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் எதிர்பாராத திடீர் மறைவினால் நாட்டில் ஏற்பட்ட குழப்பமான சூழ்நிலையிலும், தமிழகத்தில் அசம்பாவித சம்பவங்கள் ஏதும் நிகழாமல் இருந்ததே அம்மா அவர்களின்மீது மக்கள் வைத்திருந்த பற்றுக்கு எடுத்துக்காட்டாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் *12-55*

இதுவரை, நாட்டில் அரசியல் தலைவர்களின் மறைவின்போதும், அவர்களது இறுதி ஊர்வலத்தின்போதும் மோதல்கள், வன்முறைகள் ஏற்பட்டதை நாடு கண்டுள்ளது. ஆனால், ஒரு மாபெரும் மக்கள் தலைவர், யாரும் எதிர்பார்க்காத தருணத்தில் நம்மையெல்லாம் விட்டு திடீரென மறைந்தாலும், அவர் முன்பு ஆட்சி செய்யும்போது சட்டம்-ஒழுங்கு எவ்வாறு பேணப்பட்டதோ, அதேபோல இப்பொழுதும் சட்டம்-ஒழுங்கு காப்பாற்றப்பட்டுள்ளதை மாண்புமிகு ஆளுநர் உரையில் குறிப்பிட்டுள்ளதை நான் இங்கு பெருமிதத்துடன் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இவற்றிற்கெல்லாம் மேலாக, உலகம் இதுவரை கண்டிராத போராட்டத்தினை, தமிழக மாணவர்களும், பொதுமக்களும் நடத்தினர். ஜல்லிக்கட்டு தடைக்கு எதிராக அறப்போராட்டம் நடத்தினர். மாண்புமிகு அம்மா அவர்கள் காட்டிச்சென்ற வழியில் நடைபெறும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு வேகமாகவும், விவேகமாகவும் செயல்பட்டு, ஜல்லிக்கட்டு போட்டியின் மீதான தடையினை தகர்த்தெறிந்து, தமிழின மரபைக் காத்திட வழிவகுத்தது. (மேசையைத் தட்டும் ஒலி) ஜல்லிக்கட்டு போட்டி மீண்டும் தமிழகத்தில் நடைபெற வழிவகை செய்யப்பட்டு, மாணவர்கள் நடத்திய அறப்போராட்டம் வெற்றியடைந்தது. வெற்றியை மாணவர்கள் கொண்டாடினால், ஜல்லிக்கட்டு போட்டி தடையை நீக்கிய தமிழக

[திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார்] [2017 ஜனவரி 31

அரசிற்குக் கிடைத்த நற்பெயரும், புகழும் நிலைத்துவிடும். அதனை எப்படியாவது தடுத்துவிட வேண்டும் என்பதற்காக, ஏற்கெனவே ஜல்லிக்கட்டு போட்டிக்கு தடை ஏற்பட காரணமானவர்களும், அதற்குத் துணை போனவர்களும், சமூக விரோத அமைப்புகளும் கூட்டாகச் சேர்ந்து, திட்டமிட்டு, கலவரத்தினை ஏற்படுத்த முற்பட்டனர். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் யாரையும் ஒன்றும் சொல்லவில்லை. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின், அவர் யாரையும் சொல்லவில்லை. உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடு) அவர் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) அவர் யார் பெயரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின், இது முறையல்ல. அவர் உங்கள் யாரையும் ஒன்றும் சொல்லவில்லை. பேசாமல் உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார்:** சமூக வலைதளங்களில் உண்மைக்கு மாறான தகவல்களைப் பரப்பி வன்முறையை கட்டவிழ்த்துவிட்டனர். காவல் துறையினர் மிகவும் பொறுப்புடனும், கண்ணியத்துடனும் நடந்து, கலவரம் ஏற்படாமல் தடுத்து, பொதுமக்களுக்கும், உடைமைகளுக்கும் பங்கம் ஏற்படாதவாறு, தமிழகத்தில் அமைதியை நிலைநாட்டி, மாண்புமிகு அம்மா அவர்கள் காட்டிச்சென்ற வழியில் செயல்பட்டுள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாமல், நாட்டின் முதுகெலும்பாகத் திகழும் வேளாண்மைத் துறைக்கு புத்துயிர் வழங்கி, இயற்கைச் சீற்றங்களினால் ஏற்படும் இழப்புகளுக்கு மட்டும் இழப்பீடு வழங்கிய முறையை மாற்றி, மழை பொய்த்ததனால் ஏற்பட்ட வறட்சிக்கும் நிவாரணம் வழங்கிய ஒரே தலைவி நம் அம்மா அவர்கள்தான்.

விவசாயத்திற்கு அத்தியாவசியத் தேவையான நீரினை அண்டை மாநிலங்களிலிருந்து பெற்றிடவும், சட்டப் போராட்டத்தின்மூலம் காவேரி நடுவர் மன்றத் தீர்ப்பை அரசிதழில் வெளியிடச் செய்ததும், முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தினை 142 அடியாக உயர்த்திட செய்ததும் அம்மா அவர்கள்தான். வேளாண்மைத் துறையை நவீனமயமாக்கி பல உயரிய தொழில்நுட்பங்களைப் புகுத்தி, மிகுந்த அக்கறையுடன்



2017 ஜனவரி 31] [திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார்]

செயல்பட்டதன் காரணமாக உணவு தானிய உற்பத்தியில் 100 இலட்சம் மெட்ரிக் டன் என்னும் சாதனையைத் தொடர்ந்து அடைய வழிவகுத்து மத்திய அரசின் 'Krishi Karman' விருதினை 2011-2012 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக நாம் பெற்றிடச் செய்திட்டவரும் நம் அம்மா அவர்கள்தான் என்பதனை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அம்மா அவர்களின் வழியினைப் பின்பற்றி செயல்பட்டு வரும் இந்த அரசு தென்மாவட்ட மக்களின் நலன் காத்திடும் வகையில் முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தினை 152 அடியாக உயர்த்திடவும், டெல்டா பாசன மக்களின் வாழ்வாதாரத்தைக் காத்திடும் வகையில், காவேரி மேலாண்மை வாரியம், காவேரி நதிநீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை உடனடியாக அமைத்திடவும், வேளாண் உற்பத்தியைப் பெருக்கிடும் நோக்கில் ரூ.803 கோடி செலவில் நிலைக்கத்தக்க மானாவாரி வேளாண்மை இயக்கத்தை இந்த ஆண்டு முதல் தொடங்கவும், அம்மா அவர்களின் அரசு தொடங்கிய பண்ணை இயந்திரமயமாக்கல், நுண்ணீர் பாசனம் ஆகிய திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளும் என்று மாண்புமிகு ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டுள்ளதை இங்கு பெருமிதத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமெரிக்காவைப்பற்றி ஒரு மாபெரும் கனவு கண்டான் மார்ட்டின் லூதர் கிங். தமிழகத்தின் வறுமை முற்றிலும் ஒழிக்கப்பட்டு கல்வி, சுகாதாரம், குடிநீர், மருத்துவம் போன்ற அடிப்படை வசதிகளை அனைவரும் பெற்று அமைதியுடனும், பாதுகாப்பு வளமுடனும், தமிழக மக்கள் அனைவரும் வாழ வேண்டுமென்ற பெருங்கனவைக் கொண்டிருந்தார் நம் காவியத் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கனவினை நனவாக்க தொலைநோக்குத் திட்டம், 2023 எனும் அரிய திட்டத்தினைத் தந்துள்ளார். அவர் விட்டுச் சென்ற பணிகளை நனவாக்கும் வகையில் அம்மா அவர்கள் காட்டிய வழியில் செயல்படும் தமிழக அரசு 2016-2017 ஆம் ஆண்டில் 3,32,962 வீடுகளைக் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது குறித்தும், நாட்டின் சாலை கட்டமைப்பு வசதிகளை அதிகப்படுத்த செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும், பார் போற்றும் நம் காவியத் தலைவி அம்மா அவர்களால் நடத்தப்பட்ட உலக முதலீட்டாளர்கள்

[திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார்] [2017 ஜனவரி 31

மாநாடுமூலம் தொழில் துறையில் ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சி குறித்தும், சுகாதாரத்தை பேணிக் காத்திட இதய தெய்வம் அம்மா அவர்களால் தொடங்கப்பட்ட முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா குழந்தைகள் நல பரிசுப் பெட்டகம், (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா ஆரோக்கிய திட்டம், அம்மா மகப்பேறு சஞ்சீவி, அம்மா முழு உடல் பரிசோதனைத் திட்டம், (மேசையைத் தட்டும் ஒலி) சானிடரி நாப்கின் வழங்கும் திட்டம், (மேசையைத் தட்டும் ஒலி) தாய்ப்பால் வங்கி போன்ற திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்பது குறித்தும், இன்று நம்மையெல்லாம் விட்டு மறைந்திருந்தாலும் தமிழக மக்களின் வாழ்க்கைத்தரம் மேம்பட புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கண்ட கனவினையும், கொண்டிருந்த இலட்சியத்தினையும் தொடர்ந்து செயலாற்றிட இந்த அரசு உறுதி பூண்டுள்ளது என்பது திண்ணம் (மேசையைத் தட்டும் ஒலி) எனவும் மாண்புமிகு ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டுள்ளதை இங்கு பெருமிதத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

பிற்பகல் 1-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைபோல் மக்கள் நலத் திட்டங்களை அள்ளி வழங்கிய மகராசியின் ஆட்சியில் எனது தொகுதிக்குட்பட்ட கணபதி டெக்ஸ்டூல் பாலத்தை கட்டித் தந்தமைக்கும், கோவை மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் வசித்துவரும் மலைவாழ் பழங்குடியின மக்கள் உயர் கல்வி பெற்றிடும்விதமாக மேட்டுப்பாளையம் தொகுதியில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க இந்த அவையிலே அறிவித்து ஆணை பிறப்பித்தமைக்கும், கோவை மாநகர், மாவட்டக் கழகத்தின் சார்பிலும், கோவை மாவட்ட மக்கள் சார்பிலும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், எனது தொகுதிக்குட்பட்ட மருதமலையில் அமைந்துள்ள அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் பக்தர்களின் வசதிக்காக மின்தூக்கிகள் அமைத்துத் தருமாறும், மருதமலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான தேவஸ்தான பள்ளியில் புதிய அரசு கல்வியியல்



2017 ஜனவரி 31] [திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார்]

கல்லூரி ஒன்றை அமைத்திட வேண்டியும், எனது தொகுதிக்குட்பட்ட கோவை-மேட்டுப்பாளையம் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள சாய்பாபா கோயில் சந்திப்பு, கவுண்டம்பாளையம்-நல்லாம்பாளையம் சந்திப்பு ஆகிய இடங்களில் ஏற்படும் போக்குவரத்து நெரிசல்களைக் குறைத்திடும் விதமாக உயர்மட்ட மேம்பாலங்கள் கட்டித் தரவும் ஆவன செய்ய வேண்டுகிறேன். கோவை-மேட்டுப்பாளையம் சாலையில் அமைந்துள்ள புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மொத்த காய்கறி அங்காடி வளாகம் போக்குவரத்து நெரிசல் மிகுந்த பகுதியில் அமைந்துள்ளது. அங்குள்ள காய்கறி அங்காடிகளை அருகிலுள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் மாற்றி அமைத்துத் தருமாறும், சென்னை மாநகரை அடுத்த பெரிய நகரமான கோவை மாநகரில் சென்னை மாநகரில் உள்ளவாறு small bus (சிற்றுந்து) மற்றும் குளிர்சாதன பேருந்துகளை இயக்கித் தருமாறும் கேட்டுக்கொள்கிறேன். இரவு நேரத்தில் மாநகரின் மையப் பகுதியிலிருந்து நகரின் அனைத்து பேருந்து நிலையங்களுக்கும் பொதுமக்கள் சென்று வர உதவும் இரவு நேர பேருந்துகள் கடந்த தி.மு.க. ஆட்சியில் நிறுத்தப்பட்டன. அவற்றை மீண்டும் இயக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனைவரும் உட்காருங்கள்.

**திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார்:** மேலும், கோவை வடக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பாப்பநாயக்கன்புதூர் மற்றும் மணியகாரன்பாளையம் ஆகிய பகுதிகளில் உள்ள மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும், ராமசாமி நகர் மாநகராட்சி நடுநிலைப் பள்ளியினை உயர்நிலைப் பள்ளியாகவும் தரம் உயர்த்தித் தர வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்

சொல்லிய வண்ணம் செயல்”

என்கிறது உலகப் பொதுமறை. மக்களை ஏமாற்றிட எதை வேண்டுமானாலும் சொல்லி, ஆட்சிக் கட்டிலில் அமர்ந்துவிடலாம் என நினைக்கும் தலைவர்கள் மத்தியில், மக்களுக்கும், நாட்டிற்கும் பயனளிக்கக்கூடிய திட்டங்களைத் தீட்டி, அவற்றை சொல்லியவாறே செயல்படுத்தியதோடு மட்டுமல்லாமல்,

சொல்லாத திட்டங்களையும் மக்களின் தேவையறிந்து நிறைவேற்றித் தந்தவர் நம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஈராயிரம் ஆண்டுகள் கடந்தும் திருக்குறளை இயற்றிய வள்ளுவப் பெருந்தகையைப் போற்றிக் கொண்டாடும் இவ்வுலகம் அவரின் சமகாலப் புலவர்கள் யாரையும் நினைவில் கொள்ளவில்லை. அதுபோலத்தான், மக்களுக்காகவே வாழ்ந்த மாபெரும் மக்கள் தலைவி, எங்களின் மனங்களில் நிரந்தர முதல்வராக வாழ்ந்துவரும் மாண்புமிகு முன்னாள் முதல்வர் (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செயல்படுத்தியுள்ள எண்ணிலடங்காத மக்கள் நலத் திட்டங்களினாலும், தமிழர்களின் உரிமையை மீட்டெடுத்து, தமிழினத்தினைக் காத்திட்டதாலும் மாண்புமிகு அம்மா அவர்களின் புகழ் இந்த பூமி உள்ளவரை என்றென்றும் நிலைத்திருக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) எனக் கூறி, இந்த அவையில் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

பிற்பகல் 1-05

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு கொடுத்த தங்களுக்கு முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தைப் பொறுத்தமட்டில், கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். இந்த வறட்சியின் காரணமாக விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். விவசாயிகளைப் பொறுத்தமட்டில், தாங்கள் விளைவித்த பயிர் வாடுவதைப் பார்த்துக்கொண்டிருக்க முடியாமல் பலர் உயிரிழந்திருக்கிறார்கள். ஒன்று, விஷம் அருந்தி, உயிரை இழந்திருக்கிறார்கள். இல்லையென்றால் தாங்க முடியாமல், இருதய அடைப்பு போன்றவற்றால் இறந்திருக்கிறார்கள். தமிழகத்திலே சாகுபடி செய்யக்கூடிய பரப்பளவு ஏறத்தாழ 21.42 இலட்சம் ஹெக்டேர். ஆனால், நடப்பாண்டிலே 15.8 இலட்சம் ஹெக்டேரிலே விவசாயம் செய்தார்கள். ஆனால், அந்த விவசாயமும் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய அரசைப் பொறுத்தமட்டில், நிவாரணங்களை அறிவித்திருக்கிறீர்கள். அந்த நிவாரணங்களைப்





பொறுத்தமட்டில், ஒரு ஏக்கருக்கு நஞ்சைக்கு 5,465 ரூபாய் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதேபோல புஞ்சை நிலத்துக்கு 3,000 ரூபாய் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், இதற்கு முன்பாக இருந்த வறட்சியை விட இப்பொழுது ஏற்பட்டிருக்கக்கூடிய வறட்சி, மனிதர்களுடைய உயிரைப் பறிக்கக்கூடிய அளவுக்கு மோசமான வறட்சி என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். 2013-2014 ஆம் ஆண்டிலே ஒரு ஏக்கருக்கு ரூ.15,000/- இழப்பீடாக வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், இப்பொழுது நீங்கள் சொல்லியிருப்பது மிக மிகக் குறைவு.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, 2013-2014 ஆம் ஆண்டில் ஏற்பட வறட்சிக்கு பொதுவான நிவாரணமாக ரூ.4,500/-தான் வழங்கப்பட்டது. இப்பொழுது 1,000 ரூபாய் சேர்த்து 5,465 ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது பொதுவானது. இதற்குக் கூடுதலாக காப்பீட்டுத் தொகையும் சேர்த்து ஒவ்வொரு இனங்களுக்கும் வழங்கப்படுகின்ற சூழ்நிலை ஏற்படும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அவர்கள், 2012-2013-ல் வழங்கப்பட்டது என்று சொன்னது ஹெக்டேருக்கு. இப்பொழுது ஏக்கருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

**திரு. கரி. இராமசாமி:** இதற்கு நான் விளக்கம் சொல்லத் தயாராக இல்லை. ஆனால், நீங்கள் கொடுத்திருக்கக்கூடிய இழப்பீடு போதுமானது அல்ல. இன்னும் நீங்கள் அதை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதேபோல,

விவசாயிகளைப் பொறுத்தமட்டில், Insurance. Insurance செய்திருக்கிறோம். Insurance-ஐ கொடுப்பதற்கு, நீங்கள் ஒரு தனியார் நிறுவனத்திற்கு அனுமதி கொடுத்திருக்கிறீர்கள் என்று நான் எண்ணுகிறேன். அந்த காப்பீட்டு பணங்கள் எல்லாம் அந்த Insurance நிறுவனத்திற்கு சென்றடைந்து. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு 16 நிறுவனங்களை அறிவித்திருக்கிறது. அந்த 16 நிறுவனங்களில், 3 நிறுவனங்கள் குறைந்தபட்ச டெண்டர் மூலமாக இந்த Insurance திட்டத்தில் கலந்துகொண்டதினால், நாங்கள் அந்த 3 நிறுவனங்களுக்கு வழங்கியிருக்கிறோம். அதில், 410 கோடி ரூபாயை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பங்குத் தொகையாக சேர்த்து வழங்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, 2012-2013 ஆம் ஆண்டைவிட, இன்னும் கூடுதலாக 5,000 ரூபாய் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறதே தவிர, குறைவதற்கு வாய்ப்பே இல்லை என்பதை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிக்கையிலே தெரிவித்துள்ளார்கள். அதை நீங்கள் நன்றாகப் படிக்க வேண்டும். அதில் விவரமாக அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

பிற்பகல் 1-10

எந்த வகையிலும், 2012-2013 ஆம் ஆண்டு அறிவித்த வறட்சி நிவாரண நிதியைவிட தற்போது அறிவித்திருக்கிற நிதி அதிகமாக உள்ளது என்பதை இந்தப் பேரவையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.





**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு, insurance தொகை முழுமையாக இந்த நிறுவனங்களுக்கு நம் அரசிடமிருந்து இன்னமும் சென்றடையவில்லை என்று ஒரு தகவல் இருக்கிறது. அது எந்த அளவுக்குச் சரி என்பது எனக்குத் தெரியாது. அதேசமயத்திலே, சென்ற ஆண்டிலே அவர்களுக்குச் செலுத்த வேண்டிய தொகையை நீங்கள் இன்னமும் செலுத்தாமல் இருந்தால், இந்த ஆண்டிலே எவ்வாறு அந்த insurance தொகை கிடைக்கும் என்பது எனக்குப் புரியவில்லை. பொதுவாக, விவசாயிகள் நிலை மிகவும் மோசமாக இருக்கிறது. "விவசாயி சேற்றிலே கால் வைத்தால்தான் நாம் சோற்றிலே கை வைக்க முடியும்" என்று ஒரு பழமொழி சொல்வார்கள். இதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். விவசாயிகளைப் பற்றி இந்த அரசு இன்னமும் நிறைய சிந்திக்க வேண்டிய கட்டத்திலே இருக்கிறது.

அதேபோல கூட்டுறவுக் கடன். கூட்டுறவுக் கடனிலே நீங்கள் வட்டியைத் தள்ளுபடி செய்திருக்கிறீர்கள் என்று நான் எண்ணுகிறேன். அது போதாது. கூட்டுறவுச் சங்கங்கள் வழியாகக் கொடுத்திருக்கின்ற (குறுக்கீடு) நான் சொல்லி முடித்து விடுகிறேன். அந்தக் கடன்களை இரத்துச் செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் விவசாயிகளுடைய நலனிலே அக்கறை உள்ளவர்கள். இந்தியாவில் இருக்கிற தலைவர்களிலே விவசாயிகள்மீது அதிக அக்கறையும், பாசமும் கொண்ட ஒரு தலைவர், புரட்சித் தலைவி அம்மா அவர்களைத் தவிர வேறு யாரும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரையில் இல்லை. இதுவரையில் யாரும் செய்யவில்லை. விவசாயிகளுக்கு எந்தெந்த முறைகளிலெல்லாம் உதவி செய்தால் அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயரும்; வேளாண்மை உற்பத்தி அதிகமாகும் என்ற முறையில்தான் அம்மா அவர்கள் 2011-ல் ஆட்சிக்கு வந்தபோது இரண்டாவது பசுமைப் புரட்சித் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். 2 மடங்கு உற்பத்தி, 3 மடங்கு விலை கிடைக்கின்ற வகையில் அந்தத் திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். இந்த வகையிலே மாண்புமிகு அம்மா அவர்கள் இதுவரையில் எந்த ஒரு மாநில அரசும் செய்யாத

அளவுக்கு வட்டி இல்லா பயிர்க்கடன் கொடுத்திருக்கிறார்கள். கடந்த 5 ஆண்டுக் காலத்தில் 23,214 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். சென்ற ஆண்டு 5,318.73 கோடி ரூபாய் கடன் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். அதேமாதிரி வட்டிக்கு மானியம் 1,250 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். 3,789 கிடங்குகளை விவசாயிகளுக்குக் கட்டிக்கொடுத்து, சிறு, குறு விவசாயிகள், வாரத்திற்கு உழுகிற விவசாயிகள் தானியங்களை அந்தக் கிடங்குகளில் வைத்துக்கொள்ள வழி செய்துள்ளார்கள். 6 மாதங்கள், 7 மாதங்கள் வைத்த பிறகு, நல்ல விலை கிடைக்கும்போது அந்தப் பொருட்களை விற்றுக்கொள்ளலாம் என்ற வாய்ப்பையும் உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோல, உர மானியம் கொடுத்திருக்கிறார்கள். இந்த உர மானியத்தை நீங்கள் இரத்துச் செய்தீர்கள். விவசாயிகள் இன்றைக்கு இவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்றால், அதற்கு வித்திட்டவர்களே நீங்கள்தான். ஏற்கெனவே நாம் இதுகுறித்து விரிவாகப் பேசியிருக்கிறோம். கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரிலேகூட நான் சொல்லியிருக்கிறேன். 2010-லே நம்முடைய விவசாயிகள் வாங்கக்கூடிய உரங்களுக்குக் கொடுக்கின்ற மானியத்தை நீங்கள் இரத்து செய்ததினால் அன்றைக்கு இந்தியா முழுவதும் உள்ள விவசாயிகள் அதிகம் பேர் தற்கொலைக்குப் போனார்கள். இன்றைக்கு உரம் விலை இவ்வளவு கூடியிருக்கிறதென்றால், விவசாயிகளுக்கு உரத்திற்கு இவ்வளவு செலவாகிறது என்று சொன்னால், அதற்கு நீங்கள்தான், காங்கிரஸ்தான் முழுக்க முழுக்க காரணம். (மேசையைத் தட்டும் ஒலி) காங்கிரஸ், தி.மு.க. கூட்டணி அரசுதான் காரணம். அதில் மாற்றுக் கருத்தேதும் இல்லை. (குறுக்கீடுகள்) நீங்களும்தான். நீங்கள்தான் கையெழுத்தே போட்டது. (குறுக்கீடுகள்) அதனால், இந்த விவசாயிகள் (குறுக்கீடுகள்) நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். அப்புறம் விரிவாகச் சொல்ல வேண்டும். (குறுக்கீடுகள்) அவரும் அதைத்தானே சொல்கிறார். (குறுக்கீடுகள்) இன்றைக்கு நடந்திருப்பதற்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள், அமைதியாக இருங்கள்.

பிற்பகல் 1-15

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** இங்கே பாருங்கள். கேள்வி கேட்டிருக்கிறார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இவ்வளவு ஓர் அசாதாரணமான சூழ்நிலை நிலவும்போது, இந்தியா முழுவதும் உள்ள விவசாயிகளுக்கு யாருமே



கடன் கொடுக்க முன்வர முடியவில்லை. மத்திய ரிசர்வ் வங்கி கொண்டு வந்த பண மதிப்பு நீக்கத் திட்டத்தினால் 500 ரூபாய், 1,000 ரூபாய் வழங்க முடியாத சூழ்நிலையிலும்கூட, இந்த அறிவிப்பு வந்தவுடனேயே அம்மா அவர்களுடைய அரசு விவசாயிகளுக்கு எந்த வகையிலாவது கடன் கொடுக்க வேண்டும்; இந்தப் பருவத்தில் எந்த விவசாயியும் பாதிக்கப்படக்கூடாது என்ற அடிப்படையில் கடந்த—22-11-2016-ல் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தது. 23-11-2016-லிருந்து இதுவரை ஏறத்தாழ ரூ.853 கோடி அளவிற்கு கடன் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, இதுபோன்ற நடவடிக்கைகளையெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுதான் எடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) அதுமட்டுமல்ல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்திருக்கிறார்கள். மத்திய சர்க்காரும் அறிவித்திருக்கிறது. மாநிலத்தில் கூட்டுறவு வங்கிகளும் சரி, தனியார் வங்கிகளும், அதேபோல வணிக வங்கிகளும், விவசாயிகள் வாங்கியிருக்கும் கடனை மத்திய காலக் கடனாக மாற்றியிருக்கிறார்கள். எனவே, இதுபோன்ற நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மட்டுமே எடுத்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தப் பிரச்சினையை அரசியலாக்க விரும்பவில்லை. விவசாயிகள் பிரச்சினையை சட்டமன்றத்திலே எழுப்ப வேண்டும், அதற்குரிய நிவாரணத்தைப் பெறவேண்டுமென்பதுதான் என்னுடைய நோக்கமேயொழிய, நீங்கள் சொல்வதுபோல, நாங்களும், திராவிட முன்னேற்றக் கழகமும் ஒன்றாகச் சேர்ந்து, அந்த மாதிரி அரசியல் பண்ணுவதற்கு, நான் பேசவில்லை. நான் அரசியல் பேசவில்லை. நான் அரசியல் பேசவில்லை. நீங்கள் விவசாயிகளுக்கு என்ன செய்கிறீர்கள் என்றுதான் நான் கேட்டேன். (குறுக்கீடு) அவசரப்படாதீர்கள். (குறுக்கீடு) சற்று பொறுங்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இறந்த விவசாயிகளுக்கு உரிய நிவாரணங்கள் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். அதற்கு ஏன் இவ்வளவு காலதாமதம் ஆகிறது? இவ்வளவு பெரிய

[திரு. கரி. இராமசாமி] [2017 ஜனவரி 31

நிருவாகத்தை வைத்திருக்கக்கூடிய நாம், இறந்தவர்கள் எத்தனை பேர் என்று கண்டுபிடிப்பதற்கு எதற்காக நாட்களைக் கடத்த வேண்டும்? இறந்தவர்கள் அத்தனை பேருக்கும் உடனடியாக நிவாரணங்கள் கிடைப்பதற்கு இந்த அரசு உரிய நடவடிக்கையை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நான் ஆளுநர் உரையைப் படித்துப் பார்த்தேன். முழுமையாகப் படித்துப் பார்க்கும்போது, மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்கு வரவேண்டிய தொகைகள் சரியாக வரவில்லை, படிப்படியாகக் குறைந்திருக்கின்றன என்று நான் தெரிந்துகொண்டேன். பொருளாதார விஞ்ஞானி ஒருவர் சொல்லியிருக்கிறார். ஒரு ராக்கெட்டை ஏவினால் அந்த ராக்கெட் எந்த இடத்திலே போய் விழும், எப்போது திரும்பி வரும் என்று கண்டுபிடிக்க முடியாது. ஆனால், பி.ஜே.பி. அரசு இன்றைக்கு ஏவி இருக்கக்கூடிய ராக்கெட், விவசாயிகள், ஏழையெளிய மக்களுக்கு பாதகத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். இப்பொழுது பண மதிப்பீட்டு பிரச்சினையிலே இந்தியாவில் என்ன நடந்துகொண்டிருக்கிறது என்று உங்களுக்குத் தெரியும். பி.ஜே.பி. அரசினுடைய தவறுதலான போக்கால் இன்றைக்கு தமிழகத்தில் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். விளைந்த பொருளை சந்தைக்குக் கொண்டு போக முடியவில்லை, பணம் கிடைக்கவில்லை. இங்கே இருக்கக்கூடிய அத்தனை பேரும் வங்கியின் வாசலிலே போய் நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய பணத்தை, என்னுடைய பணத்தை, நான் எடுப்பதற்கு நான் பிச்சை எடுப்பதுபோல வங்கியிலே நிற்க வேண்டிய நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். (குறுக்கீடு) சொல்கிறேன். அவசரப்படாதீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சற்று பொறுங்கள். (குறுக்கீடு) உறுப்பினர்கள் யாரும் உட்கார்ந்துகொண்டு பேசவேண்டாம்.

**திரு. கரி. இராமசாமி:** அப்படிப்பட்ட ஒரு நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். (குறுக்கீடு) இதில் ஒரு சப்ஜெக்ட் இருக்கிறது. அதை வைத்துத்தான் நான் பேசுகிறேன். சப்ஜெக்ட் இல்லாமல் நான் பேசவில்லை. (குறுக்கீடு) சற்று பொறுமையாகக் கேளுங்கள். இதற்கு நமது அரசு உரிய நடவடிக்கையை எடுக்கவேண்டும். பி.ஜே.பி. அரசு இன்றைக்கு ஆட்சி செய்தாலும் மிகப் பெரிய பலமாக, மூன்றாவது இடத்திலே நீங்கள் இருக்கிறீர்கள். இந்தியாவிலே மூன்றாவது இடம். நீங்கள் சொல்வதைப்போல, அம்மையாரால்தான் அதைச் செய்ய



2017 ஜனவரி 31] [திரு. கரி. இராமசாமி]

முடிந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) இல்லையென்று நான் சொல்லவில்லை. ஏன் அதைப் பயன்படுத்தி நீங்கள் மத்திய அரசை வற்புறுத்த மறுக்கிறீர்கள். அப்படியென்றால், உங்களுக்கும், BJP-க்கும் என்ன தொடர்பு?

பிற்பகல் 1-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணன் திரு. இராமசாமி அவர்களுக்கு கொஞ்சம் மறதி அதிகமாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பண மதிப்பிழப்பு சம்பந்தமாக டெல்லியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்த்து, அங்கே ஆர்ப்பாட்டங்கள் செய்தபோது, இரண்டாவது இடத்தில் இருக்கின்ற நீங்களும் கலந்துகொண்டீர்கள், மூன்றாவது இடத்தில் இருக்கின்ற எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டு, தங்களுடைய எதிர்ப்பைக் காட்டினார்கள் என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. கரி. இராமசாமி அவர்கள்.

**திரு. கரி. இராமசாமி:** அடுத்தபடியாக, காரைக்குடி நகராட்சியிலே பாதாளச் சாக்கடை வேண்டுமென்று சொன்னோம். அதற்குரிய நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்தார்கள். ஆனால், இன்றைக்கு அது பசுமைத் தீர்ப்பாணையத்தால் தடைபட்டிருக்கிறது. அதற்குரிய நடவடிக்கையை விரைந்து எடுக்க வேண்டும். ஏனென்றால், சாலைகளெல்லாம் போட முடியவில்லை. இந்தத் திட்டத்தின்கீழ்தான் போட வேண்டுமென்று சொல்கிறார்கள். அதனால் போட முடியவில்லை. அதற்குரிய நடவடிக்கையை எடுப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

அடுத்தது, மருத்துவமனை. தொடர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமும் சொல்லியிருக்கிறேன். சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலும் அதுகுறித்து நான் பேசியிருக்கிறேன். அந்த மருத்துவமனைக்கு வேண்டிய உதவிகளை இந்த அரசு செய்ய வேண்டும். குறிப்பாக, கட்டடங்கள் இல்லை; போதிய நவீன

[திரு. கரி. இராமசாமி] [2017 ஜனவரி 31

கருவிகள் அந்த மருத்துவமனையில் இல்லை. அதையும் நீங்கள் செய்து தர வேண்டும். காரைக்குடிக்கு அருகிலே கண்டதேவி என்ற ஊர் இருக்கிறது. கண்டதேவியிலே ஒரு கோயில் இருக்கிறது. அந்தக் கோயிலிலே தொடர்ந்து தேரோட்டம் நடந்து வந்தது. ஆனால், அது இப்போது தடைபட்டிருக்கிறது. அதற்குக் காரணம் வேறு ஒன்றும் இல்லை. அந்தத் தேர் ஏதோ சிறிது பழுதாகியிருக்கிறது என்று சொல்லி, முழுமையாகக் கழற்றி வைத்துவிட்டார்கள். தமிழக அரசு அதற்குரிய நடவடிக்கையை எடுத்து, அந்தத் தேரைப் புதுப்பித்து, ஓட்டுவதற்குரிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 'NEET' தேர்வினுடைய நிலை என்ன? தமிழகத்திலே அதை தடுத்து நிறுத்துவதற்குரிய நடவடிக்கையை நீங்கள் ஏன் எடுக்கவில்லை?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி, சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** இதோ முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'NEET'-ஐப் பொறுத்தவரையில், அதை எதிர்க்கின்ற கொள்கையிலே மிகவும் உறுதியாக இருந்த ஒரே முதலமைச்சர், இந்தியாவிலேயே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எடுத்த சட்டபூர்வமான நடவடிக்கையின்மூலமாகத்தான் கடந்த ஆண்டு, ஏழை, எளிய கிராமப்புற மாணவர்கள் தொடர்ந்து ஏற்கெனவே நடைமுறையில் இருக்கக்கூடிய +2 மதிப்பெண்கள் அடிப்படையிலே மருத்துவக் கல்லூரியில் சேர்க்கப்பட்டார்கள். இந்த ஆண்டு அதுகுறித்த சட்டமுன்வடிவை இன்றைக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறோம். நாளை இதுகுறித்து விவாதம் இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுசம்பந்தமாக தொடர் நடவடிக்கை



2017 ஜனவரி 31] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

எடுப்பதில் அரசு உறுதியாக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, நீங்கள் கட்சித் தலைவராக இருப்பதால், உங்களுக்குப் பேச நிறைய வாய்ப்பு கிடைக்கும். இன்று கொஞ்சம் ஒத்துழையுங்கள். (குறுக்கீடு) உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதை நடைமுறைப்படுத்த வேண்டும். இந்தப் பிரச்சினையில் உங்களுக்கு உதவியாக நாங்கள் எல்லோரும் இருப்பதற்குத் தயாராக இருக்கின்றோம். சட்டமன்றத்தின் வாயிலாக எந்தெந்த வழியிலே வற்புறுத்தமுடியுமோ அந்த வேலைகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-25*

அடுத்தபடியாக, மதுவிலக்கு. மதுவிலக்கைப் பொறுத்தமட்டில், ஒரு சரியான தகவலை இந்த அரசு தெரிவிக்க வேண்டும். நீங்கள் 500 கடைகளை மூடியிருக்கிறீர்கள். பாக்கியை என்ன செய்யப்போகிறீர்கள்? நீங்கள் முழுமையாக மூடப்போகிறீர்களா? என்ன செய்யப்போகிறீர்கள் என்று தெரியவில்லை. 4 ஆண்டுகளுக்குள்ளாகவாவது மதுவிலக்கைக் கொண்டுவருவீர்களா, இல்லையா, என்பதும் புரியவில்லை. மதுவிலக்குப் பிரச்சினையிலே அரசு மக்களையும் தெளிவுபடுத்த வேண்டியிருக்கிறது; எங்களையும் தெளிவுபடுத்த வேண்டியிருக்கிறது. (குறுக்கீடுகள்) அதற்குரிய தகவலை நீங்கள் தெரிவிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள். உறுப்பினர் பேசி முடிக்கட்டும். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெளிவாகவே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றோம். மாண்புமிகு அம்மாவின் கொள்கை பூரண மதுவிலக்கு என்பதுதான். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்கள் 2016 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆட்சிக்கு வந்த பின்னர், மதுக்கடைகள் செயல்படும் நேரத்தையும்

[திரு. பி. தங்கமணி] [2017 ஜனவரி 31

குறைத்து, 500 கடைகளையும் மூடியிருக்கிறார்கள். இந்த அரசின் 5 ஆண்டுகாலத்தில் பூரண மதுவிலக்கு கொண்டுவருவோம் என்றுதான் அம்மா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்குரிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும். ஆனால் இவ்வளவு வேகமாக, இவ்வளவு தெளிவாகப் பேசுகிற நீங்கள், அருகில் இருக்கின்ற பாண்டிச்சேரிக்கு ஒரு குரல் கொடுத்தால் எப்படியிருக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் தமிழ்நாட்டில் இருக்கிறோம். நீங்கள் தமிழ்நாட்டில் அமைச்சராக இருக்கிறீர்கள். உங்களைக் கேட்கிறோம். பாண்டிச்சேரியிலே பேசுவதற்கு நமக்கு உரிமை கிடையாது. உங்களுக்கும் உரிமை கிடையாது, எங்களுக்கும் உரிமை கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏன் பாண்டிச்சேரியைப் பற்றிப் பேசுகிறீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நாங்கள் சொல்ல வருகின்றோம். ஏனென்று சொன்னால், பக்கத்து மாநிலங்களிலெல்லாம் மதுவிலக்கு இல்லாதபோது, தமிழகத்தில் பூரண மதுவிலக்கை கொண்டுவரும்போது, அங்கிருந்து மது வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதையெல்லாம் முழுமையாகத் தடை செய்ய வேண்டும். அதனால்தான் அம்மா அவர்கள் படிப்படியாகக் கொண்டுவருவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அருகில் இருக்கிற கர்நாடகாவிலும் உங்கள் ஆட்சி, இங்கேயிருக்கிற பாண்டிச்சேரியிலும் உங்களுடைய ஆட்சி. இதுகாறும் கேரளாவிலும் உங்களுடைய ஆட்சிதான் இருந்தது. நீங்கள் மதுவிலக்குக்கு முன்னுதாரணமாக இருந்திருக்கலாமே? ஏன் அதைச் செய்யவில்லை என்பது ஒன்று. மாண்புமிகு அம்மா அவர்கள் படிப்படியாக மதுவிலக்கை கொண்டுவருவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கொள்கையில் மாற்றம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2017 ஜனவரி 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, சீக்கிரம் உரையை முடியுங்கள். கொஞ்சம் ஒத்துழைப்புக் கொடுங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுவை ஒழிக்க வேண்டும், அதற்குரிய நடவடிக்கையை நீங்கள் எடுக்கவேண்டும் என்பதுதான் எங்களுடைய கோரிக்கை. அடுத்தபடியாக, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் ஏன் பல இடங்களிலே தடைபட்டிருக்கிறது? பல இடங்களிலே சம்பளம் சரியாக பட்டுவாடா செய்யப்படவில்லை. 3 மாதம், 4 மாதம் அளவிற்கு தாமதமாக வங்கிகளிலே வரவு வைப்பதாகச் சொல்கிறார்கள். அதற்குரிய நடவடிக்கையை நீங்கள் எடுக்க வேண்டும்.

நம்முடைய கடற்கரையிலே 144 தடை உத்தரவு பிறப்பித்திருக்கிறீர்கள். எதற்காக இந்தத் தடை உத்தரவு? எல்லோரும் அமைதியாகிவிட்டோம். இப்பொழுது எந்தப் பிரச்சினையும் கிடையாது. அங்கே யாரும் கூடுவதற்கும் தயாராக இல்லை. 144 தடை உத்தரவு எதற்கு? நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள் தீவிரவாதிகள் நுழைந்திருப்பதாக. ஏன் தீவிரவாதிகளைத் தடுக்கவில்லை? (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தீவிரவாதிகளை அடையாளம் காட்டுங்கள். நான் வருந்துகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பற்றியும், மாண்புமிகு பிரதமரைப் பற்றியும் ஏதோ தவறுதலாக செய்தி இருந்ததாகச் சொன்னார்கள். அது உண்மை என்று தெரிந்தால் நான் நிச்சயமாக வருந்துகிறேன். அதற்காக நான் கவலைப்படுகிறேன். அதேசமயத்திலே, பின்லேடன் மாதிரியான ஆட்கள் எல்லாம் பின்லேடன் படத்தை வைத்திருந்தார்கள் என்றால், அவர்களை எல்லாம் ஏன் விட்டுவைத்தீர்கள்? அவர்கள் எவ்வாறு அங்கே வந்தார்கள்? தமிழகம் ஓர் அமைதிப் பூங்காவாக இருப்பதாக நாம் பல தடவைகளில் சொல்லியிருக்கிறோம். ஆனால், அமைதிப் பூங்காவாக இருந்த தமிழகத்திலே எவ்வாறு தீவிரவாதிகள் நுழையமுடியும்? சரியான நடவடிக்கையை நீங்கள் எடுத்திருந்தால், அவர்கள் நுழைந்திருக்க முடியாது. இதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-30

காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தமட்டில். . .

[2017 ஜனவரி 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி அண்ணன் அவர்கள் ஒரு கருத்தைத் தெளிவாக இங்கே கூறிக்கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே நான் என்னுடைய பதிலிலே சொல்லியிருக்கிறேன். மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் சேர்ந்து, தமிழர்களின் பாரம்பரியமான ஜல்லிக்கட்டை நடத்த வேண்டுமென்று நடத்திய போராட்டத்தில், ஆர்ப்பாட்டத்தில் சில சமூக விரோதிகள் உள்ளே நுழைந்து குழப்பம் விளைவித்த நிகழ்வு நடந்ததால்தான், அதற்குரிய பரிகாரங்கள் இப்பொழுது தேடப்பட்டு, அதனைக் கண்டறிவதற்காக விசாரணைக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த விசாரணைக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு உரிய பதில் தரப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** இன்றைக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110-ன்கீழ் ஓர் அறிக்கை கொடுத்தார்கள். பாதிக்கப்பட்ட மீன் சந்தையை ஆரம்பத்திலே புதுப்பிப்பதாகவும், பிறகு நிரந்தரமாகக் கட்டிக் கொடுப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம். அதிலே இரண்டாவது கருத்தே கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** அதேபோல, பல வாகனங்கள் எரிக்கப்பட்டிருக்கின்றன. அந்த வாகனங்களின் நிலை என்ன?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** முடித்துவிடுகிறேன். அந்த வாகனங்களுக்கு உரிய நஷ்டஈடு கொடுப்பதற்கு நடிவடிக்கை எடுக்க வேண்டும். மீண்டும் சொல்கிறேன், தமிழகத்திலே தீவிரவாதிகள் நுழையக்கூடாது,



2017 ஜனவரி 31] [திரு. கரி. இராமசாமி]

அதைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கையை நீங்கள் எடுக்க வேண்டுமென்று கேட்டு, நீங்கள் கொடுத்த வாய்ப்புக்கு எனது மனமார்ந்த நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசினார்கள். அந்தத் திட்டத்திலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக இந்தியாவிலேயே தமிழகம் முதன்மை மாநிலமாக இருந்து வந்திருக்கிறது. இப்பொழுதும் இருந்து வருகிறது. அதிலே வேலை செய்பவர்களுக்கு சம்பளம் வழங்குவதைப்பற்றியும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். கடந்த முறை மத்தியிலே ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, பாரதிய ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்தபோதுகூட மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 230 கோடி ரூபாய் கொடுத்து சம்பளம் வழங்கப்பட்டது. தற்போதும்கூட, 2016-2017 ஆம் ஆண்டு, 35 கோடி மனித சக்தி உருவாக்கப்பட்டு, 29.14 கோடி மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 4,061.66 கோடி ரூபாய் ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. மொத்த ஒதுக்கீடு 7,105 கோடி ரூபாய். மத்திய அரசாங்கத்திடமிருந்து பணம் வருவதற்கு காலதாமதம் ஆகிறது. இப்போதுகூட நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு, நம்முடைய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையினுடைய செயலாளர் அவர்கள் நேரடியாகச் சென்று பணத்தைப் பெற்று வந்திருக்கிறார்கள். தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கடந்த காலங்களில் பார்த்தோமானால், பணம் நேரடியாக துறைக்கு வந்துவிடும். அதன் பிறகு, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குப் பிரித்துக் கொடுப்போம். இப்பொழுது, மத்திய அரசாங்கத்திடமிருந்து பணம் நேரடியாக வங்கிக்கு வந்து, வங்கியிலிருந்து நேரடியாக பயனாளிகளுக்குச் சென்றுவிடுகிறது. மத்திய அரசாங்கத்திடமிருந்து பணம் வர, வர உடனடியாக விடுவிக்கப்படுகிறது. ஒரு சில இடங்களில் இருக்கக்கூடிய குறைபாடுகள் கண்டறியப்பட்டு, அவற்றைக்

[திரு. எஸ்.பி. வேலுமணி] [2017 ஜனவரி 31

களைவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மத்திய அரசுக்கும் வலியுறுத்தப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய தொகுதியிலே பாதாளச் சாக்கடைத் திட்டத்தைப் பற்றியும் குறிப்பிட்டார்கள். காரைக்குடி நகராட்சியில் 112 கோடியே 53 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 24-12-2014-ல் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, இப்பணிக்கு 26-11-2015 அன்று பணி ஆணை வழங்கப்பட்டது. பணிகள் தொடங்கப்பட்ட நிலையில், தென் மண்டல தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தில் தொடரப்பட்ட வழக்கின் காரணமாக 18-3-2016 அன்று தடை உத்தரவு வழங்கப்பட்டது. இவ்வழக்கின் இறுதி விசாரணை 21-2-2017 ஆம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்தத் தடை உத்தரவு விலக்கிக்கொள்ளப்பட்டவுடன், பணிகளை விரைவாக மேற்கொள்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் வைக்கப்பட்டிருக்கக்கூடிய ஆளுநர் உரையின்மீது என்னுடைய கருத்துகளை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எடுத்து வைக்கக்கூடிய வாய்ப்பினைத் தந்த தங்களுக்கு முதலில் நான் நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். என் உரையைத் தொடங்குவதற்கு முன்னால், தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கக்கூடிய மாண்புமிகு முதல்வர் அவர்களையும், அவருடைய தலைமையின்கீழ் அமைச்சரவையில் இடம் பெற்றிருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும், இந்த அரசையும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2017 ஜனவரி 31] [திரு. மு.க. ஸ்டாலின்]

பிற்பகல் 1-35

ஆளுங்கட்சி மாநில நலனுக்காகச் செயல்படும்போது ஆதரித்தும், அதேநேரத்தில் அந்த நோக்கத்திலிருந்து விலகிச் செல்கிற நேரத்தில் எதிர்த்தும், இந்த அவையிலே பல நேரங்களில் விவாதங்கள் நடைபெற்றிருக்கின்றன என்பதை அனைவரும் தெளிவாக உணர்ந்து கொண்டிருக்கிறோம். தமிழகத்தைப் பல்வேறு பிரச்சினைகள் தொடர்ந்து உலுக்கிக் கொண்டிருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில், இங்கே ஆளுநர் உரை நிகழ்த்தப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் பிரச்சினைகள் நாளுக்கு நாள் எண்ணிக்கையிலும், அளவிலும் பல்கிப் பெருகி வருகின்றன. தமிழகத்தைப் பொறுத்தவரை, நல்ல பொறுப்புள்ள ** அதனாலேதான் ஆளுநர் உரை என்பது, அந்த ஆண்டுக்கான அரசினுடைய Statement of Policy-அதாவது கொள்கை அறிவிப்பு என்ற இலக்கணத்தை மீறி, இந்த ஆளுநர் உரையில் எதையெதையோ பட்டியல் போட்டு பக்கத்தை நிரப்பியிருக்கிறார்கள்.

பிரச்சினைகள் கொடும் தேளாய்க் கொட்டும்போது, கொள்கை அறிவிப்பு என்பது முயல் கொம்பாய் ஆகிவிடுகிறது. பொறுப்புள்ள எதிர்க்கட்சி ஆளுநர் உரையினுடைய தோற்றத்தை மட்டும் வைத்துக்கொண்டு கருத்துகளைச் சொல்வதைவிட, அந்த உரையில் கூறப்பட்டிருக்கக்கூடியவற்றை தீர ஆராய்ந்து பார்த்து, கருத்தைச் சொல்வது என்பது சற்று வித்தியாசமான அணுகுமுறையல்ல. நியாயமான அணுகுமுறை என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

அந்தவகையில், மத்திய வரிப் பகிர்வில் ஏற்பட்ட பாதிப்பை சரி செய்வதற்காக, ஒரு சிறப்பினமாக 2,000 கோடி ரூபாய் அளவிலான நிதியுதவியை இந்த நிதிக் குழு காலத்திலே ஆண்டுதோறும் தமிழ்நாட்டிற்கு வழங்கவேண்டுமென்று ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. மத்திய அரசின் உதவிபெறும் திட்டங்களுக்கான மத்திய அரசினுடைய பங்கினை 60 சதவிகிதத்திலிருந்து 90 சதவிகிதமாக உயர்த்தவேண்டும் என்கிற அந்தக் கோரிக்கையும் ஆளுநர் உரையிலே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. மத்திய அரசு வழங்கக்கூடிய நிதியுதவியை,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சரக்கு மற்றும் சேவை வரிச் சட்டத்தை நடைமுறைப்படுத்திய பின்னரும் தொடர வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

இலங்கை அரசு பிடித்து வைத்திருக்கக்கூடிய தமிழக மீனவர்களுடைய படகுகளை விரைவாக விடுவிக்க மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்காடு மொழியாகத் தமிழ் மொழியையும் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் ஆளுநர் உரையிலே வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

சென்னையிலே 'வர்தா' புயல் பாதிப்பின் காரணமாக, தற்காலிக மறுசீரமைப்புப் பணிகளுக்காக 1,972.89 கோடி ரூபாய், நிரந்தர கட்டுமானப் பணிகளுக்காக 20,600.37 கோடி ரூபாயும் வழங்க வேண்டுமென்றும் ஆளுநர் உரையில் கேட்கப்பட்டுள்ளது.

கடும் வறட்சிக்காக, தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து 39,565 கோடி ரூபாய் வழங்க கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு உயர் நீதிமன்றத்தின் பெயரை மாற்றம் செய்திட, இதே தமிழ்நாடு சட்டமன்றத்தில் நாமெல்லாம் ஒன்று சேர்ந்து ஏகமனதாக நிறைவேற்றிய அந்தத் தீர்மானத்தின்மீது, வேகமாக மேல்நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த ஆளுநர் உரையில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. காவேரி மேலாண்மை வாரியத்தையும், காவேரி நதிநீர் முறைப்படுத்தக்கூடிய குழுவையும் அமைக்கவேண்டும் என்றும் கேட்கப்பட்டிருக்கிறது.

ஆளுநர் உரையில் மத்திய அரசின் உதவியைக் கோரியிருக்கும் அனைத்துப் பிரச்சினைகளிலும், அவையெல்லாம் மாநிலத்தினுடைய நலனுக்கு உரியவைதான். மாநில நிதியாதாரத்திற்கு மிக முக்கியமானவை. அந்த அடிப்படையில், நானும் இந்த அவையோடு சேர்ந்து, அந்த உதவிகளை உடனடியாக மத்திய அரசு வழங்கிட வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 1-40*

காவேரியில் தண்ணீர் இல்லை; ஐந்து ஆண்டுகளாக குறுவை சாகுபடி இல்லை; இந்த ஆண்டு சம்பா சாகுபடியும் இல்லை; அதனால் விவசாயிகளுடைய வேதனைகள் குறையவில்லை; அவர்கள் வடிக்கும் கண்ணீரும் வற்றவில்லை; கரும்புக்கும், நெல்லுக்கும் கட்டுப்படியாகும் விலை நிர்ணயம் இல்லை; ஏரிகள்,



குளங்கள், ஆறுகள் தூர் வாரப்படவில்லை; கடன் சுமையாலும், கருகும் பயிராலும் விவசாயிகளுடைய தற்கொலை மரணங்கள் குறையவில்லை; விவசாயத் தொழிலாளர்கள் பற்றிய நினைப்பே இல்லை. எப்போதும் இல்லாத வறட்சி இப்போது; நூறாண்டு காணாத வறட்சி தமிழகத்தில்; குடிநீர் பஞ்சமோ குலை நடுங்க வைக்கிறது; நிவாரண பற்றாக்குறை; நிம்மதியற்ற வாழ்க்கை முறை; தூக்கம் கலைக்காத அரசு; தூக்கத்தைத் தொலைத்த மக்கள்; பாலாற்றில் ஆந்திராவின் தடுப்பணைகள் நிறுத்தப்படவில்லை; பவானி ஆற்றில் கேரளாவின் தடுப்பணை வேலைகள் நிற்கவில்லை; நாள்தோறும் நடுக்கடலில் மீனவர்கள் கைது, மீனவர்கள் பயமின்றி மீன்பிடி தொழிலை மேற்கொள்ள முடியவில்லை; புதிய கூலி உயர்வு ஒப்பந்தம் ஏற்படாததால், விசைத்தறி நெசவாளர்கள் வேலைக்குச் செல்லவில்லை; நூல் விலை உயர்வால் பல்லாயிரம் நெசவாளர்களுக்கு வேலையே இல்லை.

மத்திய அரசு ஏழாவது ஊதியக் குழுவை அறிவித்து அதன் பரிந்துரைகளை நடைமுறைக்கு உட்படுத்தியதற்குப் பிறகும், மத்திய அரசு ஊழியர்களுக்கு நிகரான ஊதியம் மாநில அரசு ஊழியர்களுக்கு இன்னமும் வழங்கப்படவில்லை; அரசு போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களின் 13-வது ஊதிய ஒப்பந்தம் இன்னமும் நடைமுறைக்கு வந்திடவில்லை; ஓய்வு பெற்ற போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியப் பணப்பயன்கள் வழங்கப்படவில்லை. சத்துணவுப் பணியாளர்களின் பணி மற்றும் ஊதியம் தொடர்பான பிரச்சினைகள் முன்னுரிமையோடு அணுகப்பட்டு முடிவுகள் மேற்கொள்ளப்படும் என்று 2011 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையிலே நீங்கள் குறிப்பிட்டுக் காட்டியிருக்கின்றீர்கள். அது என்ன ஆயிற்று என்ற கேள்வியைத்தான் நான் கேட்க விரும்புகின்றேன்.

அதேபோல், மக்கள் நலப் பணியாளர்களுக்கு பணி மறு நியமனம் வழங்க மனம் வரவில்லை. ஆசிரியர் தகுதித் தேர்வில் இட ஒதுக்கீட்டுப் பிரிவினருக்கு மதிப்பெண் தளர்வு வழங்குதல், இடைநிலை மற்றும் பட்டதாரி ஆசிரியர் நியமனத்திலே பின்பற்றப்படக்கூடிய சமூக நீதிக்கு எதிரான weightage முறையைக் கைவிடுதல், தகுதித் தேர்வில் தேர்ச்சிபெற்ற அனைவருக்கும் பணி வாய்ப்பு அளித்தல் போன்றவற்றை அக்கறையோடு கவனிக்கவில்லை. அரசுத் துறையில் நான்கு இலட்சம் காலிப் பணியிடங்களை வைத்துக்கொண்டு வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க ஆக்கபூர்வமான அணுகுமுறை இல்லை. கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியிலே மட்டுமில்லாமல், மீண்டும்

[திரு. மு.க. ஸ்டாலின்] [2017 ஜனவரி 31

ஆட்சிக்கு வந்து இந்த அவையிலே விதி 110-ன்கீழ் படிக்கப்பட்ட திட்டங்கள், இன்னமும் 70 சதவிகிதம் நிறைவேற்றப்படவில்லை. இவற்றைப்போல் எத்தனையோ பிரச்சினைகள் உண்டு.

நான் சுருக்கமாகக் குறிப்பிட்டுக் கேட்க விரும்புவது, காவல் துறை நவீனமயமாக்கல் பற்றி ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருந்தாலும் அதற்கு மத்திய அரசிடமிருந்து நிதி ஏதும் கோரியிருப்பதாகத் தெரிவிக்கப்படவில்லை. மறைந்த முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்கள் 14-6-2016 அன்று பிரதமருக்கு கொடுத்த மனுவில், காவல் துறை நவீனமயமாக்கலுக்கு ரூ.10,000 கோடி நிதி தேவை என்ற ஒரு கோரிக்கையை விடுத்திருந்தார். அதை இந்தச் சமயத்தில் அரசுக்கு நினைவூட்டுவதை என்னுடைய கடமையாக நான் கருதுகிறேன்.

அதுமட்டுமல்ல, ஆழ்கடல் மீன்பிடிப்பு பற்றி பக்கம் 28-ல் குறிப்பிட்டிருந்தாலும், அதற்காக மத்திய அரசிடமிருந்து தமிழக அரசு கோரிய ரூ.1,520 கோடி நிதியை இதுவரை பெறவும் இல்லை, இந்த ஆளுநர் உரையில் அதை வலியுறுத்தவும் இல்லை. ஆளுநர் உரையில் பக்கம் 40, 41-ல் உலக முதலீட்டாளர்கள் மாநாடு பற்றி விளக்கி சொல்லியிருக்கிறீர்கள். அதைத் தொடர்ந்து இன்னொரு உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தப்போவதாகவும் நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள். நான் கேட்க விரும்புவது, கடந்த 2015 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9, 10 ஆகிய தேதிகளில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற்ற பிறகு ரூ.2,42,160 கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதாகவும், 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. அதுமட்டுமல்ல, அந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்களுக்கு 30 நாட்களுக்குள் அனுமதி வழங்கப்படும் என்றும் தெளிவுபடுத்தப்பட்டது. ஆனால், இந்த ஆளுநர் உரையில் 3,636 கோடி ரூபாய் முதலீட்டிலான ஏழு திட்டங்களில் மட்டும் உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளதாகவும் அறிவித்திருக்கிறீர்கள். ஆகவே, ஆளுநர் உரையின்படி, இன்னும் 2,38,524 கோடி ரூபாய் முதலீடு வரவில்லை என்பது இதன் மூலமாக வெட்ட வெளிச்சமாகியிருக்கிறது. இந்த நிலையில், அடுத்த உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தப்போவதாக அறிவித்திருக்கக்கூடிய இந்த நேரத்திலே அந்த 30 நாட்கள் கெடு என்னவாயிற்று என்பதைத்தான் நான் கேட்க விரும்புகிறேன். அதாவது, 'பூனைக்குட்டி வெளியே வந்துவிட்டது' என்பது போல இப்போது ஆளுநர் உரையில் முதல் முறையாக ஒரு விஷயத்தை நீங்கள் ஒப்புக்கொண்டிருக்கின்றீர்கள். (குறுக்கீடு)



2017 ஜனவரி 31]

பிற்பகல் 1-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக தொழில் முதலீட்டாளர்கள் மாநாடு கடந்த 2015 செப்டம்பர் 9 மற்றும் 10 தேதிகளில் நடைபெற்றது. அந்தத் திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களுக்கான கால அளவு 3 முதல் 7 ஆண்டுகள் வரையாகும். இதுவரை 17 மாதங்கள் மட்டும்தான் நிறைவுபெற்றுள்ளன. இன்னும் 84 மாதங்கள் நமக்கு இருக்கின்றன. தற்சமயம், நமது ஆளுநர் உரையில்கூட 63,212 கோடி ரூபாய் முதலீட்டிற்கான 62 திட்டங்கள் பல்வேறு நிலைகளில் கையொப்பமிடப்பட்டு, ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டு, செயலாக்கத்தில் உள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது. Ease of doing business முறையை முடிந்த வரையில் வெகு விரைவில் நிறைவேற்றுவதற்கு அரசின் கவனத்தில் உள்ளது. முடிந்த வரையில், கூடிய விரைவில் நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நீதி குறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசினார். TRB, TET பரிட்சையில் தேர்ச்சி பெற்று வருபவர்களுக்கு சமூக நீதிக்காகத்தான் 60 சதவீதத்திலிருந்து 55 சதவீதமாகக் குறைத்தார், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதே அவையில் சமூக நீதியைக் காப்பதற்காக நாம் எடுத்த முயற்சியை எதிர்த்து நீதிமன்றத்திற்குச் சென்றதால்தான், சென்ற மூன்று வருடங்களாக TET-ஐ conduct பண்ண முடியவில்லை. தற்போது TET exams-க்கான தேதிகள் அறிவிக்கப்பட்டுவிட்டன. வருகின்ற ஏப்ரல் 29 மற்றும் 30 ஆகிய தேதிகளில் அந்தத் தேர்வுகள், TRB மூலமாக நடத்தப்படவுள்ளன. இதனை ஒரு மாற்றுக் கருத்தாக பதிய வைத்துக் கொண்டேயிருக்கிறார்கள், எதிர்க் கட்சியில். இத்தேர்வு, ஒரு முறை மட்டும் எழுதிவிட்டு மறந்துவிடும் தேர்வு அல்ல. ஒவ்வொரு வருடமும் ஆசிரியர்கள் தங்கள் தகுதியினை உயர்த்திக்கொள்வதற்காக இந்தத் தேர்வு தொடர்ந்து நடக்கும். ஒவ்வொரு வருடமும் ஒரு

குறிப்பிட்ட நாளில் இந்தத் தேர்வு நடக்கும் என்று கொள்கை ரீதியான முடிவை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு அறிவித்திருக்கிறது. சமூக நீதிக்காக உண்மையாகப் பாடுபட்ட ஒரே அரசாங்கம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசாங்கம் (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்**: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், இல்லை, இல்லை, இல்லை, இல்லையென்று பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி இங்கே சொல்லிக்கொண்டிருந்தார்கள். 2006-2011 ஆம் ஆண்டில், தி.மு.க. ஆட்சியில்தான் இல்லையென்ற சொல்லுக்கே அர்த்தம் இருந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஐந்தாண்டு காலத்தில், இல்லையென்ற சொல்லே தங்களுடைய ஆட்சியில் இருக்கக்கூடாதென்று (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு சிறப்பான சாதனை மிகுந்த ஆட்சியை நடத்திக் காட்டினார் என்பதனை நாளை நான் என்னுடைய பதிலில் சரியாகக் கூறுவதற்கு இருக்கின்றேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நாளைக்கு சரியாக இந்த அவைக்கு வந்து, என் உரையைக் கேட்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) உதாரணத்திற்கு ஒன்று மட்டும் விரைவில் சொல்லிக்கொள்கிறேன். ஆந்திர மாநிலத்தில் கட்டப்படுகின்ற தடுப்பணைகளைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லையென்று சொன்னார்கள். ஆந்திர மாநிலத்தில் கட்டப்படுகின்ற தடுப்பணைகளைத் தடுப்பதற்கு உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று வழக்கு தொடுக்கப்பட்டிருக்கிறது. தீர்ப்பு வருவதற்கு முன்பு கட்டப்படக்கூடாதென்று உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியிருக்கிறதென்பதை நான் இங்கு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) பவானி ஆற்றுப் பகுதியிலிருக்கின்ற பகுதியில் கேரள அரசு தடுப்பணைகள் கட்டுவதாகத் தகவல் வந்தவுடன் அந்தப் பகுதிகள் ஆய்வு செய்யப்பட்டிருக்கின்றன. ஆறு இடங்களில் அவர்கள் தடுப்பணைகள் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டு, ஓர் அணையைக் கட்டுவதற்கு* materials *மட்டும்தான் கொஞ்சம்* collect *பண்ணி வைத்திருக்கிறார்கள். அந்தப் பிரச்சினையும் மாண்புமிகு*



*பாரதப் பிரதமர் அவர்களுக்கு கடிதம் வாயிலாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இரண்டு மாநிலங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் இருக்கின்றபோது, நாம் உச்ச நீதிமன்றத்திற்கோ, உயர் நீதிமன்றத்திற்கோ செல்வதற்கு முன்னால் பாரதப் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதி, மத்திய அரசினுடைய தலையீடு இருக்க வேண்டும் என்று ஓர் அரசு கேட்பதுதான் வழக்கமான நடைமுறை. அந்த நடைமுறையைப் பின்பற்றி 10 தினங்களுக்கு முன்பாகவே மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு கடிதம் எழுதப்பட்டு, அதற்கு மத்திய அரசிடமிருந்து பதில் வராத காரணத்தால், இந்தப் பிரச்சினையையும் உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்று, வழக்கு தொடுப்பதற்கு வழக்கறிஞருக்கு அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. இன்று அல்லது நாளை அந்த வழக்கு அங்கு தொடுக்கப்படும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ........*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. நான் குறுக்கிடவில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது குறுக்கிடவில்லை. (குறுக்கீடுகள்) தற்போது அனைவரும் சொல்லும்போது நானும் சொல்ல வேண்டும் அல்லவா?*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஆழ்கடல் மீன்பிடிப்பு மற்றும் மீனவர்களுடைய வாழ்வாதாரத்திற்காக 1,560 கோடி ரூபாய்க்கு ஓர் ஒருங்கிணைந்த திட்டத்தைத் தீட்டி, மத்திய அரசிடம் அளித்தார்கள், அது என்ன நிலையில் இருக்கிறது என்பது குறித்துக் கேட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஒவ்வொரு முறையும் பாரதப் பிரதமரை சந்திக்கும்போது இதற்கு மிகுந்த அழுத்தம் கொடுத்தார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்றபோதுகூட 1,560 கோடி ரூபாய் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டுமென்ற கருத்தைச் சொன்னார்கள். அதுகுறித்து, மத்திய அரசு பரிசீலித்து வருகின்றது. இருப்பினும், அவர்கள் கொடுக்கின்ற ஒரு சூழ்நிலையில் இருந்தாலும்கூட,*

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நான் இருக்கிறேன் என்று சொல்லி, கிட்டத்தட்ட 5 ஆண்டுக் காலத்திலே மட்டும் 1,000 கோடி ரூபாய்க்கு மேலே திட்டங்களைத் தீட்டி, (மேசையைத் தட்டும் ஒலி) மீனவ மக்களை மேம்படுத்தச் செய்தார்.

பிற்பகல் 1-50

அதைப்போன்று, இலங்கை சிறையிலே இருக்கின்ற நம்முடைய மீனவர்கள் மீட்கப்படுவது குறித்து, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் இங்கே குறிப்பிட்டார்கள். ஏறக்குறைய 357 படகுகள் (குறுக்கீடுகள்) இதெல்லாம் வருமா, வராதா என்று தெரியாது. சொல்வதைக் கேளுங்கள். உங்களுடைய ஆட்சிக் காலத்தில் வரவில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் உட்கார்ந்து கொண்டு பேசாதீர்கள். (குறுக்கீடுகள்) கொஞ்சம் பேசாமல் இருங்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** நான் சொல்ல வருவதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நான் என்ன சொல்ல வருகின்றேன் என்று கொஞ்சம் கேளுங்கள். உங்களுடைய ஆட்சிக் காலத்தில் வராது. ஆனால், 357 விசைப் படகுகளை தமிழ்நாட்டிற்குக் கொண்டு வந்து சேர்த்த பெருமை நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சேரும். மத்திய அரசுக்கு எல்லாவிதமான--அதாவது, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் சொல்வது போன்று--எல்லாவிதமான அழுத்தமும் கொடுக்கப்பட்டு விட்டது. மத்திய அரசினுடைய External Affairs அமைச்சகத்தைத் தொடர்பு கொண்டு, மாநில அரசும் மிகுந்த அழுத்தம் கொடுத்ததன் அடிப்படையிலே, (குறுக்கீடுகள்) இன்னும் 118 விசைப் படகுகள் மட்டும்தான் அங்கே இருக்கின்றன. (குறுக்கீடுகள்) கொஞ்சம் புரிந்து கொள்ளுங்கள். 357 விசைப் படகுகளை மீட்டுக் கொண்டு வந்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் ஆட்சிக் காலத்தில் ஒரு விசைப் படகைக்கூட மீட்டுக் கொண்டுவரவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய அம்மா அவர்களின் ஆட்சியில் ஒரு மீனவர்கூட சுடப்படவில்லை. ஆனால், உங்களுடைய ஆட்சியில் 60 மீனவர்கள் சுடப்பட்டு இறந்தார்கள். அதைத் தெரிந்து கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்)





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசாமல் இருங்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** 118 விசைப் படகுகளையும் தமிழகத்திற்குக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும். அதைப்போல, 20 மீனவர்களை இலங்கை சிறையிலிருந்து விடுவிக்க மத்திய அரசிற்கு தொடர்ந்து அழுத்தம் கொடுத்து, அவர்களை விரைவிலே தமிழகம் அழைத்து வருவதற்கான நடவடிக்கையை இந்த அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்வாய்கள் தூர்வாரப்படவில்லை என்ற ஒரு கருத்தை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் 2016-2017 ஆம் ஆண்டுகளில் 1,262 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, 3,303 கிலோ மீட்டர் நீளமுள்ள கால்வாய்கள் தூர் வாரப்பட்டு, அதற்காக 55.95 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உரையாற்றுகிறபோது உலக முதலீட்டாளர்கள் மாநாட்டைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை எவ்வாறெல்லாம் வெற்றிகரமாக நடத்திக் காட்டினார்கள் என்பதனை நாங்கள் பல முறை இந்த அவையிலே சொல்லியிருக்கின்றோம். ஆளுநர் உரையிலும் முதலீட்டாளர்கள் மாநாடு பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், அவருக்கு

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2017 ஜனவரி 31

*வசதியாக, அவருக்குரிய சில பகுதிகளை மட்டும் எடுத்துச் சொல்லிவிட்டு, ஆளுநர் உரையில் முழுமையாக என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதை அவர் தன்னுடைய உரையில் இங்கே சொல்லவில்லை என்பதை குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

*இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியில், அதாவது உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் 3 முதல் 7 ஆண்டுகளில் 2,42,160 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகள் செய்ய 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. இவற்றில் 63,212 கோடி ரூபாய் முதலீட்டிற்கான 62 திட்டங்களின்கீழ் உற்பத்தி தொடங்கப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த 3,636 கோடி ரூபாய் பற்றி மட்டும்தான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே சொன்னார். ஆனால், 63,212 கோடி ரூபாய் முதலீட்டிற்கான ஒப்பந்தங்கள், 62 திட்டங்கள் பல்வேறு நிலைகளில் இப்போது செயலாக்கத்தில் இருக்கின்றன. ஆக, மொத்தத்திற்கு நாம் இன்றைக்கு எடுத்துச் செய்து கொண்டிருக்கின்ற பணிகளில் 63,212 கோடி ரூபாய் அளவிற்கான 62 திட்டங்களுக்கு முதலீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 3 முதல் 7 ஆண்டுகளில் 7 திட்டங்கள் தற்போது முழுமையாக முடிக்கப்பட்டிருக்கின்றன. எதைச் செய்தாலும், சொன்னாலும், அதைச் செய்து முடிக்கின்ற ஆற்றல் படைத்தவர்தான் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவருடைய வழியில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இப்போது செயலாக்கத்தில் இருந்துகொண்டிருக்கின்றது என்பதை நான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் 7 திட்டங்கள் மட்டுமே நடைபெறுவதாக இங்கே சொல்லியிருப்பது தவறான தகவல் என்பதை இந்த மன்றத்திலே பதிய வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

*பிற்பகல் 1-55*

*ஆழ்கடல் மீன்பிடி பிரச்சினைக்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் எனக் கேட்டிருக்கிறார்கள். ஆழ்கடலில் மீன் பிடிக்கிற பிரச்சினை உருவானது கச்சத் தீவு தாரை வார்க்கப்பட்டதால்தான். (மேசையைத் தட்டும் ஒலி) கச்சத் தீவு தாரை வார்க்கப்பட்டதினால், நம்முடைய மீனவர்கள்*



2017 ஜனவரி 31] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

*மீன்பிடிக்கின்ற அந்த வரையறை, எல்லைக் கோடு சுருக்கமாகி விட்டது. அதன் காரணமாக, நம்முடைய பாரம்பரிய உரிமையான ஆழ்கடலில் மீன்பிடிக்கிற உரிமையைப் பெறுவதற்காகத்தான் கச்சத் தீவை மீட்டெடுப்பதற்கு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சித் தலைவராக இருந்த நிலையில்கூட, மாண்புமிகு அம்மா அவர்கள் உச்ச நீதிமன்றத்தில், கழகத்தின் சார்பாக வழக்கினைத் தொடுத்தார்கள். மீண்டும் 2011-ல் ஆட்சிக்கு வந்த பிறகு, வருவாய்த் துறையையும் இணைத்து, அந்த வழக்கு இப்போது உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்த வழக்கில், கச்சத் தீவு இராமநாதபுரம் ராஜா சேதுபதி மன்னர் அவர்களின் சொந்த நிலமாகும். அது நம்முடைய நிலம் என்று வருவாய் ஆவணங்களில் இருக்கின்றது. அப்படி இருக்கையில், நம்முடைய ஒப்புதல் இல்லாமல், சட்டமன்றத்தில், நாடாளுமன்றத்தில் அந்த இரு அவைகளிலும் சட்டமாக்காமல், ஒப்புதல் பெறாமல், அப்பொழுது கச்சத் தீவு வழங்கப்பட்டது. அது தவறான முன்னுதாரணம் என்று தான் மாண்புமிகு அம்மா அவர்கள் உச்ச நீதிமன்றத்தில் சொல்லியிருக்கிறார்கள். உறுதியாக அது முடிவுக்கு வரும். கச்சத் தீவை தாரை வார்த்தவர்கள்தான் ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்கு என்ன தடை இருக்கிறது என்பதைத் தெரியப்படுத்த வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தவறான தகவலைச் சொல்கிறார். அதற்காகச் சொல்கிறேன். அதாவது கச்சத் தீவை நாங்கள் தாரை வார்க்கவில்லை. எங்களுக்குத் தெரியாமல் மத்திய அரசு கொடுத்ததை கலைஞர் கண்டித்துள்ளார். ஆனாலும், உங்களுடைய முதலமைச்சர், ஜெயலலிதா அவர்கள் திரு. வாஜ்பாய்க்கு எழுதிய கடிதத்தில், கச்சத் தீவைக் கொடுப்பதற்கு எனக்கு ஒன்றும் கவலை இல்லை என்று எழுதியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அவர் பேசும்போது சொல்லலாம். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

[2017 ஜனவரி 31

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளக்கங்களை எல்லாம் நீங்கள் இங்கே சொல்லியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) நான். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடுகள்) என்னவென்று சொல்லுங்கள்? (குறுக்கீடு) ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர், என்னவென்று சொல்லுங்கள்? (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர், நீங்கள் கடைசியாகப் பேசலாம். (குறுக்கீடு) பின்னர் நீங்கள் பேசலாம். இப்போது உட்காருங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் சொன்னதை வைத்து சொல்கிறேன். ஒரே ஒரு கருத்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் பிறகு சொல்லலாம், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர், உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் அமைச்சர் பேசுகின்றபோது, point of order, (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சக்கரபாணி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் கொஞ்சம் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது. சில பிரச்சினைகள், (குறுக்கீடுகள்) என்னைப் பேச விடுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.



2017 ஜனவரி 31]

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னைப் பேச விடுங்கள். (குறுக்கீடுகள்) இது தவறு. (குறுக்கீடுகள்) என்னைப் பேச விடுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசுகிறேன். (குறுக்கீடுகள்) நான் என்ன சொல்ல வருகிறேன் என்பதைக் கேளுங்கள். (குறுக்கீடு) இது தவறு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசட்டும், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர் பதில் சொல்ல வருகிறார், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது, உறுப்பினர்களுக்கு ஏதாவது அதில் point of order இருந்தால், அவர்களும் குறுக்கிட்டுப் பேசலாம். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சில குற்றச்சாட்டுகளை இங்கே பதிய வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்குரிய விளக்கத்தினை அமைச்சர் அவர்கள் சொல்வதற்கும் வாய்ப்பிருக்கிறது. (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேளுங்கள். உட்காருங்கள், உட்காருங்கள். இங்கிருக்கின்ற பெரும்பாலான உறுப்பினர்களுக்குத் தெரியாது. ஏனென்று சொன்னால், 2006-2011-ல் மாண்புமிகு அம்மா அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபொழுது--நன்றாகக் கேட்டுக்கொள்ளுங்கள், நன்றாகக் கேட்டுக்கொள்ளுங்கள், 65 தடவை மாண்புமிகு அம்மா அவர்களை இடைமறித்து கேள்வி கேட்டார்கள். (குறுக்கீடுகள்) அப்போதுகூடச் சொன்னார்கள்.

பிற்பகல் 2-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்)

அனைவரும் உட்காருங்கள். நான் சொல்வதைக் கேளுங்கள். உட்காருங்கள். உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள் என்று சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள்.

வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். நான் நிற்கிறேன் அல்லவா? நீங்கள் உட்காருங்கள். உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள் திரு. வேலு. உட்காருங்கள். இப்போது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறார், பேசுகிறபோது அமைதியாக இந்தப் பக்கம் உள்ளவர்கள் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அவர் சில விவரங்களைச் சொல்கிறார், அந்த விவரங்களுக்கு மேலும் சரியான பதிலை அளிக்க வேண்டுமென்பதற்காக விளக்கம் அளிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாய்ப்பு கேட்கிறார்கள். வாய்ப்பு கொடுக்கப்படுகிறது. *(குறுக்கீடுகள்)* இருங்கள், இருங்கள். இது சட்டமன்றத்திலே நடைமுறையிலே, *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு அமைச்சர்கள் இங்கே என்னைப் பார்த்து பேச வேண்டும். *(குறுக்கீடுகள்)* இல்லை, இல்லை, உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு சட்ட அமைச்சர், கொஞ்சம் உட்காருங்கள். நீங்கள் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு உறுப்பினர்கள் உட்காருங்கள். இப்போது ஒரு நல்ல ஆரோக்கியமான விவாதம்தான் இங்கு நடைபெறுகின்றது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அரசாங்கத்திடம் சில விவரங்களைக் கேட்டிருக்கிறார். அந்த விவரங்களுக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் பதில் சொல்ல வேண்டிய கடமை இருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் பேசுவதற்கும் வாய்ப்பை நான் முழுமையாக வழங்குவதற்குத் தயாராக இருக்கிறேன். அவர் பேசுகிற வரை இந்த அவையை நடத்துவதற்கு நான் தயாராக இருக்கிறேன். *(குறுக்கீடுகள்)* சொல்வதைக் கேளுங்கள். ஏற்கெனவே இந்த அவையிலே பல முறை எதிர்க்கட்சித் தலைவர்கள் பேசுகிறபோது ஆளுங்கட்சித் தரப்பிலேயிருந்து அமைச்சர் பெருமக்கள், நீங்கள் ஆளுகிறபோதும் சரி, இந்தப் பக்கம் இருக்கிறவர்கள் ஆளுகின்றபோதும் சரி, எதிர்க்கட்சித் தலைவர் பேசுகின்றபோது, அதற்குப் பதில் சொல்வதற்கு அமைச்சர் பெருமக்களுக்கு முழு வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. கொடுப்பதுதான் மரபு. அது மரபாக இருக்கிறது. அந்த நடைமுறையைத்தான் இப்போது கடைப்பிடிக்கிறேன். யாரும் எதிர்க்கட்சித் தலைவர் பேசுகிறபோது *(குறுக்கீடுகள்)* இருங்கள். இருங்கள். எதிர்க்கட்சித் தலைவர் பேசுகிறபோது அமைச்சர்கள் அல்லாத மற்ற உறுப்பினர்கள் யாரும் வாய்ப்பு கேட்டு, நான் உறுப்பினர்களுக்கு வாய்ப்பு தரவில்லை. *(குறுக்கீடுகள்)* இல்லை, இல்லை, அதெல்லாம் இல்லை. *(குறுக்கீடுகள்)* நான் சொல்வதைக் கேளுங்கள். இன்றைக்கு முழுக்க





முழுக்க எதிர்க்கட்சித் தலைவர் பேசுவதற்கு--அவர் பேசும்போது பொறுமையாகத்தான் சபை நன்றாக நடந்து கொண்டிருக்கிறது. அவர் குற்றச்சாட்டுகளைச் சொல்கிறார். அவர் சொல்கிற குற்றச்சாட்டுகளுக்கு, மேலும் விவரங்களை, அதைத் தவறாக சொல்லக்கூடாது; House-ஐ mislead செய்யக்கூடாது, தவறான தகவல்களைக் கொண்டு போகக்கூடாது என்பதற்காகத்தான் அமைச்சர்கள் பதில் சொல்கிறார்கள். அது நீங்கள் அமைச்சர்களாக இருந்தபோதும் நடந்திருக்கிறது. அதேமாதிரி இங்கேயும் நடந்திருக்கிறது. இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், ஒருமுறை இந்த அவையிலே மறைந்த முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தனியாக எதிர்க்கட்சித் தலைவராக இங்கே வந்து பேசுகிறபோது பல குறுக்கீடுகள் *(மேசையைத் தட்டும் ஒலி)* 65 குறுக்கீடுகள் அமைச்சர் பெருமக்களிடத்திலேயிருந்து வந்திருக்கின்றன. அதையெல்லாம் மீறித்தான் அன்றைக்குப் பேசினார். அதே முறையில்தான், இப்போது எதிர்க்கட்சித் தலைவர் பேசுவதற்கு நான் முழு வாய்ப்புத் தருகிறேன். அவர் எவ்வளவு நேரம் பேசினாலும், அவர் கொண்டு வந்திருக்கிற விவரங்கள் முழுவதையும் பேசுவதற்கு நான் அனுமதி அளிக்கிறேன். அதேநேரத்திலே, அவர் கேட்கின்ற விவரங்களுக்கு அமைச்சர் பெருமக்களும் பதிலளிக்க வாய்ப்பளிக்க வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது. அவர்களுக்கும் நான் வாய்ப்பளிக்கிறேன். ஆகவே, விவாதம் எந்தவிதமான குழப்பமும் இல்லாமல் அமைதியாக நடப்பதற்கு அனைவரும் ஒத்துழைப்பு தர வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 2-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** நீங்கள் சொன்னது correct judgement. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் சொன்ன வார்த்தைகளுக்கு ஓர் எழுத்துகூட நான் மாறுபடவில்லை. எந்த நேரத்திலும் எழுந்து விளக்கம் சொல்வதற்கு மாண்புமிகு அமைச்சர்களுக்கு உரிமை உண்டு; நான் இல்லையென்று சொல்லவில்லை. அதன்படி, அவர்கள் எழுந்து விளக்கம் சொல்கிறார்கள்; அது மரபு என்கிறீர்கள். நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால், நம்முடைய சட்டமன்றப் பேரவை

[திரு. துரைமுருகன்] [2017 ஜனவரி 31

விதிகள் என்ன சொல்கிறதென்றால், ஒருவர் பேசுகிறபோது, point of clarification, point of information, point of order போன்றவற்றை கிளப்பலாம். அதனால், நாளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்போது, இத்தனையையும் கிளப்புவோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு நான் ஒன்றை சொல்ல விரும்புகிறேன். நீங்கள் point of order கேட்கலாம்; point of clarification கிளப்பலாம். அனைத்தையும் பேரவைத் தலைவர் அனுமதித்தால்தான் பேச முடியும். (குறுக்கீடு) பேரவைத் தலைவர் அனுமதிக்காமல் பேச முடியாது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, அவருடைய பேச்சில் குறுக்கீடு செய்வதற்கு நான் ஆளுங்கட்சி தரப்பில் எந்த உறுப்பினரையும் அனுமதிக்கவில்லை. அதற்கு மாறாக, பதில் சொல்ல வேண்டிய பொறுப்பிலேயிருக்கிற, பதில் சொல்ல வேண்டிய கடமையிலேயிருக்கிற அமைச்சர் பெருமக்களை மட்டும்தான் நான் அனுமதித்திருக்கிறேன். எனவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசட்டும், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து உரிய விளக்கம் வரட்டும். மீண்டும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசட்டும். (குறுக்கீடு) அதெல்லாம் ஒன்றுமில்லை. (குறுக்கீடு) என்ன? சொல்லுங்கள். (குறுக்கீடு) ஒரேயொரு நிமிடம் பொறுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே அவையில் கச்சத் தீவு குறித்த கருத்துகள் பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுப்பப்பட்டுள்ளன. (குறுக்கீடு) திரு. ஆஸ்டின், நான் என்ன சொல்ல வருகிறேன் என்பதைக் கேட்டுக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆஸ்டின், கொஞ்சம் பொறுமையாக இருங்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** நான் என்ன சொல்ல வருகிறேன் என்பதைக் கேட்டுக்கொள்ளுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) திரு. ஆஸ்டின், நான் சொல்வதைக் கேளுங்கள்.



2017 ஜனவரி 31]

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரிடத்தில் நான் ஒரேயொரு கேள்விதான் கேட்க விரும்புகிறேன். (குறுக்கீடு) உங்களுடைய தலைவர், கச்சத் தீவை தாரை வார்த்தபோது, அன்றைக்கு பத்திரிகையைப் பார்த்து நான் தெரிந்துகொண்டேன் என்று சொன்னவர், TESO மாநாட்டில், 1976-ல் மீனவர்களுக்கு நான்தான் உரிமை வாங்கிக் கொடுத்தேன் என்று சொன்னாரென்றால், கச்சத் தீவை இவர்தான் தாரை வார்த்துக் கொடுத்தார் என்பதை அவரே ஒத்துக்கொள்கிறாரே! உங்கள் தலைவரே ஒத்துக்கொள்கிறார் என்பது ஒரு point. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** இன்னொரு point. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, நான் சொல்வதைக் கேளுங்கள். தற்போது, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்தான் பேசிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள் நீங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) அவர் பேசுவதைக் கேட்க நீங்கள் முதலில் பொறுமையாக இருங்கள். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவர் பேசும்போது விளக்கம் சொல்வது மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கடமை.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் என்கின்ற முறையில் நான் அவருக்கு மரியாதை கொடுத்து பேசுகிறேன். நான் அவரை துரைமுருகன் என்று கூறியதை வாபஸ் வாங்கிக் கொள்கிறேன். ஆனால், பத்து கோடி தமிழ் மக்களின் உள்ளங்களிலே காவல் தெய்வமாக வாழ்கின்ற முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) பெயரைச் சொல்வதற்கு, அவருக்கு என்ன தகுதி இருக்கிறது? (குறுக்கீடுகள்) அவருக்கு என்ன தகுதி இருக்கிறது? (குறுக்கீடுகள்) அம்மா இங்கிருந்தால் சொல்ல முடியுமா? முதலில் அம்மா இருந்தபோது சொல்ல முடியுமா? (குறுக்கீடுகள்) தைரியம் இருந்தால் சொல்ல முடியுமா? அம்மா இருந்தபோது சொல்ல முடியுமா? (குறுக்கீடு) அம்மா இருந்தபோது சொல்ல முடியுமா? (குறுக்கீடு) அந்த வார்த்தையை எடுங்கள். (குறுக்கீடு)

[2017 ஜனவரி 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள். (குறுக்கீடுகள்) போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** *அம்மா இருக்கும்போது சொல்லியிருந்தால் (குறுக்கீடு) அம்மா இல்லாத தைரியத்தில் நீங்கள் சொல்கிறீர்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) கடைசியாக வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) கொஞ்சம் உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)*

*பிற்பகல் 2-10*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)*

*மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசட்டும். உட்காருங்கள் எல்லோரும். (குறுக்கீடுகள்) எல்லோரையும் உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசட்டும். வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் முதலிலே. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசட்டும். வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) வாய்ப்புத் தருகிறேன்.*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் திரு. எ.வ. வேலு, திரு. பி.கே. சேகர்பாபு, திரு. எஸ். ஆஸ்டின், திரு. கே.ஆர். பெரியகருப்பன் ஆகியோர் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் இருக்கை அருகே வந்து பேச முற்பட்டனர்.)*

*உட்காருங்கள். நான் பேசச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) போய் இருக்கையில் உட்காருங்கள். போங்கள். (குறுக்கீடுகள்) போய் உட்காருங்கள். நான் வாய்ப்புத் தருகிறேன். நீங்கள் உங்கள் இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சேகர்பாபு, உங்கள் இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடுகள்) போய் உட்காருங்கள். போங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் உறுப்பினர்களை உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) போங்கள். எல்லோரையும் உட்காரச் சொல்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சேகர்பாபு, உங்கள் இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் எதிர்க்கட்சித் தலைவரைப் பேசக் கூப்பிட வேண்டும். (குறுக்கீடுகள்) இங்கே பாருங்கள் ஆஸ்டின், உங்கள் இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உங்கள் இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடுகள்)*



2017 ஜனவரி 31] [பேரவைத் தலைவர்]

*பிற்பகல் 2-15*

*எதிர்க்கட்சித் தலைவரும், துணைத் தலைவரும் உங்கள் உறுப்பினர்களை உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நான் அவரைப் பேச அழைக்கவேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை நான் பேச அழைக்கவேண்டும். (குறுக்கீடுகள்) எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். பிறகு பேசலாம். (குறுக்கீடுகள்) உங்கள் தலைவரைப் பேச அழைக்கவேண்டும்; நீங்கள் போய் உங்கள் இடத்தில் உட்காருங்கள். திரு. சேகர்பாபு, உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். நான் அவரைப் பேச கூப்பிடுகிறேன். (குறுக்கீடுகள்) முதலில் நீங்கள் உங்கள் இடத்திற்குப் போங்கள். எல்லோரும் உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். நான் அவரைப் பேசக் கூப்பிடுகிறேன். (குறுக்கீடுகள்) அவர் பேசட்டும், பேசி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) திரு. சாமி, உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். முதலில் எல்லோரும் உங்கள் இடத்திற்குச் சென்று உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, முதலில் எல்லோரும் உட்காருங்கள். எல்லோரும் முதலில் அமைதியாக உட்காருங்கள். திரு. இரவிச்சந்திரன், அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் அவரைப் பேசக் கூப்பிடவேண்டும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், எல்லோரும் முதலில் உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், என்னவென்று நீங்கள் சொல்லுங்கள். எல்லோரும்*

[பேரவைத் தலைவர்] [2017 ஜனவரி 31

கொஞ்ச நேரம் அமைதியாக இருங்கள். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவர், ஒரு நிமிடம். இன்றைக்கு இந்த விவாதத்தை (குறுக்கீடுகள்) நல்லபடியாக நடத்தி, (குறுக்கீடுகள்) சரி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) என்னைக் கொஞ்சம் பேசவிடுங்கள். என்னைக் கொஞ்சம் பேசவிடுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் (குறுக்கீடுகள்) திரு. ரங்கநாதன், திரு. அன்பழகன், திரு. சேகர்பாபு, மாண்புமிகு அமைச்சர், இங்கே பாருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள், தயவுசெய்து இந்தச் சபையை நடத்துவதற்கு ஒத்துழைப்புக் கொடுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் திரு. சண்முகம், நீங்கள் எதைப் பேசுவதாக இருந்தாலும் என்னைப் பார்த்துப் பேசுங்கள். நீங்கள் நேருக்கு நேராக அங்கே பார்த்துப் பேசுவதும், அந்த உறுப்பினர்கள் நேரடியாக உங்களிடத்திலே பேசுவதும் பல பிரச்சினைகளை, குழப்பங்களை உருவாக்குகின்றன. தயவுசெய்து அவை விதிகளுக்குக் கட்டுப்பட்டு, யாராக இருந்தாலும், என்னைப் பார்த்துப் பேசினால் பிரச்சினைகளே வராது. (குறுக்கீடுகள்) இருங்கள், உட்காருங்கள், உட்காருங்கள். உங்கள் எதிர்க்கட்சித் தலைவர் பேசிக்கொண்டிருக்கிறார். அவர் கொண்டு வந்திருக்கிற அனைத்து விவரங்களையும் பேசவேண்டும் என்பதற்காகத்தான் பொறுமையாக, நாம் சபையை இன்றைக்கு நடத்திக்கொண்டிருக்கிறோம். அவர் பேசுவதற்கு முழுமையான வாய்ப்பைத் தருகிறேன். அதேநேரத்திலே, பதில் சொல்வதாக இருந்தால் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அந்தத் துறை சார்பாக மட்டும் பதிலைச் சொல்லுங்கள். மற்ற உறுப்பினர்கள் அனைவரும் பொறுமை காத்து இந்த அவை நடப்பதற்கு ஒத்துழைப்புத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் தயவுசெய்து எது பேசுவதாக இருந்தாலும், எந்தப் பக்கமாக இருந்தாலும் சரி, என்னைப் பார்த்துப் பேசுங்கள். அதற்கு மாறாக நீங்கள் ஒருவருக்கொருவர் மாறி, மாறிப் பேசிக்கொள்வதால் சபையை நடத்துவதற்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. ஆகவே, எனக்கு ஒத்துழைப்புத் தாருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர், நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) நான் வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள்.



2017 ஜனவரி 31]

பிற்பகல் 2-20

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர், நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர்களுக்கு, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் உரையாற்றி முடித்த பின்னர், நீங்கள் விளக்கம் சொல்வதற்கு முழு ஏற்பாட்டை நான் செய்து தருகிறேன். நீங்கள் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் உங்கள் விளக்கத்தைத் தரலாம். அவர் முக்கியமாக எங்கேயாவது திசைமாறுகின்றபோது, பிரச்சினையைச் சொல்லவேண்டுமென்றால் மட்டும் என்னிடத்தில் அனுமதி கேளுங்கள். நான் அனுமதி அளிக்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை உட்காரச் சொல்லிவிட்டு, உங்களுக்கு அனுமதி தருகிறேன். (குறுக்கீடு) இப்போது, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், நான் உங்களுக்கு இறுதியாக வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) நான் இறுதியாக உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் பேசுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் எங்களுடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சில விளக்கங்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறபோது முன்னாள் முதலமைச்சருடைய. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அதை விட்டுவிடலாம்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** இல்லை, இல்லை. அது விடக்கூடிய matter அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதியில்லை. நீங்கள் வேறுபொருள் குறித்துப் பேசுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** இல்லை, விடக்கூடிய matter அல்ல அது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதியில்லை. நான் சொல்வதைக் கேளுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** முதலமைச்சருடைய பெயரைச் சொன்ன காரணத்தால், மாண்புமிகு அமைச்சர். . .

[2017 ஜனவரி 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதியில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், நான் சொல்வதை கொஞ்சம் கேளுங்கள். நான் சொல்வதை நீங்கள் கொஞ்சம் கேளுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, அதெல்லாம் இல்லை. (குறுக்கீடுகள்) இரண்டு பக்கமும் பிரச்சினை இருந்தது. (குறுக்கீடுகள்) அப்படி நடந்திருந்தால் நான் கண்டிக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களோ அல்லது ஆளும் தரப்பில் இருக்கின்ற உறுப்பினர்களோ அல்லது எதிர்த்தரப்பில் இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களோ இந்தப் பிரச்சினை ஆரம்பித்ததிலிருந்து, body language-லே அவர்கள் ஏதாவது தவறுதலாக சில சமிக்ஞைகளை செய்திருந்தால் அவற்றை அவைக் குறிப்பில் நீங்கள் ஏற்ற வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். தயைகூர்ந்து இதோடு இந்தப் பிரச்சினையை விட்டுவிடுங்கள். இதன் உட்பொருள்களை பேசிக்கொண்டே போனால், மீண்டும் பிரச்சினைகள் வருவதற்கு வழி இருக்கிறது. ஆகவே, இனிமேல் இந்த மாதிரி விரும்பத்தகாத பிரச்சினைகள் இங்கு வராமல் பார்த்துக்கொள்வதற்கு எங்களுக்கும் பொறுப்பும், கடமையும் இருக்கிறது. உங்களுக்கும் பொறுப்பும், கடமையும் இருக்கிறது. ஆகவே, சபையை நடத்துவதற்கு மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கு அனைவரும் முழு ஒத்துழைப்புத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது, அரை மணி நேரமாக (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவரும், எதிர்க்கட்சித் துணைத் தலைவரும் தயவு செய்து கொஞ்சம் co-operate செய்யுங்கள். அவையில் இந்தப் பிரச்சினை தொடங்கியதிலிருந்து இரண்டு தரப்பினரும் கட்டுக்கடங்காமல், அவரவர் உணர்ச்சிகளைக் காட்டிவிட்டீர்கள். நிறைய உணர்ச்சிகளை இங்கே பிரதிபலித்தாகிவிட்டது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் யாராவது இனிமேல் இவ்வாறு நடந்து கொண்டால், அவர்களுக்கு உரிய எச்சரிக்கையினை மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் வழங்குவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



2017 ஜனவரி 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சரியாகக் கவனிக்கவில்லை. (குறுக்கீடு) அனுமதியில்லை. அப்படி ஒரு சம்பவம் நடந்திருந்தால் (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) திரு. இரவிச்சந்திரன், நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) அப்படி ஒரு சம்பவம் நடந்திருந்தால் அதை நான் நிச்சயமாகக் கண்டிக்கிறேன். (குறுக்கீடு) அப்படி ஒரு சம்பவம் நடந்திருந்தால், (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரும், எதிர்க்கட்சித் துணைத் தலைவரும் நான் சொல்வதைக் கேளுங்கள். அப்படி ஒரு சம்பவம் நடந்திருந்தால், நிச்சயமாக நான் அதற்கு வன்மையாக என்னுடைய கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இனிமேல் அப்படி நடைபெறாமல் நிச்சயமாக இரு தரப்பினரும் ஒத்துழைப்புத் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை தொடர்ந்து பேசும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக முதலீட்டாளர்கள் மாநாடு பிரச்சினை வந்த நேரத்தில்தான், இங்கே சில சர்ச்சைகள் வந்து, வேறு திசை நோக்கி போய்விட்டது. எனவே அந்தப் பிரச்சினைக்குள் நான் போக விரும்பவில்லை. ஆனால், நான் குறிப்பாக ஒரே வரியில் சொல்ல விரும்புவது, அடுத்த உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்துவதற்கு முன்பு குறைந்தபட்சம், ஏற்கெனவே போடப்பட்டிருக்கக்கூடிய புரிந்துணர்வு ஒப்பந்தங்களின்படி முதலீடுகளைப் பெறுவதற்கான முயற்சியிலே இந்த அரசு ஈடுபட வேண்டுமென்று இந்த மன்றத்தின் மூலமாக நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 2-25

அடுத்து, அத்திக்கடவு-அவினாசி வெள்ளக் கால்வாய்த் திட்டம். இதுகுறித்து இந்த ஆளுநர் உரையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. 1,862 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டம் என்று அறிவித்துவிட்டு, வெறும் 3.27 கோடி ரூபாய் மட்டுமே நிதி ஒதுக்கப்பட்டது. அந்த நிதிகூட, consultant நியமிப்பது, நில எடுப்பு தொடர்பாக களப்பணிகள் ஆராய்வது, திட்டம் குறித்த document தயாரிப்பது என இப்படி 3 கட்டப் பணிகளுக்காக இந்த நிதி ஒதுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்திற்கான திருத்திய மதிப்பீடு (Revised proposal) விரைவில் மத்திய அரசுக்கு அனுப்பப்படும் என்று 2016-2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டது. 14-6-2016-ல்

[திரு. மு.க. ஸ்டாலின்] [2017 ஜனவரி 31

தமிழக அரசின் சார்பில் முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்கள், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைச் சந்தித்து இதற்கான மனுவையும் தந்திருக்கிறார்கள். அம்மனுவில் விரைவில் திருத்தப்பட்ட மதிப்பீடு அனுப்புகிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார். இத்திட்டத்திற்கு மத்திய அரசு நிதி ஒதுக்கித் தர வேண்டுமென்றும் கோரிக்கை வைக்கப்பட்டது. ஆரம்பக் கட்டப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட 3.27 கோடி ரூபாய் என்ன ஆனது? என்னென்ன பணிகள் நடைபெற்றுள்ளன என்று இதுவரை எந்த விவரங்களும் தெரியவில்லை. 2016-2017 ஆம் ஆண்டிற்கான பொதுப் பணித் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பிலே, இத்திட்டத்திற்காக 3,523 கோடி ரூபாய். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், ஒரே ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது ஒவ்வொரு கருத்திற்கும் கேள்வி கேட்கிறவிதமாகப் பேசுகிறார். அவருக்கு அதற்கு உரிமை இருக்கிறது. அந்தக் கேள்விக்கு என்ன பதில், கேள்விக்கு என்ன பதில் என்று இப்போதே எங்களை பதில் சொல்லத் தூண்டுகிற அளவில் அவருடைய கேள்வி இருக்கிறது. ஆகவே, அவர் பேசுகின்றபொழுதே, நாளை அளிக்கவிருக்கிற பதிலுரையில் தாங்கள் பதில் சொன்னால் போதும் என்று சொன்னால் போதுமானதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** அதனால்தான் அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலுரை ஆற்றவிருக்கின்ற நாளில் எதிர்க்கட்சித் தலைவர் பேசுவதற்கு வாய்ப்பு வழங்குமாறு நாங்கள் கேட்டோம். அதுதான் மரபுவழியாக நடந்து வந்திருக்கிறது. ஆனால், அந்த வாய்ப்பு எங்களுக்கு வழங்கப்படவில்லை. அடுத்த முறையாவது எதிர்க்கட்சித் தலைவருக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலுரை வழங்கும் நாளில் பேச வாய்ப்பு வழங்கினீர்களேயானால், இந்தப் பிரச்சினை எழாது. (மேசையைத் தட்டும் ஒலி) அதுதான் என்னுடைய கருத்து.



2017 ஜனவரி 31] [திரு. மு.க. ஸ்டாலின்]

ஆக, 2016-2017 ஆம் ஆண்டிற்கான பொதுப் பணித் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பிலே இத்திட்டத்திற்கு 3,523 கோடி ரூபாயிலே திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்திருக்கிறீர்கள். இதற்கிடையில் 1,862 கோடி ரூபாய் வெள்ளத் தடுப்பு மேலாண்மைத் திட்டத்திற்கு, திட்ட மதிப்பீட்டின்மீது 13 சந்தேகங்களை எழுப்பி, அவற்றுக்கு மத்திய நீர் வளத் துறை சார்பில் தமிழக அரசிடம் விளக்கம் கேட்கப்பட்டது. அந்த விளக்கத்தையும் இதுவரை அனுப்பவில்லை. திருத்திய மதிப்பீடும் இதுவரையில் கொடுக்கப்படவில்லை. இதனால் இத்திட்டத்தை, மத்திய நீர்வளத் துறை இப்போதைக்கு ஆய்வுக்கு எடுப்பது சாத்தியமல்ல என்ற செய்தியை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் நான் பெற்றிருக்கிறேன்.

ஆக, கோவை, திருப்பூர், ஈரோடு போன்ற மாவட்டங்களுக்கு பயனளிக்கக்கூடிய வகையில், இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் காலதாமதம் ஏற்படுவது மிக, மிகக் கவலை அளிக்கிறது என்பதை இந்த அவையிலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன். அதேபோல், 36 இலட்சம் மக்களுக்கு குடிநீரும், முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளுடைய மேன்மைக்கும் பயன்படக்கூடிய வகையில் அத்திக்கடவு-அவினாசி வெள்ளக் கால்வாய்த் திட்டத்தை மாநில அரசு நிதியில், போர்க்கால அடிப்படையில் நிறைவேற்ற இந்த அரசு முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, விவசாயிகளுடைய தற்கொலை குறித்து. இந்த அவையில் அது குறித்து நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே, அதுகுறித்து நான் விளக்கமாக, விரிவாகப் பேச விரும்பவில்லை. சுருக்கமாக நான் கேட்க விரும்புவது, **விவசாயிகள் தற்கொலை என செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட 10-1-2017 அன்று தமிழகத்தை வறட்சி மாநிலமாக அறிவித்தார்கள். அறிவித்த நேரத்தில், ஓர் அறிக்கையைக்கூட வெளியிட்டார்கள். அந்த அறிக்கையிலே 17 விவசாயிகள் தற்கொலை என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், அதே அறிக்கையிலே மேலும் சொல்லியிருக்கிறார், வறட்சி பாதிப்பு காரணமாக அதிர்ச்சியில் விவசாயிகள் உயிரிழப்பு ஏற்பட்டிருக்கிறது என்று. எனவே, ஊடகங்களிலே அந்தச் செய்திகள் எல்லாம் வந்துகொண்டிருக்கின்றன.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இதுபற்றி விரிவான அறிக்கையை தயாரித்துத் தரவேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்தில் அறிவுறுத்தப்பட்டிருப்பதாக அந்த அறிக்கையில் எடுத்துச் சொன்னார்கள். அதுமட்டுமல்ல, அந்த அறிக்கை கிடைத்த பிறகு, உரிய நிவாரணத் தொகை நிச்சயம் வழங்கப்படும் என்ற நம்பிக்கையை, உறுதியைத் தந்திருக்கிறார்கள். அந்த அறிக்கையில் மட்டுமல்ல, இந்த சட்டமன்றக் கூட்டத் தொடர் தொடங்கியபிறகு 27-1-2017 அன்று சட்டமன்றத்தில் இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டபோது, மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்தில் அறிக்கை கேட்டிருக்கிறோம் என்ற அதே பதிலைத்தான் இங்கேயும் வழங்கியிருக்கிறார்கள். விவசாயிகளுடைய தற்கொலை என்பது மிக, மிக முக்கியமான ஒரு பிரச்சினை. அந்தக் குடும்பங்களுக்கு நிவாரணம் கொடுக்க வேண்டும் என்பது மிக அவசியமாக இருக்கிறது. ஆக, அரசு ஒரு முடிவை எடுத்து, அறிக்கை வெளியிடப்பட்டு இன்றோடு 21 நாட்கள் கழிந்திருக்கின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து இன்னமும் அந்த அறிக்கை வரவில்லை என்று சொன்னால், விவசாயிகளுடைய தற்கொலை பற்றி இந்த அரசுக்கு அக்கறையில்லை என்பதைத்தான் இது எடுத்துக்காட்டுகிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதே நேரத்தில் நான் வைக்கக்கூடிய ஒரு வேண்டுகோள், உடனடியாக அறிக்கையைப் பெற்று, நிவாரண நிதியை உடனே வழங்க வேண்டுமென்றும், அவர்கள் வீட்டில் ஒருவருக்கு அரசு வேலைவாய்ப்பு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையையும் (மேசையைத் தட்டும் ஒலி) நான் இந்த அரசுக்கு எடுத்து வைக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 2-30

அடுத்து, லோக் ஆயுக்தா. டெல்லியில் நடைபெற்ற மிகப் பெரிய போராட்டத்திற்குப் பிறகு, மத்தியில் லோக்பாலும், மாநிலங்களில் லோக் ஆயுக்தாவும் அமைக்கக்கூடிய சட்டம் நிறைவேற்றப்பட்டது. அந்தச் சட்டம் 2014, ஜனவரி 1 ஆம் தேதி இந்திய அரசிதழில் வெளியிடப்பட்டது. இச்சட்டத்தினுடைய 63-வது பிரிவின்கீழ் 365 நாட்களுக்குள் மாநிலங்களில் லோக் ஆயுக்தாவை உருவாக்க வேண்டும் என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. இதன்படி 20-க்கும் மேற்பட்ட மாநிலங்களில் லோக் ஆயுக்தா அமைக்கப்பட்டுவிட்டது. குறிப்பாக, தென்னகத்திலே கர்நாடகா, கேரளா, ஆந்திரா ஆகிய மூன்று மாநிலங்களில் லோக் ஆயுக்தா அமைப்பு உருவாக்கப்பட்டு இருக்கிறது. ஆனால், தமிழகத்திலே இன்னமும் அமைக்கப்படவில்லை.





தமிழகத்திலே பல்வேறு இடங்களில் அரசு அதிகாரிகள், முன்னாள் அமைச்சர்களுடைய வீடுகளில் எல்லாம்கூட வருமான வரித் துறை ரெய்டு நடத்தியிருக்கிறது என்பது நாட்டுக்கு நன்றாகத் தெரியும்.

ஜூன் மாதத்தில் இதே சட்டமன்றத்தில் ஆளுநர் ஆற்றியிருக்கக்கூடிய உரையில் தமிழ்நாட்டில் லோக் ஆயுக்தா நிறுவப்படும் என்று வாக்குறுதி அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த ஆளுநர் உரையில் அதுபற்றிய எந்தச் செய்தியும் இல்லை, எந்த வாக்குறுதியும் இடம்பெறவில்லை. ஏற்கெனவே ஆளுநர் உரையில் அளித்த அந்த வாக்குறுதிபடி லோக் ஆயுக்தா அமையவும் இல்லை. ஆகவே, உடனடியாக லோக் ஆயுக்தாவைக் கொண்டு வருகிற முயற்சியிலே இந்த அரசு ஈடுபட வேண்டுமென்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, UDAY திட்டம். இந்த அரசு UDAY திட்டத்தில் சேருவதற்கு முதலில் மறுத்திருக்கிறது. அதற்கு சில காரணங்களை எல்லாம் இந்த அரசு சொல்லியிருக்கிறது. அது எல்லோருக்கும் தெரியும். சில முக்கிய காரணங்களைக்கூட நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அதாவது, மூன்று மாதத்திற்கு ஒரு முறை மின் கட்டணத்தை உயர்த்த முடியாது. மாநில அரசு ஏற்றுக்கொள்ளும் 75 சதவீத மின் பகிர்மானக் கழகத்தின் கடனில், 25 சதவிகிதத்தை மத்திய அரசு மானிமாக வழங்க வேண்டும். UDAY திட்டம் தனியார் மின் உற்பத்தியாளர்களுக்கும், வங்கிகளுக்கும் இலாபகரமாக இருக்கும். வளர்ச்சித் திட்டங்கள் எதையும் செயல்படுத்த முடியாது. 2015-2016-ல் இருக்கக்கூடிய நிலையில், 14.58 சதவிகிதம் மின் இழப்பை, 2018-2019 ஆம் வருடத்திற்குள் சரி செய்ய தேவையான உட்கட்டமைப்பு வசதிகளுக்கு மத்திய அரசு நிதியுதவி செய்ய வேண்டும். இவை எல்லாம் நீங்கள் மறுத்ததற்குக் காரணமாக இருந்திருக்கின்றன, ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், 9-1-2017 அன்று மத்திய அரசு, மாநில அரசு மற்றும் மின் பகிர்மானக் கழகம் ஆகியவற்றிற்கிடையிலே ஒரு முத்தரப்பு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டிருக்கிறது. அதாவது, UDAY திட்டத்தில் 21-வது மாநிலமாக தமிழ்நாடு சேர்ந்திருக்கிறது.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2017 ஜனவரி 31

ஆனால், கையெழுத்துப் போட முதலில் மறுத்ததற்கான காரணங்கள் பல இன்னமும் அப்படியே இருப்பதாகத்தான் தெரிகிறது. மாநில அரசு ஏற்றுக்கொண்ட மின் பகிர்மானக் கழகத்தின் 75 சதவிகிதக் கடனில் மத்திய அரசு 25 சதவிகித மானியத்தை அளிக்கவில்லை. ஒவ்வொரு நவம்பர் மாதமும் மின் கட்டணத்தை உயர்த்த tariff petition தாக்கல் செய்ய வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. அப்படியென்றால், ஒரு வருடத்திற்கு ஒரு முறை மின் கட்டணம் உயர்த்தப்படப் போகிறதா? மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மின் கட்டணத்தை உயர்த்த முடியாது என்ற எங்கள் கோரிக்கையை மத்திய அரசு ஒப்புக் கொண்டு விட்டது என்று கூறியிருக்கிறீர்கள். இதற்குத் தெளிவான ஷரத்து ஏன் இந்த ஒப்பந்தத்திலே இடம்பெறவில்லை என்ற கேள்வியைத்தான் நான் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், ஒரு நிமிடம் உட்காருங்கள். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் UDAY திட்டத்தைப் பற்றி பல கேள்விகளைக் கேட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும்போது எப்பொழுதும் UDAY திட்டம் வேண்டாம் என்று சொல்லவில்லை. தமிழகத்திற்கு பாதிப்பாக இருப்பதை நீங்கள் மாற்றி அமைத்தால் நாங்கள் அதில் சேருகிறோம் என்றுதான் மாண்புமிகு அம்மா அவர்கள் சொல்லியிருந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே முக்கியமாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சுட்டிக்காட்டியபடி, 75 சதவிகிதம் மாநில அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும், 25 சதவிகிதம் மத்திய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது எங்களுடைய கோரிக்கை. அதோடு பல கோரிக்கைகளை வைத்தோம், அதில் முக்கியமான கோரிக்கையை இப்பொழுது நீங்கள் பதிய வைத்திருக்கின்றீர்கள். அது நாளையதினம் பத்திரிகையில் தவறாக வந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் நான் குறுக்கிட்டுச் சொல்ல வேண்டிய காலகட்டத்தில் இருக்கின்றேன். எந்தக் காரணத்தைக் கொண்டும், வருடத்திற்கு வருடம் மின் கட்டணத்தை ஏற்றுகின்ற முறை நூற்றுக்கு நூறு இல்லை என்பதை தெளிவாகச் சொல்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, மூன்று மாதத்திற்கு ஒரு முறை மின் கட்டணத்தை மாற்றியமைக்க வேண்டும் என்ற அந்தக்



2017 ஜனவரி 31] [திரு. பி. தங்கமணி]

கொள்கைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் கோரிக்கை வைத்ததனால்தான் இன்று இந்தியா முழுவதுமே அந்தத் திட்டத்தில் யார் வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் செய்துகொள்ளலாம் என்று மாற்றியமைத்து இருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, இந்தியாவுக்கே வழிகாட்டியாக அம்மா அவர்கள் இருந்திருக்கின்றார்கள், அது ஒன்று. இன்னொன்று, ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்கள் அந்த வங்கிகளுக்கு இலாபமாக இருக்கும்.... (குறுக்கீடு) சொல்லி முடித்துவிடுகிறேன்.

பிற்பகல் 2-35

ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்கள் அந்த வங்கிகளுக்கு இலாபமாக இருக்கும் என்பதனால் அத்திட்டத்தில் சேரவில்லை என்று சொல்லியிருப்பதாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அந்தத் திட்டத்தின் முழு ஷரத்தையும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் படிக்கவில்லை என்று நினைக்கின்றேன். மாண்புமிகு அம்மா அவர்கள் என்ன சொன்னார்கள் என்று சொன்னால், 75 சதவீத கடனை மாநில அரசு மின் வாரியத்திற்குக் கொடுத்துவிடுகின்றது. 25 சதவீத தொகையை மத்திய அரசு மாநில அரசுக்கு மானியமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். நீங்கள் காங்கிரஸ் அரசுடன் மத்தியில் கூட்டணியாக இருந்தபொழுது ஒரு சீரமைப்புத் திட்டத்தை 2012 ஆம் ஆண்டு கொண்டுவந்தீர்கள். அந்தச் சீரமைப்புத் திட்டத்தில்கூட 25 சதவீத மானியம் மாநிலத்திற்கு தர வேண்டும் என்று இருந்தது. ஆனால், கடைசிவரையில் அந்த மானியத்தைக் கொடுக்காமலேயே அந்த அரசு ஆட்சியை விட்டுச் சென்றுவிட்டது. அதற்குப் பிறகு, அதே அடிப்படையில் மாண்புமிகு அம்மா அவர்கள், இந்தச் சீரமைப்பிற்காக மத்திய அரசின் 25 சதவீத மானியம் வழங்க வேண்டும் என்று கேட்கின்றபோது, வேறு எந்த மாநிலத்திற்கும் நாங்கள் கொடுக்கவில்லை, அதனால் தமிழகத்திற்கும் நாங்கள் கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள்.

அதேபோல, விவசாயத்திற்கு மீட்டர் வைக்க வேண்டும் என்பது மத்திய அரசின் உதய் திட்டத்தின் கொள்கை. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் எந்தக் காரணத்தைக் கொண்டும் விவசாயத்திற்கு மீட்டர் என்பதே கிடையாது, இலவச மின்சாரம் தொடரும் என்று தெளிவாக அறிவித்தார்கள். (மேசையைத் தட்டும்

[திரு. பி. தங்கமணி] [2017 ஜனவரி 31

ஒலி) அதற்குப் பின்னர்தான் அந்தத் திட்டத்திலே கையெழுத்திட்டிருக்கின்றோம்.

அடுத்தபடியாக, 75 சதவீத கடனை நாம் ஏற்றுக்கொள்கின்றபோது மாநில அரசுக்கு அதனால் அதிக சுமை ஏற்படும் என்ற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கின்றீர்கள். ஆனால், மாநில அரசு வெளியிட்ட கடன் பத்திரங்களில் மீதான வட்டி விகிதம் மின் வாரியம் வங்கிகள் மற்றும் நிறுவனங்களுக்கு செலுத்துகின்ற வட்டி விகிதத்தை காட்டிலும் மிக குறைவாக உள்ளதால் மாநில அரசு, மின்வாரியத்திற்கு தற்பொழுது வழங்குகின்ற நிதியுதவி குறிப்பிடத்தக்க அளவு குறைகிறது. மேலும், மின் வாரியத்தின் கடன்களை அரசு ஏற்றுக்கொண்டால் மின் வாரியத்திற்கு ஆண்டொன்றுக்கு 6.2,882 கோடி வட்டி சுமை குறைகிறது. இக்காரணத்தால் மாநில அரசு மின் வாரியத்திற்கு ஒதுக்கீடு நிதியில் ஒரு பகுதியியை குறைத்துக்கொள்ளலாம் என மின் வாரியம் தெரிவித்துள்ளதால், மாநில அரசுக்கு எந்தவிதத்திலும் நிதிச் சுமை அதிகரிக்காது என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு சொல்லிக்கொள்கின்றேன்.

அதேபோல, இத்திட்டத்தில் மொத்த கடன் தொகை ரூ.81,312 கோடியாக இருக்கிறது. இதைச் சொன்னால், நான் அரசியலுக்காக சொல்வதாக நினைப்பீர்கள். 2006 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மொத்தக் கடன் தொகையே 9,000 கோடி ரூபாய்தான். 2006 முதல் 2016 வரையான இந்த பத்தாண்டு காலத்திற்குள்தான், அதிலும் உங்களுடைய 2006-2011 ஆட்சிக் காலத்தில்தான், 45,000 கோடி ரூபாய் கடனாகப் பெற்றிருக்கின்றீர்கள். நீங்கள் இதில் முதலீடுகளையும் செய்திருக்கின்றீர்கள். நான் இல்லையென்று சொல்லவில்லை. தி.மு.க. ஆட்சியில் 45 சதவீதம் முதலீடு செய்திருக்கின்றீர்கள். அ.தி.மு.க. ஆட்சியில் 55 சதவீதம் முதலீடு செய்திருக்கின்றோம். மின் உற்பத்தியும் அதிகமாகிக் கொண்டேயிருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னதைப் போல, தமிழகத்தை மின் மிகை மாநிலமாக உருவாக்கிக் காட்டியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மின்சாரத்தை வாங்குகின்ற விலைக்கும், விற்கின்ற விலைக்கும் உள்ள வித்தியாசம் 2 ரூபாய் 16 பைசாவாக இருந்தது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக இப்பொழுது 0.66 பைசாவாகக் குறைந்திருக்கிறது என்று சொன்னால், இனி வருங்காலத்தில், மின்சார வாரியத்திற்கு நிதி



2017 ஜனவரி 31] [திரு. பி. தங்கமணி]

இழப்பு இல்லாமல் இலாபத்தில் இயங்கக்கூடிய ஒரு சூழ்நிலையை மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கித் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், line loss பற்றிச் சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அதை சரியாகப் படிக்கவில்லை என்று நினைக்கின்றேன். எப்பொழுதுமே 16 சதவீதத்தை 0% என்று மத்திய அரசு சொல்லவில்லை. 16 சதவீதத்தை 15 சதவீதத்திற்குள் கொண்டு வர வேண்டும் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். அதில்கூட, தமிழகத்தில் அந்த சதவீதம் எப்படி வருகிறது என்று சொன்னால், விவசாயத்திற்காக 21 இலட்சம் மின் இணைப்புகளைக் கொடுத்திருக்கின்றோம். அதனால் ஏற்படும் மின் இழப்பு இருக்கின்றது. அதேபோல, குடிசைகளுக்காக 11 இலட்சம் மின் இணைப்புகள் கொடுத்திருக்கின்றோம். அதிலும் மின் இழப்பு இருக்கின்றது. அதையெல்லாம் சேர்த்துதான் line loss என்று சொல்லக்கூடிய AT & C loss வருகின்றதேயொழிய, ஏதோ மத்திய அரசு கொடுக்கும் மானியத்தை மாநில அரசு பெற்றுக்கொள்வதை வைத்து line loss-ஐக் குறைப்பதாக அர்த்தம் ஆகாது என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த ஒப்பந்தத்தைப் பொறுத்தவரை, அனைத்து விவரங்களையும் இணையதளத்தில் வெளியிட்டிருக்கின்றோம். அதில் எந்த சந்தேகம் இருந்தாலும், நீங்கள் கேட்டால் அதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக பதில் சொல்ல நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது விவசாயிகளுடைய மரணங்களைப் பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொல்கின்றபோது, தற்கொலை பற்றி சில தவறான புள்ளிவிவரங்களை இங்கே பதிய வைத்திருக்கிறார். அதற்குரிய விளக்கத்தை நான் தராவிட்டால் நாளை அந்தச் செய்தி, பத்திரிகைகளில் தவறான புள்ளிவிவரங்களுடன் வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2017 ஜனவரி 31]

எதிர்க்கட்சித் தலைவர் பேசுகின்றபோது ஏற்கெனவே எங்களுடைய அறிக்கையில், விவசாயக் காரணங்களுக்காக அல்லாமல் பிற காரணங்களுக்காக தற்கொலை செய்து கொள்கின்ற விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்கப்படும் என்று நாங்கள் அறிவித்திருக்கின்றோம். அவர்கள் 17 பேர் என்று அறிவித்திருக்கிறோம். இன்னும் பிற காரணங்களுக்காக தற்கொலை அல்லாத மரணங்கள் ஏற்பட்டிருந்தால், அதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து உரிய அறிக்கையைப் பெற்று நிவாரணம் உறுதியாக வழங்கப்படும் என்று நாங்கள் அறிவித்தோம். உறுதியாக வழங்குவோம். (மேசையைத் தட்டும் ஒலி) இதில் எந்தவித சந்தேகத்திற்கும் இடமில்லை.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது **தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள் என்ற ஒரு கருத்தை இங்கே பதிய வைத்திருக்கின்றார். அந்த **என்பது தவறான கருத்து. (குறுக்கீடு) நான் சொல்லி முடித்துவிடுகிறேன். அவரிடம் தகுந்த மருத்துவச் சான்றோடு கூடிய ஆதாரம் இருந்தால், அதை அவைக் குறிப்பில் ஏற்ற வேண்டும். இல்லாவிட்டால் அதை அவைக் குறிப்பில் ஏற்றுவதைத் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்குண்டான ஆதாரம் ஏதாவது இருந்தால் அதைக் கொடுங்கள். நான் ஏற்றுக்கொள்கிறேன். இல்லாவிட்டால் அதுவரை அதை நிறுத்தி வைக்கிறேன். (குறுக்கீடு) சொல்லுங்கள்.

*பிற்பகல் 2-40*

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதல்வர் சொல்வதை ஏற்றுக்கொள்கிறேன். அவரே சொல்லியிருக்கிறார். மாவட்ட ஆட்சித் தலைவர் ஆய்வு நடத்தியதற்குப் பிறகு அது முறையாக இருந்தால், வழங்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, **நாங்கள் ஏதோ ஆதாரம் இல்லாமல் சொல்வதாக அவர் இங்கே சொல்கிறார். **எனவே, நானும் அதைத்தான் சொல்கிறேன். நான் ஆய்வு நடத்த... (குறுக்கீடுகள்) ஆய்வு செய்யுங்கள். ஆட்சித் தலைவர் மூலமாக

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2017 ஜனவரி 31] [திரு. மு.க. ஸ்டாலின்]

வரக்கூடிய ஆய்வறிக்கையின் அடிப்படையில் நீங்கள் வழங்குங்கள் என்றுதான் கோரிக்கை வைத்தேனே தவிர வேறெந்த நோக்கத்துடனும் வைக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஓர் அறிக்கை வருகிற வரையிலும், ஆதாரம் இல்லாமல் நாம் சொல்லக்கூடாது இல்லையா? அதனால், அந்த ** என்பதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை. அதனை நீக்குகிறேன். அதற்குண்டான ஆதாரத்தை நீங்கள் கொண்டு வந்து கொடுத்தால் நிச்சயம் நான் மறுபடியும் ஏற்றுக்கொள்கிறேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை, மாவட்ட ஆட்சித் தலைவர்தான் certify செய்ய வேண்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடு) சொல்கிறேன், கேளுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) பொறுமையாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** உட்காருங்கள். (குறுக்கீடு) Sugar இருக்கிறது. நீங்கள் இன்னும் சாப்பிடவில்லை. (குறுக்கீடு) நேரம் ஆக, ஆக உங்களுக்கு கோபம் வரும். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்கொலை அல்லாத விவசாய மரணங்கள், விவசாயம் சம்பந்தப்பட்ட நிகழ்வுகளினால் அவர்கள் அதிர்ச்சி அடைந்து இறந்திருந்தால், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்து அறிக்கை பெறப்பட்டு உரிய நிவாரணம் வழங்கப்படும் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த மாதிரியான மரணங்களுக்கு இப்பொழுது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்து அறிக்கை வந்து கொண்டிருக்கிறது. அரசு பார்த்து, ஆய்ந்து, ஆராய்ந்து உரிய நிவாரணம் வழங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, ** என்பது **இருக்கிறது. ஆதாரம் இல்லாமல் எப்படிச் சொல்ல முடியும்? அறிக்கை வரட்டும். (குறுக்கீடு) அறிக்கை வரட்டும். நாம் அதை சேர்த்துக்கொள்ளலாம்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மின் துறை அமைச்சர் அவர்கள், உதய் திட்டத்திலே நான் கேட்ட சில கேள்விகளுக்கெல்லாம் விளக்கம் தந்திருக்கிறார்கள். நான் கேட்க விரும்புவது, மின் கட்டண உயர்வுக்கே ஒப்புக்கொள்ள மாட்டோம் என்று சொன்ன நீங்கள், 2015-ல் 15 சதவிகித மின் கட்டண உயர்வுக்கு கையெழுத்து போட்டிருக்கிறீர்கள். அப்படியென்றால் 2015-ல், உதய் திட்டத்தில் சேருவதற்கு முன்னோட்டமாகத்தான் மின் கட்டணத்தை உயர்த்தினீர்களா? 2019-ல். . .(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லி முடிக்கட்டும். பிறகு நீங்கள் சொல்லுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** 2019-ல் 6 சதவிகித மின் கட்டண உயர்வு செய்வோம் என்று ஒப்புக்கொண்டு வந்திருக்கிறீர்களே, அது எப்படி? இன்னொரு முக்கிய பிரச்சினை. விவசாயிகள் தவிர அனைத்து மின் நுகர்வோருக்கும் மாதம் 500 யூனிட்டுக்குமேல் நுகர்வோருக்கு 31-12-2018-க்குள்ளும், மாதம் 200 யூனிட்டுக்குமேல் நுகர்வோருக்கு 31-12-2019-க்குள்ளும் smart meter பொருத்த வேண்டும் என்று ஒரு கெடு விதிக்கப்பட்டிருக்கிறது. அப்படியென்றால், கைத்தறி நெசவாளர்கள், விசைத்தறி நெசவாளர்கள் போன்றோருக்கு வழங்கப்படக்கூடிய இலவச மின்சாரம் என்ன ஆகப் போகிறது? 2019 மார்ச் மாதத்திற்குள்... . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அந்த subject குறித்து பேசி முடிக்கட்டும். பிறகு நீங்கள் பேசுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** 2019 மார்ச் மாதத்திற்குள் விவசாயிகள் வைத்திருக்கக்கூடிய 10 சதவிகித விவசாய பம்ப்செட்களை energy efficient pumps-ஆக மாற்ற வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளதை எந்த அடிப்படையில் மாநில அரசு





ஒப்புக்கொண்டிருக்கிறது? 2015-2016-ல் உள்ள 14.58 சதவிகித மின் இழப்பை 2018-2019 ஆம் வருடத்திற்குள் 13.50 சதவிகிதமாகக் குறைக்க வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே உட்கட்டமைப்பை மேம்படுத்த மத்திய அரசு நிதி வழங்க வேண்டும் என்ற தமிழக அரசினுடைய கோரிக்கை ஏற்கப்பட்டதா? அதுபற்றி ஏன் உதய் திட்ட ஒப்பந்தத்தில் இடம் பெறவில்லை? உட்கட்டமைப்பை மேம்படுத்தாமல் மின் வாரியத்தில் உள்ள உதவி கோட்டப் பொறியாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள், கோட்டப் பொறியாளர்கள், மேற்பார்வை பொறியாளர்கள், தலைமை பொறியாளர்கள்மீது மின் இழப்பீட்டைக் குறைக்காததற்கு responsibility fix செய்வது எந்த வகையில் நியாயமாக இருக்க முடியும்?

மின் இழப்பீடு அடிப்படையில் ஒவ்வொரு Engineer-னுடைய செயல்பாட்டை எடை போட்டு அவர்களுக்கு ஊக்கத் தொகை அல்லது தண்டனை வழங்கப்படும் என்று ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளதில் எப்படி நியாயம் இருக்க முடியும்?

இவை ஒருபுறமிருக்க, உதய் திட்டத்திலே கையெழுத்துப் போடுவதால் 11,000 கோடி ரூபாய் வரையிலே தமிழக அரசுக்கு சேமிப்பாக இருக்கும். மத்திய மின் துறை அமைச்சரே கூறியிருக்கிறார். அதனால், ஏற்கெனவே உயர்த்திய மின் கட்டணத்தை குறைத்து, மக்களுக்கு பயன் அளிக்கக்கூடிய வகையிலே முயற்சியை இந்த அரசு எடுக்குமா என்று நான் கேட்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-45

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இந்த உதய் திட்டத்தில் சேருவதற்கு அ.தி.மு.க. அரசு சொன்ன காரணங்கள் அனைத்தையும் மத்திய அரசு ஏற்றுக்கொள்ளவில்லை என்பதுதான் தெளிவாகத் தெரிகிறது. ஆகவே, நான் கேட்க விரும்புவது, உதய் திட்டத்திலே சேர்ந்தால் மின் பயனாளிகளுக்கு, மின் வாரிய ஊழியர்களுக்கு, குறிப்பாக தமிழகத்திற்கு என்ன பயன் என்பதை விளக்கிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதில் ஒரு கருத்து தவறான கருத்து. அதாவது, உதய் திட்டத்தில் சேருவதற்கு முன்பாகவே மின் கட்டணம் உயர்த்தப்பட்டது. உங்களுடைய ஆட்சிக் காலத்தில் மின் கட்டணம் உயர்த்தப்பட்டது. ஒத்துக்கொள்கிறீர்களா இல்லையா? (மேசையைத் தட்டும் ஒலி) 1,600 கோடி ரூபாய் அளவுக்கு மின்கட்டணத்தை உயர்த்தினீர்கள். அதே அளவில்தான் நீங்கள் ஏகப்பட்ட கடனை விட்டுவிட்டுச் சென்றுவிட்டீர்கள். புதிய மின்நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும். அதற்காக சிறிய அளவில் அம்மா அவர்கள் அந்தக் காலத்திலே ஏற்படுத்தினார்களேயொழிய வேறு அல்ல. உதய் திட்டத்தை நவம்பர் மாதம் 2015-ல்தான் அவர்கள் அறிமுகப்படுத்துகின்றார்கள். நாம் கையெழுத்துப் போட்டது இப்பொழுது. ஆனால், மின் கட்டணம் அப்பொழுது ஏற்றியதற்கும், இப்பொழுதிற்கும் என்ன சம்பந்தம்? மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தவறாக அந்தக் கருத்தைச் சொல்கின்றார்கள். அதனால் அதைத் தவறு என்று நான் சொல்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது ஒன்று.

மின் இழப்பைக் குறைக்க வேண்டுமென்பதற்காக. Smart meter வைத்தார்களென்று சொன்னால், நமது அலுவலகத்திலிருந்தே எந்த அளவுக்கு உபயோகப்படுத்தியிருக்கின்றார்கள் என்று கணக்கெடுத்துக் கொள்ளலாம். அதற்காகத்தானேயொழிய smart meter வைப்பதற்கும், விவசாயத்திற்கும், விசைத் தறிகளுக்கும் இலவச மின்சாரம் இரத்தாகிவிடும் என்ற கருத்துக்கும் சம்பந்தமில்லை. கைத்தறிக்கு 200 யூனிட் மின்சாரமும், விசைத் தறிக்கு 750 யூனிட் மின்சாரமும் தொடர்ந்து விலையில்லாமல் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே கொடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சிகள் அதைப்பற்றி கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, விவசாயிகளுக்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் meter வைக்கமாட்டோம் என்பதுதான் அம்மா அவர்கள் போட்ட condition. அதனால் விவசாயிகளுக்கு மீட்டர் வைக்கமாட்டோம். அவர்களுக்கு தொடர்ந்து இலவச மின்சாரம் வழங்கப்படும். அதேபோல, குடிசைகளுக்கும் தொடர்ந்து இலவச மின்சாரம் வழங்கப்படும்.





அதுமட்டுமல்லாமல், நீங்கள் அந்த ஷரத்திலேயே, அந்த ஒப்பந்தத்திலேயே பார்ப்பீர்களென்று சொன்னால், அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள், 24x7 என்று போட்டிருப்பார்கள். ஆனால், அது தமிழகத்தினுடைய ஒப்பந்தத்தில் மட்டும்தான் இருக்கும். அனைத்து வீடுகளுக்கும் 100 யூனிட் மின்சாரத்தை தமிழகம் மட்டும்தான் இலவசமாக வழங்கியது (மேசையைத் தட்டும் ஒலி) என்ற ஷரத்தும் அதில் இருக்கும் என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பார்த்துக்கொள்ள வேண்டும்.

இன்னொன்று, 11,000 கோடி ரூபாய் இலாபம் வர இருக்கின்றது; Savings வர இருக்கின்றது. அதற்காக மின் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். அதற்குத்தான் நான் ஏற்கெனவே சொன்னேன். மாநில அரசு மின் வாரியத்திற்குக் கொடுக்கின்ற அந்த subsidy-ஐக் குறைப்பார்கள். 2,500 கோடி ரூபாய், 3,000 கோடி ரூபாய் அளவிலே குறைப்பார்கள். அப்படி குறைக்கின்றபோது மாநில அரசுக்கும் வட்டிச் சுமை குறைகின்றது. மின் வாரியத்திற்கும் இதெல்லாம் குறைகின்றபோது, இன்னும் இரண்டு ஆண்டுக் காலத்திற்குள் நிச்சயமாக மின் வாரியம் இலாபத்திற்குக் கொண்டு வரப்படும் என்று நானும் சொல்லியிருக்கின்றேன். நிச்சயமாக 2 ஆண்டுக் காலத்திற்குள் மின் வாரியத்தை இலாபத்திற்குக் கொண்டு வருவோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, 2015-2016 ஆம் ஆண்டு 12,750 கோடி ரூபாய் loss இருந்தது. இந்த ஆண்டு என்ன ஆகியிருக்கிறதென்று சொன்னால், 5,730 கோடி ரூபாய் அளவுக்குக் குறைந்திருக்கின்றது. வரவிருக்கின்ற காலத்தில் 3,000 கோடி ரூபாய் ஆகும். இன்னும் இரண்டு ஆண்டுக் காலத்திற்குள் மின் வாரியம் முழுமையாக இலாபத்திற்குக் கொண்டு வரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இலவச மின்சாரம் தொடர்ந்து அனைவருக்கும் வழங்கப்படும். மாண்புமிகு அம்மா அவர்களின் அனைத்துத் திட்டங்களையும் தொடர்ந்து நடத்துவோம் என்பதில் எதிர்க்கட்சித் தலைவருக்கு எந்த சந்தேகமும் வேண்டாம். பல கூட்டங்களிலேகூட நீங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். “விசைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரத்தை நிறுத்திவிடுவார்கள்; விவசாயிகளுக்கு நிறுத்திவிடுவார்கள். இலவச மின்சாரமே இல்லாமல் போய்விடும்; 3 மாதத்திற்கு ஒரு முறை கட்டணத்தை ஏற்றுவார்கள்” என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். இது எதுவுமே நடக்காது. அரசியலுக்கு வேண்டுமென்றால் நீங்கள் இலாபம் சம்பாதித்துக் கொள்ளலாமேயொழிய (மேசையைத் தட்டும் ஒலி) உறுதியாக

[திரு. பி. தங்கமணி] [2017 ஜனவரி 31

இருக்காது. (குறுக்கீடுகள்) இருந்தால் சொல்லுங்களேன். (குறுக்கீடுகள்) அதில் இல்லையென்றால் நீங்கள் அதை எங்களிடம் கேட்க வேண்டும். மின் கட்டணத்தை ஏற்றுவோம் என்று அதில் இருக்கிறதா? நீங்கள் அதைச் சொல்லுங்கள். மின் கட்டணத்தை ஏற்றுவோம் என்று அதில் இருக்கிறதா? (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் அதைச் சொல்லுங்கள். நான் சொல்வது எதுவுமே அதில் இல்லை என்று சொல்கிறீர்கள். ஆனால் நீங்கள் சொல்வதெல்லாம் அதில் இருக்கிறதா என்பதை மட்டும் தயவுசெய்து நீங்கள் அவைத் தலைவரிடம் காட்ட வேண்டும். (குறுக்கீடுகள்) நீங்கள் எப்படிச் சொல்கிறீர்கள்? எந்த அடிப்படையில் சொல்கிறீர்கள்? எந்த ஆதாரத்தோடு சொல்கிறீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலையிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 110-வது விதியைப் பயன்படுத்தி ஓர் அறிக்கையை இங்கே படித்தார்கள். 110-வது விதியின்கீழ் அறிக்கையைப் படித்ததற்குப் பிறகு வாழ்த்திப் பேசுவதற்குத்தான் வாய்ப்பு உண்டு. அதில் இருக்கக்கூடிய பிரச்சினைகளைச் சுட்டிக் காட்டுவதற்கு வாய்ப்பில்லை என்ற நிலையிலே எங்களுக்குப் பேச வாய்ப்பில்லாமல் போய்விட்டது. இருந்தாலும் இந்த நேரத்தைப் பயன்படுத்திக்கொண்டு, அதையொட்டி ஒரு கருத்தை நான் எடுத்து வைக்க விரும்புவது, அவர் அறிவிக்கிறபோது பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய, தாக்கப்பட்டிருக்கக்கூடிய அந்த மீனவர்களுக்கு உதவி செய்யக்கூடிய வகையிலே அவர்களுடைய உடைமைகளுக்கு, அதையும் தாண்டி அவர்களுக்கு மீன் மார்க்கெட் கட்டித் தரக்கூடிய அந்த நிலைகளையெல்லாம் ஏற்படுத்தித் தரவிருக்கிறோம்; நிவாரண உதவிகளெல்லாம் வழங்கவிருக்கிறோம் என்ற உறுதியைத் தந்திருக்கிறார்கள்.

பிற்பகல் 2-50

நான் கேட்க விரும்புவது என்னவென்றால், **சில பேருக்கு fracture ஆகியிருக்கிறது. தலையிலே அடிபட்டு, மருத்துவமனையிலே சில பேர் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படி பல பேர்--

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2017 ஜனவரி 31] [திரு. மு.க. ஸ்டாலின்]

மீனவ சமுதாயத்தைச் சேர்ந்த தாய்மார்கள், குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் அங்கேயிருக்கக்கூடிய தோழர்களெல்லாம் ** எனவே அவர்களுக்கும் உரிய நிவாரணத் தொகையை இந்த அரசு வழங்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், ஆளுநர் உரையிலே இந்த ஆண்டுக்கான கொள்கை அறிவிப்பு எதுவும் இல்லாதது மிகவும் வருத்தத்திற்குரியது. கொள்கை அறிவிப்புக்களின் மூலம்தான் நாட்டை வாட்டும் பிரச்சினைகளுக்கு நல்ல தீர்வு காணமுடியும். 54 பக்கங்களைக் கொண்டிருக்கக்கூடிய இந்த ஆளுநர் உரையிலே, ஒரிடத்தில், தொடக்கத்திலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. 'உங்களைத் தேர்ந்தெடுத்துள்ள மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்திட, புதிய வழிகளையும், புதுமையான வாய்ப்புகளையும் இந்தப் புத்தாண்டு உங்களுக்கு அளிக்கும் என நம்புகிறேன்' என்று ஒரு முக்கியமான வாசகம் அதில் இடம் பெற்றிருக்கிறது. மக்களின் எதிர்பார்ப்புகள் என்பது மக்கள் சந்தித்துவரும் பிரச்சினைகள்தான். அந்தப் பிரச்சினைகள் சிலவற்றைத்தான் நான் தொடக்கத்திலேயே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அவற்றிற்குத் தீர்வு காண தேவையான புதிய வழிகளும், புதுமையான வாய்ப்புகளும் இந்த ஆளுநர் உரையிலே இடம் பெறவில்லை. கொள்கை அறிவிப்போ அல்லது மக்கள் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய திட்டமோ எதுவும் இல்லாமல் ஒரு சடங்காக இந்த ஆளுநர் உரை ஆற்றப்பட்டிருக்கிறது. இந்த ஆளுநர் உரை ஒரு கம்பெனியின் ஆண்டறிக்கையைப்போல அமைந்திருக்கிறது. ஏராளமான காரியங்கள் நடப்பதைப்போன்ற ஒரு பிரம்மையை ஏற்படுத்தக்கூடிய முயற்சியிலே நீங்கள் ஈடுபட்டிருக்கிறீர்கள். சுருங்கச் சொல்லவேண்டுமென்று சொன்னால், ஆளுநர் உரை கானல் நீர்; கண்ணுக்குப் புலப்படாத பொருட்காட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) நள்ளிரவில், நடுக்கடலில், தனிப் படகில் திக்குத் தெரியாமல் திணறிக் கொண்டிருக்கக்கூடிய ஒருவருக்கு தாகம் ஏற்பட்டது. குடிப்பதற்கோ தன்னிடம் தண்ணீர் இல்லை. அவர் புலம்புகிறார். எப்புறமும் தண்ணீர் சூழ்ந்திருக்கக்கூடிய இந்த இடத்தில் தனது தாகத்தைத் தணிப்பதற்கு குடிநீர் ஒரு சொட்டுக்கூட இல்லாமல் போனதே என்று கலங்குகிறார். அந்த நிலையில்தான் தமிழகம் தவித்துக்கொண்டிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்று கூறி, என் உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம். (குறுக்கீடுகள்)

[2017 ஜனவரி 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சற்று பொறுங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல அவர் நாளைக்கு நிறைவாக சில விவரங்களை சொல்லவிருக்கிறார் என்று சொன்னாலும்கூட, அவ்வப்போது குறுக்கிட்டு பதில் சொல்ல முடியாமல் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரைப் பேச அனுமதிக்க வேண்டிய சூழ்நிலை இருந்ததனாலும், பத்திரிகைகளிலே தவறான தகவல்கள் வந்துவிடக் கூடாது என்பதற்காகவும் சில மாண்புமிகு அமைச்சர்கள் விளக்கம் சொல்ல என்னிடத்திலே அனுமதி கேட்டிருக்கிறார்கள். அதற்காக நான் அவர்களுக்கு அனுமதியளிக்கிறேன். மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அத்திக்கடவு-அவினாசி திட்டத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். குறுக்கிட வேண்டாம் என்பதற்காகவும், அவர் பேசி முடித்த பிறகு பதில் சொல்லலாம் என்றும்தான் நான் காத்திருந்தேன். இந்தத் திட்டம், கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்ட விவசாய மக்களுடைய வாழ்வாதாரப் பிரச்சினை. அத்திக்கடவு-அவினாசி கால்வாய்த் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை 2011-2012 ஆம் ஆண்டு விலை விகிதப்படி ரூ.1,862 கோடிக்குத் தயாரிக்கப்பட்டு, மத்திய அரசின் வெள்ள மேலாண்மைத் திட்டத்தின்கீழ் நிதியுதவி பெறுவதற்காக மத்திய நீர்க் குழுமம், கோயம்புத்தூருக்கு அனுப்பப்பட்டது. இத்திட்டம் வெள்ள மேலாண்மைத் திட்டத்தின் வழிகாட்டுதலின்படி அமைய வாய்ப்பில்லை எனவும், இத்திட்டத்தைப் பாசனத் திட்டமாக மாற்றி அமைக்கலாம் எனவும் மத்திய நீர்க் குழுமம் தெரிவித்தது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி, இடைக்கால நிதிநிலை அறிக்கை, 2016-2017-ல் நீர்ப்பாசனம், நிலத்தடி நீர் செறிவூட்டுதல் மற்றும் குடிநீர் வழங்கல் திட்டமாக அத்திக்கடவு-அவினாசி திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்திற்காக 1,694 ஏக்கர் பட்டா நிலத்தையும், 28 ஏக்கர் வன நிலத்தையும் கையகப்படுத்தும் முதற்கட்டப் பணிகளை மேற்கொள்ள ரூ.3.27 கோடி அளவிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. இத்திட்டத்திற்கு திருத்திய மதிப்பீடு ரூ.3,523 கோடி அளவிற்கு



2017 ஜனவரி 31] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

தயாரிக்கப்பட்டு மத்திய நீர்க் குழுமத்திற்கு அனுப்பப்பட்டது. வனத் துறை மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சகத்தினுடைய ஒப்புதல் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அந்த அனுமதி கிடைத்த பிறகு, இந்த முதற்கட்டப் பணிகள் துவங்கும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

*பிற்பகல் 2-55*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, குடிநீர்ப் பிரச்சினையைப்பற்றிச் சொன்னார்கள். அதாவது, தமிழகத்திலே தற்போது கடுமையான வறட்சி நிலவுகிறது என்பது அனைவருக்கும் தெரியும். 100 வருடங்கள் இல்லை, 142 வருடங்களுக்கு முன்னால்தான் இதுபோன்ற வறட்சி வந்தது. மொத்தமாக 62 சதவிகிதம் மழைப் பொழிவு குறைவு. இன்னும் சில மாவட்டங்களில் பார்த்தீர்கள் என்றால், குறிப்பாக, நாமக்கல் மாவட்டத்தில் 1,200 அடி ஆழம்வரை போர்வெல் போடப்படுகிறது. திருப்பூர் மாவட்டத்தில் 1,150 அடி ஆழம்வரை போர்வெல் போடப்படுகிறது. இப்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு பிரச்சினைகள் இருக்கின்றன. இது இயற்கையாக வரக்கூடிய பிரச்சினை. இந்த இயற்கையாக வரக்கூடிய பிரச்சினையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எப்படி எதிர்கொள்கிறது என்றுதான் நீங்கள் பார்க்க வேண்டும். இதற்கு முன்பு ‘சுனாமி’, ‘தானே’ புயல், கடும் மழை மற்றும் ‘வர்தா’ புயல் வந்தபோதும்கூட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு போர்க்கால அடிப்படையிலே நடவடிக்கை எடுத்திருப்பதை இன்றைக்கு அனைவரும் பாராட்டுகின்றார்கள்; பல நாடுகளும் பாராட்டிக் கொண்டிருக்கின்றன. நான் இதற்கு முன்பு பேசும்போதுகூட சொன்னேன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் கூட்டம் கூட்டப்பட்டு, தேவையான அளவுக்கு நிதி வழங்கப்பட்டிருக்கிறது. எங்கெங்கு பிரச்சினைகள் இருக்கின்றன. எங்கெங்கு நாம் போர்வெல் போட வேண்டும். எங்கெங்கு குடிநீர் பிரச்சினைகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் குடிநீர்

லாரிகள்மூலம் சப்ளை செய்யப்பட வேண்டும். எங்கெங்கு பைப் லைன் அமைக்க வேண்டும் என்று எல்லா வகைகளிலும் நடவடிக்கை எடுத்திருக்கின்றோம்.

அதேபோல, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, ஐந்தாண்டு காலமாக குடிநீருக்காக கிட்டத்தட்ட 21,000 கோடி ரூபாய் நிதியை ஒதுக்க நடவடிக்கை எடுத்திருக்கிறது. தி.மு.க. ஆட்சியில் குடிநீருக்காக வெறும் 7,000 கோடி ரூபாய்தான் ஒதுக்கியிருந்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் 21,000 கோடி ரூபாய் குடிநீருக்காக ஒதுக்கியிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 3 மடங்கு அதிகம்.

இதற்கு முன்பிருந்த தி.மு.க. அரசால் நாளொன்றுக்கு 4,945 மில்லி லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக, 6,875 மில்லி லிட்டர் குடிநீர் உயர்த்தி வழங்கப்பட்டது. அதாவது, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தைவிட நாளொன்றுக்கு 1,930 மில்லி லிட்டர் குடிநீர் கூடுதலாக வழங்கப்பட்டது. மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக, எவ்வளவு கடுமையான வறட்சி வந்தாலும்கூட பிரச்சினைகள் குறைவாக வந்தன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்காக திட்டம் போட்டு, குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும், உயர் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் தலைமையில் குழுவை நியமித்திருக்கின்றார்கள். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அமைச்சரை அனுப்பி, பிரச்சினையை தீர்த்திருக்கிறார். தேவையான நிதி வழங்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய அரசு, தொழில் முதலீட்டாளர்களுக்கு துரித ஒப்புதல் வழங்க, 'ஒற்றைச் சாளர முறையை' மேலும் வலுப்படுத்தி, தமிழ்நாட்டில் தொழில் துவங்குவதை எளிதாக்கிட உறுதி பூண்டுள்ளது.





அடுத்ததாக, இந்த அரசின் பாராட்டத்தக்க முன்முயற்சிகளால் ஒரே ஆண்டில் 25,020 கோடி ரூபாய் மொத்த முதலீடுகள் பெறப்பட்டதன் வாயிலாக, மாநிலத்தின்மீது முதலீட்டாளர்கள் கொண்டுள்ள நம்பிக்கை வெளிப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் கேட்டுக்கொண்டதன்படி—98 புரிந்துணர்வு ஒப்பந்தங்களுக்கு 3 முதல் 7 ஆண்டுகள்வரை கால அளவு இருக்கிறது. தற்சமயம் 1 வருடம் 7 மாதங்கள்தான் ஆகியிருக்கின்றன. இன்னும் 65 மாதங்கள் பாக்கி இருக்கின்றன. நிச்சயமாக 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்களும், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் போடப்பட்ட ஒப்பந்தங்கள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். படித்துப் பார்க்கும்போது எதிர்க்கட்சித் தலைவரின் பார்வைக்கு இது தெரியவில்லையா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரிடம் கேட்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரை, நல்ல பொறுப்புள்ள **என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே பேசுகின்றபோது குறிப்பிட்டார். **என்று சொன்னால், ** என்று பொருள்படும். எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமங்கலமான அந்த வார்த்தை வேண்டாம். அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடலாம். (குறுக்கீடுகள்) ** என்ற அந்த வார்த்தை தேவையா?

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)

இல்லை, மாண்புமிகு அமைச்சர் நான் விசாரித்தேன், எதிர்க்கட்சித் தலைவர் **என்றுதான் சொல்லியிருக்கிறார். அதில் ஒன்றும் இல்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2017 ஜனவரி 31

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர், என்னவென்று சொல்லுங்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **என்று அவர் குறிப்பிட்டார். அவர் பேசிக்கொண்டிருக்கும்போதே பல இடங்களில் **ஒவ்வொரு சொல்லை உள்ளே புகுத்திக்கொண்டே வந்தார். (குறுக்கீடுகள்) எனவேதான் சொல்கிறேன்.** என்பது ஆட்சேபணைக்குரிய, சொல்லக்கூடாத வார்த்தை. எனவே, **என்ற வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

*பிற்பகல் 3-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *எல்லோரும் உட்காருங்கள். Direct ஆக குறிப்பிடுகின்ற வார்த்தையாக இருந்தால் நீக்கலாம். அவர் indirect ஆகத்தான் **என்று கூறியிருக்கிறார். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவருடைய உரை குறித்து நீங்கள் ஒரு வார்த்தை கூறினீர்கள். அந்த வார்த்தையை நீங்கள் மாற்றிச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர், நீங்கள் அந்த வார்த்தையை மாற்றிச் சொல்லுங்கள். அதனைத் திருத்திச் சொல்லுங்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** ***என்று அவர் கூறியிருக்கிறார்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இல்லை, இல்லை. அது இல்லை.*

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** *** என்று அவர் குறிப்பிட்டார். அது அவைக் குறிப்பில் இருக்கிறது. ** என்று அவர் சொன்ன வார்த்தை அவைக் குறிப்பில் இருக்கிறது. அது ஆட்சேபணைக்குரியது. அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். அதை நீக்கினால், நானும் அந்த **என்னும்*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*



2017 ஜனவரி 31]

*வார்த்தையை வாபஸ் பெறுகிறேன். அதனை நீக்க வேண்டும். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அந்த மாதிரி பொருள்படும்படி அவர் கூறியிருந்தால், அதை நீக்குவதற்கு எனக்கு ஆட்சேபணை இல்லை. (குறுக்கீடுகள்) சரி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் எதிர்க்கட்சித் தலைவருடைய பேச்சை ** என்று சொன்ன அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ** என்று எதிர்க்கட்சித் தலைவர் சொன்ன வார்த்தையும், ** என்று மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் சொன்ன வார்த்தையும், இரண்டும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், உட்காருங்கள்.*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவரை முற்றுகையிட்டனர்.)*

*பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (1-2-2017) புதன்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.*

*பின்னர், பேரவை பிற்பகல் 3-03 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*14. 2015-2016 ஆம் ஆண்டிற்கான சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன.] (தமிழ், ஆங்கிலம்)*

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

-ஏதுமில்லை-

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*